
# திருக்கோயில்

ஜூலை & ஆகஸ்ட் 1995
விலை ரூ. 6-00





காஞ்சி மடாதிபதிகள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்ற திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் ஆலயத் திருக்குட நீராட்டு விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திருமிகு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமிகு கா. ப. பட்டாபிராமன் அவர்களும், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



முகப்பு :
உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை—600 043,
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :
கவிஞர் டாக்டர் **த. அமிர்தலிங்கம்,** M.A.,Ph.D.

| மாலை : 37 | திருவள்ளுவர் ஆண்டு 2026 யுவ ஆண்டு ஆடி-ஆவணி 1995 ஜூலை-ஆகஸ்ட் விலை ரூ. 6—00 | மணி : 7 & 8 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்,

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்.

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | .. | ரூ. | **18-00** |
| ஓர் ஆண்டு | .. | ரூ. | **36-00** |
| ஆயுள் | .. | ரூ. | **300-00** |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்,
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

## பொருளடக்கம்

அருள்—இருள்—பொருள்
—திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.

திருமந்திரத்தில் சைவ சித்தாந்தம்
—திருமந்திரச் செம்மல்
—டி.வி. வெங்கட்டராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

குலசைஞானி
—இளையஞானி

காரமடை அரங்கநாத சுவாமி திருக்கோயில்
—டாக்டர் சுப்பிரமணியம்

திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பு
—பெரும்புலவர் மு. சுந்தரேசம் பிள்ளை

வீரபாகுத்தேவர் திருத்தலம்
—நல்லாசிரியர் வெ. சுந்தரம் எம்.ஏ.,

குடும்பம் சிறக்க வழிகள்
—தவத்திரு வேதாத்திரி மகரிசிகள்

தெய்வமணம் கமழும் திருவாமூர்
—வ. ஜோதி எம்.ஏ.,

ஆழ்வார்களின் அறிவுரைகள்
—சௌரிராஜ திருவேங்கடத்தான்

சிங்கப்பிரான் பெருமை
—புலவர் வன்னியப்பன்

ராமானுஜரும் அனந்தாழ்வாரும்
—புலவர் ஆ. சுப்பிரமணியன்

சமரசநெறி பரப்பும் இந்துமதம்
—கவிஞர் காசி எம்.ஏ.

தோணி—வி. இராகவன்


கனவு—ஒரு நல் ஆய்வு
—சு. இராஜராஜன் எம்.ஏ.,

அனைத்துமான ஆதிமூலம்
—புலவர் ஏ. பரந்தாமன்

மதுரை மீனாட்சி—புலவர் ச. சோமசுந்தரம்

குருவின் பெருமை
—மயிலை தவத்திரு சிவஜோதி சிவசக்தி அம்மையார்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



# அருள்-இருள்-பொருள்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-34.

அருளைப் பெற்றால் பொருள் கிடைக்கும்
பொருளைப் பெற்றால் அருள் குறையும்
அருள் குறைந்தால் இருள் சூழும்
இருள் சூழ்ந்தால் இன்னல்கள் நீளும். (1)

இருள்கெட அருள் கிடைக்கும் என்றிடுவார்
இருவினை நீங்கினால் இருள்கெடும் என்றிடுவார்
திருவருளால் இருவினை நீங்கிடும் என்றிடுவார்
குருவருளால் திருவருள் கிடைத்திடும் என்றிடுவார். (2)

அருள் கேட்டேன் பொருளைக் கொடுத்தாய்
பொருளைப் பெற்றேன் புண்ணியம் செய்தேன்
அருளுக்கான அருளைப்பெற ஆசையாக முயல்கின்றேன்
பொருளுக்கான அருளைத் தவிர்த்திடக் கேட்கின்றேன். (3)

எண்ணத்தின் வண்ணத்தை மதிப்பீடு செய்திட்டேன்
எண்ணவே பயமாக இருக்கிறது என்நிலைமை
அகவிருளை அகற்ற ஆவன செய்யவில்லை
ஆவன செய்வதற்கு அருள் தந்திடுவாய். (4)

இன்பமும் துன்பமும் துய்க்கச் செய்திடுவாய்
இன்னும் எத்தனை நாள் இருக்கச் செய்திடுவாய்
எமபயம் என்று நீங்கிடச் செய்திடுவாய்
எப்பொழுது உன்னுடன் சேர்ந்திடச் செய்திடுவாய். (5)

# திருமந்திரத்தில் சைவசித்தாந்தம்

டி. வி. வெங்கட்டராமன், இ.ஆ.ப., (ஓய்வு)
முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்கள், சென்னை.

சிவபெருமானின் திருவருள் பெற்ற நான் மறை யோகிகளில் ஒருவரான திருமூலதேவ நாயனார் அருளிச் செய்த திருமந்திர மாலை சைவப் பெருமக்கள் போற்றி வணங்கும் பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த தத்துவ உண்மைகளை விளக்கும் சிறந்த சாத்திர நூலாகவும், சைவ நெறியில் நின்று சிவமாம் பரம்பொருளைப் பற்றி சிந்தித்து, வழிபட்டு, சிவமாம் தன்மையைப்பெறுவதற்கான சாதனங்கள் கொண்ட ஓர் ஒப்பற்ற நூலாக திகழ்கின்றது. அதுமட்டுமின்றிச் சிவயோக முடிவாகிய சிவஞான அனுபவம் அடைவதற்கான பாதையைச் சுட்டிக்காட்டும் தனிச் சிறப்பு பெற்றதாயும் விளங்குகின்றது. அத்துடன், சிவஞானத்தின் வாயிலாக கிடைக்கப் பெறும் அரும்பெரும் உணர்வுகளுக்கு இலக்கணமாகவும் திருமந்திரம் அமைந்துள்ளது.

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் திருவாக்கின்படி திருமூலநாயனார் இந்நிலவுலகில் பன்னெடுங்காலம் சிவயோகத்தில் அமர்ந்து உலகம் உய்ய சிவயோக, சிவலோக, சிவஞான பாதைகளுக்கான உபதேசங்களையெல்லாம் அருளிச் செய்தார் என்பதற்குத் திருமந்திரத்திலேயே சான்றுகள் கிடைக்கின்றன.

''தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் ஏழுகோடி யுகம்இருந் தேனே''

(பாடல்..74)

'இருந்தேன்இக்காயத்தே எண்ணிலிகோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''

(பாடல்...80)

திருமூலர் தமது ஒப்பற்ற யோக சாதனையாலும், தவ வலிமையாலும் உடம்பினைப் பல் யாண்டுகள் பாதுகாத்துக் கொள்வதற்கான உபாயங்களை நன்கு அறிந்து கொண்டதன் காரணமாக அவர்கள் நெடுங்காலம் தரணியிலே வாழ்ந்திருந்து, முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையிலே இறைவன் தந்த ஆகமப்பொருளை இப்புவியில் பிறந்த மக்கள் அனைவரும் பிறவிப் பயனை அடையும் பொருட்டு திருமந்திர மாலையினை அருளிச் செய்தார் என்பதற்குப் பின்வரும் திருமந்திரங்களையும் சான்றாகக் கொள்ளலாம்;

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''

(பாடல்....724)

''உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''

(பாடல்...725)

திருமூலருடைய காலம் இன்றும் சரிவர வரையறுக்கப்படாத காரணத்தினால் திருமந்திரத்தில் காணப்படும் பல சமய ஆன்மீகக் கருத்துக்கள், உணர்வுகள் எத்துணை பழமையானவை என்று கூற இயலவில்லை. குறிப்பாக பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களுடைய மிகச் சிறந்த பெரியபுராண ஆய்வு நூல் திருமந்திரம் எவ்வாறு பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டது என்கின்ற வினாவை எழுப்புகின்றார். பக்தி இயக்கத்தின் தலைவர்களாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்களுடைய தோத்திரப் பகுதிகளுக்கிடையே திருமந்திரம் வைக்கப்பட்டுள்ளது எவ்வாறு என்று மேலும் ஆராய வேண்டும் என்கிற கருத்தையும் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் முன் வைக்கின்றார்கள். சைவ சமய அறிஞர்கள் இந்தப் பிரச்சினையை மேலும் ஆராயலாம். அதற்கான வாய்ப்புகள் நிறைய உண்டு.



**நம் அறநிலையத்துறை அலுவலக வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு விஜய விநாயகருக்கு விநாயக சதுர்த்தியன்று சிறப்பாக அபிசேகமும் வழிபாடும் நிகழ்த்தப்பெற்று சந்தனக்காப்பு அலங்காரம் நிகழ்த்தப்பெற்றது. சந்தனக் காப்பு அலங்காரத்துடன் திகழும் அருள்மிகு விஜய விநாயகரின் திருக்கோலம் இங்குக் கண்டு மகிழலாம்.**

ஆனால், நம்மைப் போன்றவர்களைப் பொறுத்தவரை பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் கூறுவதைப் போலவே திருமூலரை நம்பிரான் என்று போற்றி சுந்தரர் பெருமான் தொண்டர் குழுவிலும் அவரைச் சேர்த்துக் கொள்கின்றார் என்பது நமக்கு ஒரு ஆழ்ந்த அமைதியைத் தருகிறது. எந்த ஒரு சமயத்திற்கும், சாத்திரத்திற்கும், தோத்திரத்திற்கும் சமமான பங்கு உண்டு. ஒன்றின்றி மற்று இல்லை. முழுமையான சமயம் தோத்திரத்திற்கும் சாத்திரத்திற்கும் போற்றத்தகு பங்கினை அளிக்கிறது.

சைவம் போன்ற தொன்மை வாய்ந்த சமயம் அளப்பரிய காலம் வளர்ந்து வந்ததன் விளைவாக பல்வேறு நீரோட்டங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்கின்றது. அறிவுக்கெட்டா பரம்பொருளை காண விழையும்போது மனதிலே ஏற்படும் பயம், வியப்பு, பக்தி, அன்பு ஆச்சர்யம் போன்ற உணர்வுகள் கவிதைகளாகவும், பாடல்களாகவும், ஆற்றுப் பெருக்கத்தை போல் வெளிவருபவைகளாக சமயத்தின் தோத்திரப் பகுதிகளுக்கு அடிக்கால் நாட்டுகின்றன. அதே நேரத்தில் மனிதனின் தனிச் சொத்தாகிய பகுத்தறிவும் பணியாற்றத் தொடங்கி விடுகின்றது. மனதிலே உருவாகும் எண்ண அலைகளைப் பாகுபடுத்தி அவற்றின் தன்மையை ஆராய்ந்து தத்துவ வடிவம் அளித்து பல்வேறு கருத்துக்களிடையே உரிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அளிக்கும் வகையில் மனிதனின் பகுத்தறிவு தனது பணியினை மேற்கொள்கிறது. இப்பணியின் முடிவே சாத்திரமாகும். தோத்திரங்களுக்கிடையே சாத்திரங்கள் தோன்றுவது இயற்கையே தவிர வேறொன்றில்லை. சைவ சமயத்திற்கு நாயன்மார்கள் இலக்கியம் மட்டும் அளிக்கவில்லை. இலக்கணத்தையும் தந்துள்ளார்கள். ஏன்! மூவர் முதலிகளின் இலக்கியத்தின் முடிவே இலக்கணமாகக் கருதப்பட வேண்டும். இந்த நிலையிலிருந்து நோக்கும்போது திருமந்திரம் தந்த திருமூலத்தேவர் சைவ சமயத்திற்கு தனித் தன்மைவாய்ந்த சித்தாந்தத்தை கொடுத்துள்ளார்கள் என்றே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சித்தாந்தம் என்பது முடிந்த முடிவினைக் குறிக்கும். சைவம் என்பது சிவத்தொடர்புடையது எனப் பொருள்படும். 'சைவம் சிவத்துடன் சம்பந்தமாவது'-திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

''சைவம் சிவத்துடன் சம்பந்தமாவது
சைவம் தனையறிந் தேசிவம் சாருதல்
சைவம் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தஞ் சாயுச் சியமே''.

*(ஐந்தாம் தந்திரம்-சாயுச்சியம்—1)*

அதாவது சைவமாவது சிவமாம் பரம்பொருளுடன் பொருந்தி நிற்றலாம். சிவ தத்துவத்தை உணர்ந்து அதன் மையமாக விளங்கும் சிவத்தைப் பற்றி ஒன்றி நிற்றலாம். சீவன் தன்னிடத்திலேயே சிவமானது ஒளிவிட்டு அமைந்திருப்பதை உணர்ந்து கொள்வதாம். இந்த நிலையில் கிடைக்கும் பேறே சிவானந்தப் பேறாகும் என்பதையும் அறிந்து கொள்வதாம். எனவே, சைவ சித்தாந்தம் உயிர்கள் சிவத்துடன் சம்பந்தப்படுவதால் அடையக்கூடிய பெருநெறியை விளக்குகின்றது. சிவபரம் பொருள் உயிர்கள் மேல் கொண்ட பெரும் கருணையின் காரணமாக அருளாளர்கள் மூலம் அருளிச் செய்த ஞானத் தொகுதியே சைவ சித்தாந்தமாகுமெனவும் கூறலாம். இறைவன், உயிர், அவற்றினைப் பற்றி நிற்கும் தளை, இவற்றிற்கும் இடையே உள்ள தொடர்பு போன்றவற்றின் தன்மையை ஆய்ந்து, அத்தளையின் தன்மையை விளக்கி மாய இருளை அகற்றி சீவன் சிவனைச் சாரும் முறைகளைப் போதிப்பதே சைவ சித்தாந்தமாகும்.

பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் உயிர் நாடியாக விளங்குகின்றன. பத்தாவது திருமுறையாகிய திருமந்திரம் சைவ சமயத்திற்கான சித்தாந்தத்தை தெளிவாக எடுத்துத் தருகின்றது என்பதும் அறிஞர்களால் ஏற்றுக்

கொள்ளப்பட்டதாகும். இறைவன் இறைவிக்கு அருளிச் செய்த சிவாகமங்களின் பொருளை, சாரத்தை திருமூலர் தமிழில் வகுத்துத் தந்தார் என்பதற்கான சான்றுகள் திருமந்திரப் பாடல்கள் மூலமாகவே கிடைக்கின்றன (மந்திரம் 77, 81 போன்றவை).

சிவாகமங்கள் உயிர்களைப் பற்றியும், உயிர்களைப் பந்திக்கின்ற பாசத்தின் தன்மையைப் பற்றியும், பாசத்தை நீக்கி உள்ளொளி பெருக்கி இறைவனுடைய திருவடியைச் சார்தல் பற்றியும் விளக்குகின்றன. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாக நான்கு பாதங்களாய் வகுத்துப் பேசப்படுகின்றன. ஆகவே, அறியப்படும் பொருளைப் பற்றியும், அறிகின்ற அறிவின் தன்மையையும், அறிகின்றவனையும், அவனைச் சுற்றியுள்ள இருளாகிய மாயையின் கூட்டத்தைப் பற்றியும், அதனூடே விளங்கும் சிவத்தைப் பற்றியும் சிவசொரூபத்தின் பிரபாவத்தைப் பற்றியும் திருமந்திர மாலையில்தாம் முற்றிலும் விளக்கி விட்டதாகத் திருமூலர் கூறுகின்றார். அதுவே சைவ சித்தாந்தப் பொருளாகும்.


'ஞேயத்தை ஞானத்தை ஞான உருவத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை யச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட்டேனே''
(பாடல்...90)

அதாவது திருமூலர் அருளிய திருமந்திரம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையினையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் விளக்குவதாக அமைந்துள்ளது. எனவேதான் சேக்கிழார் பெருமான் திருமூலரைக் குறித்து 'நலஞ்சிறந்த ஞானயோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழித் திருமூலத்தேவர்'' என்று வாழ்த்துகிறார். இந்நூலிலுள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கு சிவ ஞானம் பெற விரும்புவோர்க்குத் தேவையான தகுதியைப் பற்றியும் அதற்கான சாதனங்களையும் விளக்கி விடுகின்றது. ஆறு முதல் ஒன்பது வரையிலுள்ள தந்திரங்கள் ஞானத்தை பற்றியும், ஞானம் பெற்றோருடைய அனுபவம் பற்றியும், அனுபவம் பெற்றோர் எய்தும் பேற்றினைப் பற்றியும், அவர்களுடைய உலக வாழ்வின் பெருமையைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறது. இவற்றிற்கு மையமாக நிற்பது ஐந்தாவது தந்திரம். இதில்தான் சைவ சித்தாந்த உண்மைகள் பேசப்படுகின்றன. சரியையாதி நாற்பாதங்கள் விளக்கப்படுகின்றன. அவற்றை மேற்கொள்வதன் விளைவாக பெறப்படும் சம்பந்தத்தின் தன்மை தெளிவாக்கப்படுகிறது.

பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி வீடு பேறு பெறுதல் என்பது சிவனை அடைவதாகும், சிவமாம் தன்மையைப் பெறுவதாகும். எல்லாவற்றிற்கும் மேலானவன் அவனே. இரண்டவன் இன்னருள் (1) சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை. அவனோடொப்பார் இங்கு யாவருமில்லை., (5) அவனையொழிய அமரருமில்லை, (6) தன்னை அப்பாயெனில் அப்பனுமாயுளன் (7) அவன் தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்; சேயினும் நல்லன்; தாயினும் நல்லன், (8) அவன் கடந்து நின்றான் எங்கும் கண்டு நின்றானே, (14) பிறப்பிலி பிஞ்ஞகன், பேரருளாளன்; இறப்பிலி யாவர்க்கும் இன்பமருளும் துறப்பிலி, (25) ஒப்பிலி வள்ளல், ஊழி முதல்வன், (36) இத்தகைய சிவமாகிய பரம்பொருளைச் சூடியும், நெஞ்சிடை வைத்தும் பிரான் என்று பாடியும் பன்மலர் தூவி பணிந்து நின்று ஆடியும், அமரர் பிரான் என்று நாடியும், வாழ்த்தவும் செய்வார்க்கு ஈசன் அருள் நிச்சயம் கிடைக்கப் பெறும். ஐயமில்லை.

இறைவனைப் போல் உயிருக்கும் ஆக்கமும் அழிவும் இல்லை என்பது சைவக்கொள்கையாகும். 'பதியினைப் போல் பசு பாசம் அனாதி'. உடல், செல்வம், இளமை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு அவற்றிற்காக உழைப்பவன் ஞானம் பெறத் தகுதியற்றவன். இவற்றின் நிலையாமையை உணர்ந்து எல்லாவற்றிற்கும் அடிப்படையான இறைவன் மீது நீங்காத பற்று வைப்பதே ஞானம் பெறுவதற்கு முதற்படியாகும். இதை உணராமல்நிலையற்றதொன்றை நிலையெனக் கருதுபவர், உயிரின் உண்மைத் தன்மையினை அறியாதவர்கள் ஆவார்கள். அதனையடுத்து ஞானம் பெற முயல்பவன் அறம் செய்தும், அன்பு பூண்டும், கல்வி கேள்வி மேற்கொண்டும், கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, கள்ளுண்ணாமை போன்ற விரதங்களை மேற்கொண்டும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய கருத்துக்களை அகத்துட் கொண்டு அவற்றைப் பின்பற்றுவதன் மூலம் சைவ சித்தாந்த நெறியைக் கடைப்பிடித்தவனாகின்றான் என்கின்ற நிலை திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் விளக்கப்படுகின்றன. அத்தோடு நன்னெறி அறிந்து, ஒழுகி வீடு பேற்றினை அடையும் குறிக்கோளுடன் நற்பொருளே கேட்டுணர்வதற்கான ஆவலுடன், பெரியோர்களை அறிந்தும் வழிபட்டும் உள்ளமாகிய தீர்த்தத்தின் உண்மைகளை உணர்ந்தும் சிவநிந்தை, குரு நிந்தை, மகேஸ்வர நிந்தை ஆகிய தீமைகளை அறவே அகற்றியும் தம்மை அறிந்த தத்துவ ஞானிகளைத் துணையாகக் கொண்டும் சைவ சித்தாந்த ஏணியில் அடுத்த படியில் கால் வைக்க வேண்டுமென்பதும் முதலாவது தந்திரத்தின் சாரமாகும்.

மூன்றாம் தந்திரத்தின் குறிக்கோள் சரீர சித்தி உபாயமாகும். உயிர் தங்கியுள்ள உடம்பு பேணப்பட வேண்டும். அறம் முதலியவற்றைச் செய்ய உடம்பு தேவைப்படுகின்றது. ஆனால், உடம்பின் வலிமை, மனதின் வலிமை, இறைவனை நாடுவதற்கேயாம். இறைவனை நாடுதல் வேண்டி யோக மார்க்கமாகச் செய்யத் தகுந்தவற்றைச் செய்தும், தகாதவற்றை நீக்கியும், உடலையும், உள்ளத்தையும் ஒருமுகப்படுத்தி, சிவயோக சாதனத்தை மேற்கொண்டு சிவஞானத்தைப் பெறுவது சைவ சித்தாந்த நெறியின் நான்கு பாகங்களில் ஒன்றானபடியால் திருமந்திரம் யோகத்திற்கு ஓர்



**திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்கு தமிழக அரசின் சிறுசேமிப்புக் குலுக்கலிற் முதற் பரிசாக வேன் கிடைத்துள்ளது. ஆலய இணை ஆணையாளர் திரு மலையாண்டி அவர்களையும். ஆலய அறங்காவலர் பெருமக்களையும் இங்கு காணலாம்.**

சிறந்த இடத்தை நல்கி யோகானுபவங்களை விரிவுபடுத்தியுள்ளது. அதேபோல் சிவயோகத்தைப் பெற மந்திரங்களின் துணையும் இன்றியமையாததாக உள்ளது என்பதையும் நான்காம் தந்திரத்தில் தெரிவிக்கின்றது.

ஐந்தாம் தந்திரம் திருமந்திரத்திற்கு உயிர் நாடியாகக் கருதப்படுகிறது. இதன்கண் சுத்தம், அசுத்தம், மார்க்கம், கடும் சுத்தம் என்னும் நால்வகைச் சைவங்களும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகைச் சைவ நெறிகளும் அவற்றிற்குரிய சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என்கின்ற வழிகளும், அவற்றைப் பின்தொடர்பவர் பெறக்கூடிய சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நால் வகைப் பேறுகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இருவினை ஒப்பு என்கிற நிலையில் சத்திநிபாதம், மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்கிற நான்கு படிகளாக திருவருள் உயிரை ஆட்கொள்கின்ற அனுபவ உண்மையும் விளக்கப்பட்டுள்ளது.

இறைவன் ஒருவனே, உயிர்கள் பல, உயிர்கள் அனாதியே மலத்தால் கட்டுப்பட்டு நிற்பன. அவை உய்யும் பொருட்டு இறைவன் வினைக்கீடாய் மெய்க்கொண்டு உண்ணின்று உருக்கி ஒப்பிலா ஆனந்தக் கண்ணின்று காட்டி களிம்பு அறுக்கின்றான். அருட் கண்ணை விழிப்பிக்கின்றான். இதன் விளைவால் கிடைக்கப் பெறும் இன்பமே பேரின்பமாகும். அதற்காக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற பாதைகளில் சென்றும் சற்குருவின் அருள்பெற்றும் திருநீறு போன்ற சாதனங்களைத் துணைக் கொண்டும் பக்குவ நிலையை அடைபவர் இறைவன் அருள் பெறுகின்றனர்.

**சரியைக்கு**

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே
*(பாடல்—1445)*

**கிரியைக்கு**

பத்துத் திசையும் பரமொரு தெய்வமுன்
டெத்திக் கிலரில்லை என்பதின் அமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே.
*(பாடல்—1451)*

**யோகத்திற்கு**

நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்கும் கூடலுமாமே.
*(பாடல்—1457)*

ஞானத்திற்கு

சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்
உய்த்த வுணர்வு முணர்த்தும் அகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ்
செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றீசன் மார்க்கமே.

(பாடல்—1468)

என்கின்ற திருமந்திரங்கள் சைவ சித்தாந்த நன்னெறிகளுக்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. ஏழு, எட்டு, ஒன்பது தந்திரங்களில் வரும் இறையருள் பெற்ற உயிர்கள் சிவயோக, சிவஞான நெறிகளில் ஆழ்ந்து நின்று நற்பண்புகளை மேற்கொண்டனவாய், அறிவுதயம் பெற்றவையாய், சிவ தரிசன அனுபவம் பெற்று அம்பலவாணனின் திருநட்டத்தை பல்வேறு நிலைகளில் கண்டுகளித்து சிவத்தைத் தம்முள் அனுபவித்து மோன சமாதியில் திளைத்து சர்வ வியாபியாகிய சிவனின் பெருமையை என்றென்றும் உணர்வில் கொண்டு வாழ்ந்து வரும் உன்னதமான நிலையைப் பற்றிய விளக்கம் திருமந்திர மாலைக்குப் பெருமை தரக்கூடிய ஒன்றாகும்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்கின்ற திருமந்திர வாக்கு சைவ சித்தாந்தத்தின் மையக் கருத்தாக அமைகின்றது.

சித்தாந்த நெறியின் தாரக மந்திரமாகச் செந்தமிழ்த் திருவைந்தெழுத்து திருமந்திரத்தில் பல்வேறு இடங்களில் போற்றிப் பேசப் படுகின்றது.

'ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயிராவது
நன்றுகண் டீர் இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.'

(பாடல்—2962)

''அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே''.

(பாடல்—934)

'சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவ சிவ வென்னென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்தமாமே.''

(பாடல்-2718)

இறைவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினை உச்சரித்து மனதை ஒருமித்துச் சிவத்தில் பொருத்தினால் பிறவித் துன்பம் நீங்கும்.

'நமவென்று நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவவென்று நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும் பரிசுமதற்றால்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றோ''

(பாடல்—2717).

# பூஜையில் பஞ்ச பூதங்கள்

**தஞ்சை நடராஜன்**

பஞ்ச பூதங்களாய் எங்கும்
பரந்து விரிந்த பரம்பொருள்
நெஞ்சில் தோன்றிக் கருணை
நித்தம் செய்ய வேண்டி
பஞ்ச பூதங்களை பூசையில்
பங்கேற்கச் செய்த பாங்கை
தஞ்சை நடராசன் சொல்வேன்
தரணி வாழ்வோரே கேட்பீர்

சிலைவடிவில் எழில்சிற்ப வடிவில்
நிலைபெறல் நிலத்தின் பங்கே
மலைத்தேனும் மாசிலாப் பாலும்
மாதவன் மேனிசொரி நீராம்
அலைக்காற்றில் கலக்கும் அகில்சந்தனம்
அனுதினப் பூமணமும் காற்றே
தலையாகக் கற்பூரத் தீபமேற்றல்
தணியா எண்ணெய் தீ அக்கினியே

ஆசையிலா ஆசான் பூசிக்க
அவனுளமே அளவிடா ஆகாயம்
பூசையின் தத்துவங்கள் இத்தனை
புரிந்து கொண்டவர் எத்தனை
காசும் பொன்னும் கழுவாயோ
கடவுளை என்றும் தொழுவாயே
பேசுதல் பெருமான் பெருமைகளே
பிரிதெலாம் நமக்கு சிறுமைகளே

சிவஞானம் பெற்ற உயிர் தன்னுடம்பையும், கருவி கரணங்களையும் மற்ற தத்துவங்களையும் தன்னில் வேறாக பகுத்துணர்ந்து சிவப்பரம்பொருளே மெய்ப்பொருளெனக் கண்டு தெளியும் தன்மையை 'மெய்கண்டதே' என்று திருமூலர் சிறப்பிக்கின்றார்.

'மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும்
மெய்த் தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எல்லா வுயிரும் இறையாட்ட ஆடலாற்
கைவா யிலா நிறை எங்குமெய் கண்டதே''

(பாடல்—2586)

சிவப் பரம்பொருள் உயிருக்கு அருள் செய்தல் வேண்டி ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளி, பாசங்களை நீக்கி மெய்யுணர்வு அளித்து அருள்வான் என்பது சைவ சித்தாந்தத் துணிபாகும். இதைக் கூறும் திருமந்திரம் பின் வருமாறு:

''குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வுற்றதோர் கோவே''.

(பாடல்—1581)

உயிரானது பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் ஆகியவற்றைச் சிவத்தின் அருட் சக்தியால் படிப்படியாக அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபடும்பொழுது அழியும்தன்மை யுடைய பிரபஞ்சத்தை அசத்து என்றும், அழிவின்றி நிற்கும் பரம்பொருளைச் சத்தென வும், சிவமாகிய பரம்பொருளை சிவசத்து எனவும், அசத்தினைச் சார்ந்த நிலையில் அசத்தாகவும், சத்தினைச் சார்ந்த நிலையில் சத்தாகவும், இவ்விரு பொருள்களின் உண்மைத் தன்மையை அறியும் திறமை படைத்து சதசத் தாகவும் நிற்கும் நிலை சைவ சித்தாந்தம் சமய தத்துவங்களுக்குவழங்கிய தனித்தன்மை வாய்ந்த மாபெரும் உண்மையாகும். திருமந்தி ரம் இதைப் பின்வருமாறு கூறுகின்றது.

''சத்தும் அசத்தும் சதசத்துந் தான்கண்டு
சித்தும் அசித்தும் சேர்வுறா மேநீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறா மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே''

(பாடல்—1420)

''சத்தும் அசத்தும் சதசத்துந் தான்கூடிச்
சித்தும் அசித்தும் சிவசத்த தாய்நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடங்காத் துரியத்துச்
சுந்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே''

(பாடல்—2328)

''தானே அறியான் அறிவிலோன் தானல்லன்
தானே யறிவான் அறிவு சதசத்தென்
றானால் இரண்டும் அரனருளாய் நிற்கத்
தானே யறிந்து சித்துடன் தங்குமே''

(பாடல்—2329)

பாச ஞானமாவது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைப் பற்றிஅறிந்து கொள்வதாகும். அவை முறையே நெல்லின் பகுதிகளாகிய முளை, தவிடு, உமிஎன்பவற்றைப் போன்று உயிரைப் பிணித்து மறைத்துள்ளது போலாகும் இந்த உண்மையை பின்வரும் திருமந்திரப்பாடலில் காணலாம்.

''ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவும்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே.''

(பாடல்—2192)

சித்தாந்தச் சமயத்தின் பெருமை வாய்ந்த கோட்பாடு இறைவனடி பேணுதலாகும். இறை வன் திருவடியை அருட் சக்தியென்றும், அருள் ஞானமென்றும் உள்தெளிவென்றும் சுட்டிக் காட்டுவது சித்தாந்தமேயாகும். பின்வரும் திருமந்திரம் இதைப் பிரதிபலிக்கின்றது.

''திருவடியே சிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே''

(பாடல்—138)

''சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை யறியகி லனாகில்
எந்தையை யானும் அறியகி லேனே''.

(பாடல்—2428)

இறைவனுடைய திருவடியினை வேண்டு மென்பருக்கு அருளல் அவனது இயல்பாகும். உலகெங்கும் தானான உண்மையை அவன் அளிப்பான். நீக்கமற நிற்கின்ற பரிபூரணானந் தன் ஆதலின் திருவடி சார்ந்தோருக்குப் பேரின் பத்தை அருள் வடிவில் அளிக்கின்றான். சித்து இவை, அசித்து இவை என அறிவித்து யோகத் தின் வாயிலாக சிவ ஒளியுடன் கலந்து அவ யோகம் புகாவண்ணம் பேரின்பத்தைப் பெறு வதற்கான அருளைப் புரிபவனும் அவனே யாகும்.

''சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்
அவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே''

(பாடல்—122)

சைவ சித்தாந்தம் தத்துவ விளக்கங் களுடன் நின்று விடவில்லை. சிவமாம் பரம் பொருள் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவன். தத்துவாதீதன். ''அப்பாலாய், அதற்கும் அப்பாலாய், அப்பாலுக்கப்பாலாய் நிற்பன்' என்பார் வள்ளலார். இறைவன் தத்துவக் கூட்டத்தில் நிற்கிறான், தத்துவக் கூட்டத் திற்கு அப்பாலும் நிற்கின்றான். தத்துவம் எங் குண்டு, தத்துவன் அங்குண்டு; தத்துவம் எங் கில்லை தத்துவன் அங்கில்லை. (பாடல் 2817) இருவினைக்கு அப்பால் நிற்கும் பரம்பொருளை பேரின்ப நிலையை, அன்பின் வடிவை, படைத் தல், காத்தல், அழித்தல், அருளல் போன்ற தொழில்களையெல்லாம் புரிந்து சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மையை இப்பிரபஞ்சத் திற்கு ஆதாரமாய், பிரபஞ்சமாய், எல்லா வற்றிற்கும் காரணமாய், எல்லாமாய் நிற் கின்ற ஒருவனை மனதுள் உணர்ந்து அவனது தன்மையை விளக்கி, அவனை அடையும் வழி களை உலகிற்கு எடுத்துக்காட்டுவது மட்டு மின்றி அந்த வழிகளால் கிடைக்கக்கூடிய பேரின்பத்திற்கு இலக்கணமாகவும், இலக்கிய மாகவும் நிற்கும் பெரும் பெருமை சைவ சித்தாந்தத்தைச் சாரும். ஐம்புலன்களினால் கிடைக்கக்கூடிய விஷயாதி அனுபவங்களில் மக்கள் மயங்கி நிற்கும்போது அந்தச் சிற்றறி வினை 'ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம் போல'' பேரறிவில் இருந்து பிரித்து பிறவிக்குக் காரணமான கன்ம நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வாழ்வையும், வாழ்வு தரும் அனுபவங்களையும் சிவனின் தன்மையை வெளிக்காட்டும் ஏணியாக அமைத்து அந்த ஏணியில் படிப்படியாக ஏறி ஒப்பில்லாத ஆனந்தத்தைத் தம்முள் பெற்று விவரிக்க இய லாத நிலையை தம்முள் கண்டு அந்த நிலையை பிறரும் அனுபவிக்கச் செய்வதே சைவ சித்தாந் யின் தலையாய கொள்கையாகும்.

# குலசை ஞானி

## இளைய ஞானி

''அருவமும் உருவமும் ஆகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர்
மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய!''

ஆம்! உலகம் உய்வதற்காக உதித்த பெருந்தகை முருகப் பெருமான். அதனால்தான் 'உலகம் உவப்ப' என்று நக்கீரர் தொடங்குகிறார். எத்தனையோ பிறப்பெடுத்து இளைத்துப் போன ஆன்மாக்களுக்கு உய்யும் வழிகாட்ட அவதரித்தவன் முருகப்பெருமான்.

ஆன்மாக்களுக்கு மூன்று நிலைகளுண்டு; கேவலம், பெத்தம், முத்தம் என்பன.

இருளும், அறியாமையும், துன்பமும்சேர்ந்த நிலையில் ஆன்மாக்கள் கிடந்து உழலுகின்றன. இந்நிலை கேவல நிலையாகும்.

இருளும் ஒளியும், துன்பமும் இன்பமும், அறிவும் அறியாமையும் விரவிய நிலையில் வாழுகின்ற நிலை பெத்த நிலையாகும்.

இன்பமாய், அறிவாய், ஒளியேயாய் நிறை நிலையில் ஆன்மா இன்புறும் நிலை முத்த நிலையாகும்.

'முருகன்' என்பதில்,
முருகு — என்பது பகுதி
அன் — ஆண்பால் ஒருமை விகுதி;
முருகு என்ற சொல்லில்,
ம் உ, ர் உ, க்உ என்று மூன்று உகரங்கள் வருவதை நாம் அறியலாம்.

உகரம் காத்தலைக் குறிக்கும் சொல்லாகும். முருகு என்ற சொல்லில் மூன்று உகரங்கள் இருப்பதால், ஆன்மாக்களின் மூன்று நிலைகளிலும் — அதாவது கேவல நிலை, பெத்தநிலை, முத்தநிலைகளிலும் காக்கும் கடவுள் முருகனே என்பது புலனாகும். இதனால் முருகன் என்ற சொல் சிறப்புடையது.

''அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக'' என்று நக்கீரர் குறிப்பிடுவதைப்போலத் தமிழரின் வழிவழி வந்த மாபெரும் சொல் 'முருகு' ஆகும்.

ஆறுதிசைகளையும் பார்த்தருளும் ஆறு முகமும், வினைகளைக் களையும் வேலும், பயத்தையகற்றும் மயிலும் கொண்டவனாக விளங்குகிறான் முருகப்பெருமான்.

ஞான ஒளியால் விளைந்தவன் முருகன் என்பதை,
''ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்துச்சி
யின் மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்த தேவை''
என்று கந்தரலங்காரத்தில் சொல்லப்பட்டது.

எனவே, ஆன்மாக்கள் உய்யவும், ஞான நிலை பெறவும் முருகப் பெருமானைத் துதிக்க வேண்டும்.


இதனை முழுமையாக உணர்ந்தவர், குலசேகரப் பட்டினத்தில் வாழ்ந்த முத்தானந்த பெருமாள்பிள்ளை என்பவர். தம்மூரில் இருந்து எட்டு மைல் தொலைவில் இருந்த திருச்செந்தூர்ப்பெருமானிடம் தம்மனதைப் பறிகொடுத்துத் தினமும் தொழுது வந்தார். நாள் முழுவதும் அரச காரியங்களைக் கவனித்து விட்டு, இரவில் கடற்கரை ஓரமாக திருச்செந்தூர் சென்று அர்த்த யாமப் பூசையைக் கண்டுகளித்துத் திரும்புவது இவரின் வழக்கம்.

இவரின் பண்பு நலத்தையும், கல்வி கேள்விகளில் சிறந்த திறமையையும், ஒப்பற்ற இறை ஞானத்தையும் கண்ட ஊர் மக்கள் இவரை ஞானியார் என்றே அழைத்து வந்தனர். இவரின் புகழ் பாண்டிய நாடு முழுவதும் பரவியது. அங்கெல்லாம் இவரை 'குலசேகரன் பட்டினத்தில் வாழும் ஞானியார்' என்னும் பொருள்பட 'குலசை ஞானியார்' என்றே அழைக்கலானார்கள்.

பெரும் சீரும் சிறப்பும் வாய்ந்த குலசேகரப் பட்டினத்தைக் குலசேகரம் என்ற பாண்டிய மன்னன் சீர்திருத்தி உயர்வுறச் செய்தான் என்பதால் இவன் பெயராலேயே இப்பட்டினம் வழங்கலாயிற்று. அப்போது சிறந்த அழகிய துறைமுகமாகவும் விளங்கிற்று. காலப்போக்கில் இத்துறைமுகம் அழிந்து போனது. பாண்டிய மன்னர்களின் ஆட்சியும் நிலைகுலைந்தது. பாண்டிய நாட்டைப் பல்வேறு குறுநில மன்னர்கள் பிரித்துக் கொண்டு ஆளத் தொடங்கினர்.

இந்நிலையில் குலசேகரன்பட்டினத்தைச் செந்தில் காத்த மூப்பனார் என்பவர் ஆண்டு வந்தார். இவரிடம் அமைச்சராக விளங்கியவர் தான் குலசை ஞானியார் ஆவார்.

குலசேகரன் பட்டினத்தை அடுத்திருந்த பூதப்பாண்டி நாட்டை மலையாள பத்மநாபப் பிள்ளையன் ஆண்டு வந்தான். மலையாள பத்மநாபன் உலக இன்பத்தில் அதிக நாட்டங் கொண்டு, சுகபோகங்களுடன் வாழ்வதிலேயே மிக விருப்பம் கொண்டிருந்தான். இவனுக்கு இலங்கை தேசத்துக் கண்டி மன்னனின் மகள் மீது நாட்டம் ஏற்பட்டது. கண்டி நாட்டு அரச



குமாரியை அடையப் பல வழிகளில் முயன்றான். எவ்வழிகளிலும் பலன் ஏற்படவில்லை.

இவன் தன் நாட்டில் இவனின் ஆதரவில் மலையாள மாந்திரீகர்கள் பலர் வசித்து வந்தனர். அவர்கள் சிறு தேவதைகளை மந்திரத்தால் வசியஞ் செய்து பற்பல செயல்களைச் செய்து வந்தனர். இத்தகைய மந்திரவாதிகளில் மிகவும் பிரபலமானவர் பொல்லாப்பிள்ளை ஆசான்.

இவரை மன்னன் அழைத்தான், தன் விருப்பத்தைச் சொன்னான், மலையாளத்து ஆசான் இதற்கு இசைந்து தன் தேவதைகளைக் கண்டிக்கு ஏவினான். அத்தேவதைகள் கண்டிக்குச் சென்று பலத்த காவலுக்கிடையில் அந்தப்புரத்தில் துயின்ற அரசகுமாரியைக் கட்டிலோடு தூக்கிக்கொண்டு வான்வழியே வந்தான்.

குலசை ஞானியார் திருச்செந்தூர் சென்று இரவு பூசையைக் கண்டுகளித்துத் திரும்பி, தம் ஊர் எல்லையில் உள்ள மூப்பனார் குளத்தில் கைகால்களைக் கழுவிக் கொண்டிருந்தார். இது இவரின் வழக்கமாகும்.

செந்தூர் முருகனை மனதிலே தியானித்து அவனின் ஞான அனுபவத்துடன் கூடித் திளைத்துக் கொண்டிருந்த ஞானியார், குளத்து நீரில் நிழலாடியதைக் கண்டார். அந்த நிர்மலமான இரவு நேரத்தில் ஆடாமல் அசையாமல் இருந்த குளத்து நீரில், வான்வழியே போகும் கட்டில் தெரிந்தது. மந்திரவாதிகளின் ஏவலால் சிறு

தெய்வங்கள் செய்யும் செயல் இதுவென்று உணர்ந்தார். எல்லாம்வல்ல செந்தூர் முருகப் பெருமானின் திருவடிகளில் மனம் வைத்து, வழி பட்டு நிமிர்ந்து பார்த்தார். கட்டிலை இறக்கு மாறு தம் கரத்தால் சைகை செய்தார். ஞானி யாரின் திருவுளத்திற்குக் கட்டுப்பட்டு அத் தேவதைகள் கட்டிலை குளக்கரையில்இறக்கின.

ஞானியார் உண்மையை உணர்ந்தார், அரசகுமாரியின் நிலைகண்டு இரக்கமுற்றார். அவளை மீண்டும் கொண்டுபோய், கண்டிஅரண் மனையில் விட்டுவிட்டு வருமாறு கட்டளையிட் டார். ஞானியாரின் அருட்திறத்திற்கு அஞ்சிய அத்தேவதைகள் அவ்வாறே செய்தன.

மாந்திரீக ஜெபத்தில் இருந்த மலையாள ஆசான் இதைத் தெரிந்து கொண்டான்; கோபம் கொண்டான். தன் செயலில் அவர் குறுக்கிடு வதையும், தம் தேவதைகளைக் கட்டுப்படுத் தும் ஆற்றலை அவர் பெற்றிருப்பதையும் அறிந்து ஆத்திரமுற்றான். ஞானியாரைத் தீர்த்துவிட வேண்டும் என்றுதீர்மானித்து, தன் கட்டுப்பாட்டில் இருந்த பற்பல துர்தேவதை களை ஒரே சமயத்தில் ஏவினான். இந்தத் துர் தேவதைகள் சென்ற நேரத்தில் குலசை ஞானி யார், செந்தூர் கோயிலில் முருகப் பெருமா னைத் தரிசித்துக் கொண்டிருந்தார். இந்நிலை யில் திருக்கோயிலுக்குள் புகுந்த துர்தேவதை கள் தம் வலிமை இழந்து திரும்பின.

இதனையும் பொல்லாப் பிள்ளை ஆசான் உணர்ந்தான். ஞானியார் செந்தூர் திருமுருகன் திருத்தலத்தில் இல்லாத நேரத்தில் தேவதை களை மீண்டும் அனுப்பினான். ஞானி யாரை அவைகள் நெருங்க முடியவில்லை. செந் தூர் கோவிலில் எப்படி தம் வலிமையை இழந்து போயினவோ, அப்படியே இப்போதும் வலிமையை இழந்து நின்றன. ஞானியார் இவை களைத் தம் அருட் பார்வையால் பார்த்தார். அவைகள் மலையாள ஆசானின் கட்டுப் பாட்டை உடைத்து தம் நிலைக்கு மீண்டன. ஞானியாரை வணங்கி விண்நோக்கி சென்றன.

இதைக் கண்டு மந்திரவாதி அதிர்ந்தான். பிறகு பெரும் சினத்துடன் தாம் பல ஆண்டு கள் முயன்று கைப்பெற்றுள்ள வயிரவரை ஞானி யார்பால் ஏவினான். வயிரவர் உக்கிர வடிவத் துடன் ஞானியாரைத் தாக்க வந்தார்.

ஞானியார் தமது நல்வினைகள் அனைத் தையும் ஒருங்கிணைத்து, தாம் இது வரைதமது அருட்சக்திகளை எல்லாம் உலகம் உய்யவே பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம் என் பதையும் தெளிந்து, செந்திலாண்டவனின் திரு வடிகளை மனத்தால் வணங்கினார்.

அடுத்த நிமிடத்தில்,

''வயிரவா! இனி நீர் மந்திரவாதியிடம் போகக் கூடாது. என் வீட்டு முன் ஒரு பீடம் அமைத்துத் தருகிறேன். இங்கேயே இரும்'' என்றார் ஞானியார்.

ஞானியாரின் நற்தொண்டின் வலிமைக் கும், செந்திலாண்டவனின் திருவருளைப்பெற்ற சிறப்பிற்கும் அடிபணிந்து வயிரவர் அவ்வாறே நின்றார்., இன்னும் ஞானியாரின் வழித்தோன் றல்கள் இந்த வயிரவருக்கு வழிபாடு செய்து வருகிறார்கள்.

மலையாள ஆசானுக்கு ஒன்றும் புரிய வில்லை. ஒன்றும் திரும்பி வராதது கண்டு திகைத்தான். அவைகள் திருப்பித் தன்னைத் தாக்குமே என்று மருண்டான். தான் அனுப்பிய சக்தியின் நிலையை அறிய விரும்பினான். பூதப் பாண்டி பத்மநாபனோ தமக்கு ஏதாவது கேடு வருமோ என்று எண்ணிப் பெரிதும் அஞ் சினான். மாந்தரீகத்தைக் கட்டுப்படுத்தும் அருட்சக்தி பெற்ற மகானைப் பார்க்க விரும் பினான்.

இருவரும் சேர்ந்து ஞானியாரைப் பார்க்க விரைந்து வந்தார்கள். ஞானியார் அவர்களை வரவேற்று வணங்கினார். இன்னுரை கூறி உணவு வழங்கினார். சிறிது நேரத்திற்குப்பிறகு மலையாளத்து ஆசானை அழைத்து தமது வீட் டின் ஒரு அறையில் கதவைத் திறந்து பார்க்கு மாறு கேட்டுக் கொண்டார்.

ஆசான் திறந்து பார்த்தான். அறையில் ஆசானின் மனைவியும் மகளும் கட்டிப்போடப் பட்டிருந்ததைக் கண்டு அலறினான். மனைவி யும் மகளும் துன்பப்படுவதைக் கண்டு கலங்கி அழுதான். ஞானியார் கதவை மூடிவிட்டு அவனை அழைத்துக்கொண்டு வெளியே வந் தார். பிறகு ஞானியார்

''பொல்லாப்பிள்ளை ஆசானே! உன் மனைவியும் மகளையும் நான் என் சக்தியால் இங்கு அழைத்ததைக் கண்டு, கண் கலங்கி அலறினாயே! ...இதைப்போலத்தானே கண்டி மன்னன் அலறியிருப்பான். மற்றவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும் பொழுதே அத்துன் பம் தமக்கு வந்தால் எப்படியிருக்கும் என்பதை ஏன் உணர்வதில்லை? இனிமேலாவது மந்திர சக்தியைத் தீயவழியில் செலுத்தாமல் நல்வழி யில் நடத்தி நலம் பெறுவாயாக'' என்று அறி வுரை கூறினார்.

மலையாள ஆசான் தன் தவற்றை உணர்ந்து மண்டியிட்டு வணங்கினான். தன் மனைவி மகள் இருக்கும் அறையைப் பார்த்துக் கண் கலங்கினான்

இதனை உணர்ந்த குலசை ஞானிகள், அக்கதவை மறுபடியும் திறக்க சொன்னார். அங்கு மனைவியும் மகளும்காணப்பெறவில்லை.

ஞானியார் புன்னகையுடன், ''அவர்கள் நலமாக உன் வீட்டில் இருக்கிறார்கள்'' என் றார்,

மலையாளத்து ஆசான் நாத்தழுதழுக்கக் கண்ணீர் மல்கி மீண்டும் ஒரு முறை வணங்கி விடைபெற்றான்.

**ஞான விதை:**

''தீங்கை விளைவிக்கும் போதே அது தனக்கு வந்தால் எப்படியிருக்கும் என்று நினை''.

காரமடை

# அரங்கநாத சுவாமி திருக்கோயில்

— டாக்டர் சுப்பிரமணியம் —

இத்தலம் கோவை மாவட்டத்தில், மேட்டுப் பாளையத்திலிருந்து கோவை செல்லும் சாலையில் 8-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. இரயில், பேருந்து மூலம் அடையலாம்.

காரைப் புதர்களும், காரைச் செடிகளும், நீர் நிறைநீத மடைகளும் இருந்ததால் காரை மடை எனப் பெயர் பெற்றது.

காரைப்புதர்கள் நிறையவுள்ள இந்த இடத்தில் தொட்டியர்கள் காராம் பசுக்களை மேய்த்து வந்தனர். அதிகமாகப் பால் கொடுக்கும் ஒரு பசு மாலையில் திரும்பும் போது மடி வற்றி விடும். பால் இருக்காது. பல நாட்கள் இப்படி நடந்ததால் பசு மீது தொட்டியனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு அதைப் பின் தொடர்ந்து கவனித்தான். பசு ஒரு புதருக்குப் பால் கொடுப்பதைக் கண்ணுற்றுப் புதரை கொடுவாளால் வெட்டினான். புதரிலிருந்து இரத்தம்பீறிட்டுக்கொண்டு வந்ததைக் கண்ணுற்ற தொட்டியன் மயங்கி வீழ்ந்தான். நினைவு பெற்றெழுந்தபோது அவனுக்குக் கண் பார்வை தெரியவில்லை. அதற்குள் ஊரிலிருந்த மக்கள் இவ்விடத்திற்கு வந்து தொட்டியனையும், புதரில் இரத்தம் பீறிட்டஇடத்தில் சிவப்பாக மடைபோல் காட்சியளித்ததையும் கண்டனர். புதரை விலக்கிப் பார்த்தபோது அங்கு ஒரு லிங்கம் வெட்டப்பட்டிருப்பதைக் கண்டனர். இறைவன் அங்கிருந்த ஒருவர் மூலம் தனக்குக்கோயில் கட்டுமாறு கூறினார்.

தொட்டியன் கனவில் சந்தனக் காப்பு அலங்காரம் செய்து பார்த்தால்தான் யாரெனத் தெரியும் என்ற இறைவன் கூற்றுக் கேற்ப சந்தனக் காப்பிட்டு பார்த்த சமயம் இறைவன் சங்கு, சக்ரதாரியாக விஷ்ணுவாக காட்சியளித்தார். வெட்டப்பட்ட இடம் இப்போதும் மேல் பாகத்தில் உள்ளது. மகாவிஷ்ணு எட்டு திருத்தலங்களில் தானே (சுயம்புவாக) எழுந்தருளியுள்ளார். ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக்கிராமம், நைமிசாரண்யம், வானமாமலை, புஷ்கரம், பத்ரிகாச்ரமம் என்ற எட்டு ஸ்வயம் வியக்த சேத்திரங்களில் காரமடை சேரவில்லை. 400 ஆண்டுகளுக்குட் பட்ட கோவில் ஆதலால் இது சேர்க்கப்படவில்லை போலும்!

இறைவன்: அரங்கநாதர்<br>
இறைவி : அரங்கநாயகி<br>
ஆண்டாளுடன்வீற்றுள்ளார்.

ஆஞ்சநேயருக்கும். உடையவருக்கும் சன்னதிகள் உண்டு.

தலவிருட்சம்—காரைமரம்.

குழந்தை இல்லாதவர்கள் தொட்டில் கட்டினால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் எனக் கூறுகின்றனர்.

இங்கு மற்ற வைணவத் தலங்களில் உள்ளதுபோல் சடாரி இல்லாமல் 5 அடி நீளமுள்ள இராமபாணத்தால் பக்தர்களை ஆசீர்வதிக்கின்றனர். இவ்வாயுதம் பேய், பில்லிகளை அகற்றக் கூடியதாக உள்ளது.

இக்கோயில் தேர்த்திருவிழா மாசிமாதம் 12 நாட்கள் மிகச்சிறப்பாக பாஞ்சராத்திரிய ஆகமத்தின்படி நடைபெறுகிறது. கிராம சாந்தி, அஷ்டபலி, திருக்கொடியேற்றம், அன்ன வாகனம், சிம்மவாகனம், அனுமந்த வாகனம், கருட வாகனம் முதலிய வாகனங்களில் ஊர்வலம் பூசை நடைபெறுகிறது. மற்றும் ஸ்ரீரங்கநாயகித் தாயாரான பெட்டத்தம்மனை அழைத்து வருதல், தாயாரையும் ஆண்டாளையும் யானை வாகனத்தில் உலா செய்தல், தேர் மாட வீதி வலம் வருதல், பரிவேட்டை, சேஷ வாகனத்தில் எழுந்தருளல் தெப்போற்சவம், ஆலிலைக் கண்ணனாகவும் சந்தான கிருஷ்ணனாகவும் காட்சி தருதல் போன்ற பல வைபவங்களைக் காண பல்வேறு இடங்களிலிருந்து இலட்சக் கணக்கில் மக்கள் கூடுகிறார்கள்.

50 அடி உயரமுள்ள இவ்வாலயத் தேரில் இராமர் பட்டாபிஷேகம், நாரதர்-வால்மீகி உரையாடல் போன்ற பலநிகழ்ச்சிகள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன,

மதுரை மன்னன் திருமலை நாயக்கரால் திருப்பணி செய்யப்பட்டு திருத்தேர் விழா தொடங்கப்பட்டதாக வரலாறு. திருமலை நாயக்கர் தம்பதி சமேதராக அமைச்சருடன் உள்ள சிலைகள் கோயில் கலியாண மண்டபத்திலும், பரிவேட்டை மண்டபத்திலும் உள்ளன.

இத்தேர்த் திருவிழாவின்போது பக்தர்கள தண்ணீர்சேவை, பந்தி சேவை, கவாள சேவை முதலியவைகளைச் செய்கிறார்கள். கிராம மக்கள் கழுத்தில் மாலைகளுடன், மஞ்சளாடை அணிந்து வருவார்கள்.

இங்கு உற்சவமூர்த்தி எழுந்து வரும் வெள்ளைக் குதிரைஒரு ஆங்கிலேயரால் அளிக்கப்பட்டது. இரயில்வே பொறியாளரான அவர் இருப்புப்பாதை அமைக்க கோயிலின் அருகே பலர் தடுத்தும் கேளாமல் மதிப்பீடு செய்தார். அன்றிரவு அவர் கனவில் இறைவன் ஒரு வெள்ளைக் குதிரை மேல் ஏறி வந்து கோபத்துடன் அவரை இருமுறை சாட்டையால் அடித்தாராம். திடீரென கனவு கலைந்து அவர் தம் தவறை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்பு வேண்டி இருப்புப்பாதையை வேறு பக்கம் மாற்றி மதிப்பீடு தயாரித்து அனுப்பினார். தம் சொந்த செலவில் ஒரு வெள்ளை மரக்குதிரை செய்து அன்பளிப்பாக வழங்கினார். அந்தக் குதிரையின் மேல் எழுந்தருளி பரிவேட்டை உற்சவத்திற்கு திருவீதி உலா புறப்படுகிறார்.

400 ஆண்டுகளுக்குப் பிறகு 1982-ல் குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது.


நஞ்சுண்டேசுவரர் ஆலயம், சந்தானவேணு கோபால சுவாமி கோயில், பெட்டத்தம்மன் மலைக் கோவிலும் அருகில் உள்ளது.

ஊட்டிக்கு செல்லும் மக்கள் வழியில் உள்ள இக்கோயிலையும் தரிசித்துச் செல்லலாம்.

# மயிலை அருள்மிகு
# கபாலீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற
# பொது விருந்து விழா



மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தில் 15-8-95 சுதந்திரத் திருநாள் அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திருமிகு ரகுபதி அவர்களும், குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமிகு கே. ஆர். வி. ரமணி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பு


பெரும் புலவர் மு. சுந்தரேசம் பிள்ளை

சோழ நாட்டு மன்னன் அநபாயன். அவன் சீவக சிந்தாமணியை நாடோறும் கேட்டு வந்தான். அவன்பால் அமைச்சராக விளங்கியவர் சேக்கிழார் பெருமான். அவர் அரசனை நோக்கி, 'சீவகசிந்தாமணி' இம்மைக்கும் ஆகாது, மறுமைக்கும் ஆகாது. வளம் மருவும் சிவகதை இம்மை, மறுமை இரண்டிற்கும் உறுதி பயக்கும். அதனைக் கேட்பாயாக'' என்று கூறி, சுந்தரர் திருத்தொண்டத் தொகையுள் அருளிய, அடியார்கள் வரலாற்றினை முற்றும் எடுத்துப் புகன்று; அதற்கு வகையாக, நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் பொருள் கூறினார். அரசன் ஆர்வத்துடன் கேட்டு; அடியார்கள் வரலாற்றினை விரிவாக எழுதித் தருக என வேண்டினான். சேக்கிழார், இது திருவருட்செயல் என்று கருதி, தில்லைசென்று தில்லைக் கூத்தனை வணங்கி, அவன் தந்த 'உலகெலாம்' என்னும் முதலைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் இயற்றினார். திருத்தொண்டர் புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாவதாகச் சேர்க்கப் பெற்றது. முறை—புத்தகம் எனப் பொருள்படும்.

ஒழுக்க முறைகளைத் தெரிவித்து ஆன்ம ஞானத்தைக்கூட்டவல்ல நூல்கள்திருமுறைகள். எல்லாப் பொருளும் அடங்கிய காரணத்தால் முதல் ஏழு திருமுறைகளுக்கு 'அடங்கல்முறை' எனப் பெயர் வழங்கலாயிற்று. இத்திருமுறைகளில் உள்ள தேவாரங்களை எல்லாம் நன்றாக உணர்ந்து அவற்றில் திளைத்தாடி அரிய பொருள்களை எல்லாம் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்துள் விளக்கியுள்ளார், 'உலகெலாம்' என்று தொடங்கும் ஞானப் பாடலில் பொதிந்து உள்ள உண்மைகள் பல. இப்பாடலில் உள்ள எழுத்துக்கள் அறுபத்து மூன்று, திருத்தொண்டர் புராணத்துள் கூறப் பெறும் தனியடியார்களின் தொகை அறுபத்து மூன்றே. இறை உருவங்கள் மூன்று. அவை, அருவம், அருவுருவம், உருவம். இம்மூன்றையும் சிவ பரம்பொருள் தில்லையில் பெற்றுள்ளார். 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பது அருவ நிலைமை. 'நிலாவுலவிய நீர்மலிவேணியன்' என்பது உருவநிலை. உருவமுடையனாய் உறுப்புப் பாகுபாடின்றி இருத்தல் அருவக ரூபம் ஆகும். அதுவே 'அலகில் சோதியன்' ஆகுந்தன்மை. இம்மூன்றுக்கும் அப்பாற்பட்ட நிலைமையே, சிதாகாசத்தில் ஆடுங்கோலம். திருத்தொண்டர்புராணம் திருத்தொண்டர் பெருமை கூறும் 'எடுக்குமாக் கதை' என்றும் சேக்கிழார் குறிப்பிடுவதால் பிற்காலத்தில் 'பெரியபுராணம்' என்ற பெயர் வழங்குவதாயிற்று எனலாம்.



நூல் 3 பாகுபாட்டுள் அடங்கும். எஜமான் கட்டளையிடுவது போன்று விளங்கும் நூல்கள், அவற்றைப் பிரபு சம்ஹிதை என்பர். நட்பு முறையில் அறிவு புகட்டும் நூல்கள், அவற்றைச்சுகிர்சம்ஹிதைஎன்பர்.மனைவியைப் போன்று உகந்த கருத்துக்கள் கூறும் வல்லமையுடைய நூல்கள், இவற்றைக் காந்தா சம்ஹிதை என்பர். 'வேதம்'—பிரபு சம்ஹிதா, 'புராணம்'—சுகிர்சம்ஹிதா, 'இலக்கியங்கள்' காந்தா சம்ஹிதா ஆகும். புராணங்கள் சுகிர் சம்ஹிதையில் அடங்கும். திருத்தொண்டர் புராணம் சிவமாகிய திருவைப் பெற்றவர்களின் சத்திய சம்பந்தமான சரிதங்களாகும்.



## மூவர் முதலிகள்

திருத்தொண்டர் புராணத்தில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் மூவர் முதலிகள். அவராவார், சம்பந்தர், அப்பர், சுந்தரர், இவர்களைப் போன்று அருட் சத்திவாய்ந்த சமயத் தலைவர்கள் இதுவரை வேறு எந்த நாட்டிலும், எவரும் தோன்றவில்லை என்பாம்.

1. கடவுளைப் பற்றிப் பேசாமல் உலக நீதிகளை மட்டும் போதித்தவர்கள்.

2. கடவுளைக் காணாமல் கடவுள் நம்பிக்கை மட்டும் கொண்டவர்கள் என சமயத்தலைவர் இருவகைப்படுவர். இவர்களுள் மகாவீரர், புத்தர் முதலியவர்கள் நீதிகளை மட்டும் போதித்தவர்கள். மகம்மது நபி ஏசுநாதர் போன்றவர்கள் கடவுள் நம்பிக்கை மட்டுங் கொண்டவர்கள். மூவர் முதலிகள் இவர்களைப் போன்றவர்களல்லர். கடவுளைக் கண்டவர்கள். பிறரும் காணும்படிக் காட்டியவர்கள். சேக்கிழார் சம்பந்தரைக் கூறும் போது, 'தானவனைத் தனிகண்டு தொடர்ந்தவர்' என்பர். இஃதொன்றே, போதிய சான்று பகரும், அன்றியும் 'பெம்மான் இவனன்றே' என்று சம்பந்தர் அண்மைச் சுட்டால் ஆண்டவனைக் குறிப்பிடுவர். இறைவனுக்கும், இன்னுயிர்கட்கும், இறைவனுக்கும், உலக நிகழ்ச்சிக்கும், எவ்விதத் தொடர்பும் இல்லை என்பர் சைனர். இறைவன் உண்டா, இல்லையா! என்ற வினாவுக்குப் புத்தர் ஒன்றுமே சொல்லவில்லை. எனவே, சமணம், புத்தம் நாத்திக சமயங்கள். 'நாத்திகக் குரல்' நிலைத்ததில்லை-நிலைக்கப் போவதுமில்லை. 'இல்லென வேண்டா. இறைவனைப் போற்றிப் புகழ்ந்து புனிதன் அடி ஏத்துமின்' என்பர் திருமூலர். இவர் சைவ சமய முதலாசான். எனவே, மூவர் முதலிகளோ, இறைவனைக் கண்டு அவ்விறையருளை மிகுதியும் பெற்றவர்கள். அவ்வருள் வலிமையால் யாரும் நினைக்கமுடியாத அளவிற்குப் புல அற்புதங்களைச் செய்து இறை வலிமையை உலகுக்கு உணர்த்தியவர்கள். தெய்வ சக்தியை நிரூபித்து காட்டுவதில் ஈடு எடுப்பற்றவர்கள். இவர்கள் ஆற்றிய, எலும்பைப் பெண்ணாக்கிய செயல், பாம்பு கடித்து இறந்த பிள்ளையைஉயிர்ப்பித்த செயல், முதலைவாயில் பிள்ளையை அழைத்த செயல்கள் முதலியன அட்டமாசித்தியிலும் மேலானவை. சிறிதைப் பெரிதாக்குவது, பெரியதைச் சிறிதாக்குவது முதலியவை அட்டமாசித்தி என்பர். இச்சித்திகளை இன்றைய விஞ்ஞானிகள் நாளடைவில் சாதிக்கக் கூடும். ஆனால் நாயன்மார்கள் செய்த செயற்கருஞ் செயல்கள் திருவருள் துணையால் அன்றி வேறு எவ்வகையாலும் செய்ய இயலாது. எலும்பைப் பெண்ணாக்குதல் முதலியசெயல்கள், திருவருள் உலகத்தை நடத்தும் என்பதை நிரூபிக்க எழுந்தனவாகும். கடவுள் உண்டு. அக்கடவுளை வழிபடுதல், மக்கட் பிறவி பெற்றார் கடமை. இறையருளைப் பெற்றவர் உலகப் போக்கை எதிர்த்து நிற்கவும் வல்லர் என்பன போன்ற உண்மைகள் சமயக் குரவர்கள் செயலால் தமிழ் மக்கட்குத் தெளிவாயின.

சமயக் குரவர்களில், ஏசுநாதர் போன்றவர்கள் தூய உள்ளமும், தன்னலங் கருதாமல் பிறர் நலமே நாடும் சிறப்புடையவர்கள்,

எனினும், உலக எதிர்ப்பு வந்தபோது அவர்களில் பலர் உலகத்தார் கொடுமைக்கு ஆளாகி மறைந்தனர் (தூக்கிலிடப்பட்டனர்). சமய குரவர்களாகிய சம்பந்தர் முதலியோர் திருவருள் ஆற்றலால் உலகத்தாரை வென்று, அவர்களை அதிசயிக்கும்படிச் செய்து தாம் கண்ட உண்மைகளை உலகுக்கு உணர்த்திய உத்தமர்கள். அவர்களில் ஒருவர் 'மண்பாதலம் புக்குமால் கடல் மூடி மற்றேழுலகும் விண்பால் திசைகெட்டு இரு சுடர்வீழினும் அஞ்சல் நெஞ்சே' 'அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை' என்று வீரவுரை பகர்ந்துள்ளனர்.

திருத்தொண்டர்களுள் சிறந்தவர் மூவர். அவராவார்; சிறுத்தொண்டர், நீலகண்டர், கண்ணப்பர். 'செயற்கரிய செய்வர் பெரியர்' எனபர் வள்ளுவர். அவர் கூறியாங்கு, சிறுத்தொண்டர் முதலிய மூவர் செய்த செயற்கருஞ் செயல்களைப் பட்டினத்தடிகள் பாராட்டியுள்ளார். வாளால் மகவறிந்து இறைவனுக்கு ஊட்டினார் சிறுத்தொண்டர், மனைவியின் சூளால் இளமை துறந்தார் நீலகண்டர். நாளாறில் கண்ணிடந்து அப்பினார் கண்ணப்பர். மக்கட் பிறவியைப் பெற்றவர் அப்பிறவியைக் கொடுத்த இறையை அறிந்து அவனை யடைதற்கு ஆற்ற வேண்டிய செயல் தொண்டாகும். உலகில் தொண்டு செய்யமுற்படுவோர், தாம் ஈட்டிய பொருளையும் தம் உடலையும், உயிரையும் தியாகம் செய்வர்; பின்னர் பொருள்களை மலையெனக்குவிப்பர். இந்நிலை கண்கூடாக அறிந்த ஒன்றாகும், ஆனால் இறைத்தொண்டு இயற்றுபவர் பொருளைப் பெரிதெனப் போற்றார். சமூகத் தொண்டு இயற்றுபவர், பொருள் போயின் தொண்டில் இளைப்பர். இறைத் தொண்டர் பொருள் போயின் தொண்டில் சிறப்பர். இறைத் தொண்டர்களுக்குப் பொருள்கள் மேல் பற்று இராது.

பற்று இருவகைப்படும். அவை, அகப்பற்று, புறப்பற்று. அகப்பற்று-தன்னைப் பற்றியது, புறப்பற்று-தன்னில்வேறாயமனைவி மக்கள் பொருள் முதலியவற்றைப் பற்றியது. இவ்விருவகைப் பற்றுக்களும் இறைத் தொண்டர்க்கு இல்லையாகும். இப்பற்றுக்கள் நீங்கினால்தான் இறைவனையடையலாம்.

1. சிறுத்தொண்டர் தம் ஒரே மகனைத் தாய் பிடிக்கத் தந்தையாகிய தாமே அறுத்து மகனைத் தியாகம் செய்து இறைவனுக்குப் படைத்தலாகிய தொண்டு இயற்றினார். மகன் தன்னின் வேறாயவன். இச்செயலால் இவர்கட்கு புறப்பற்று நீங்கியது. இறைவனை அடைந்தார்கள்.

2. திருநீலகண்டர் தம் மனைவியார் சூளுரைத்த காரணத்தால் இறையருள் எய்தினார். இளமையைத் துறத்தல் செயற்கருஞ் செயல். தம் மனைவியின் சூளைப் பொருள் என எண்ணித் துறத்தல் போற்றத்தக்க ஒன்றாகும். நீலகண்டர் புறப்பற்றை (மனைவி), இன்பத்தைத் துறந்ததேயன்றி தமக்குரிய இளமையின்பமாம் அகப்பற்றையும் துறந்த பெரியவராவர்.

3, கண்ணப்பர், காளத்திமலையப்பனுக்கு இரவில் காவல் இருந்து, பகலில் வேட்டையாடி, இறைச்சியைக் கொண்டு சிவ பூசை செய்துவரும்போது, ஆறாம் நாள் காளத்தியப்பர் கண்ணில் குருதி வடியக் கண்டார். மயங்கினார். தெளிந்தார். தமது கண்ணை இடந்து அப்பினார். அதனால் கண்ணப்பரானார். கண்ணப்பர் செய்த இச்செயல் செயற்கருஞ் செயலாகும். கண்ணிற் சிறந்த உறுப்பில்லை.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''.

என்பர் வள்ளுவர். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்றார்களே தவிர வேறு உறுப்புக்களுள் ஒன்றையும் கூறவில்லை. அத்தகைய கண்ணைத் துறந்தவர் கண்ணப்பர், அவர் அகப்பற்றை விட்டவராகிறார். எனவே சிறுத்தொண்டர், நீலகண்டர்,கண்ணப்பர் இம் மூவரும் பற்றுக்களை விட்டு இறைபதம்பெற்றவராவார்.

திருத்தொண்டர் புராணத்தில், நீலகண்டர், கண்ணப்பர், சிறுத்தொண்டர் என முறை வைப்பு அமையவும், பட்டினத்தடிகள், அம்முறையைப் பின்மாற்றி சிறுத்தொண்டர், நீலகண்டர், கண்ணப்பர் என முறைமாற்றியுள்ளார். புறப்பற்றை நீக்கியவர் சிறுத்தொண்டர். அவரோடு, அவர் மனைவி, பிள்ளை சீராளன் என மூவரும் சேர்ந்து தொண்டு இயற்றியதால், பட்டினத்தடிகள் இச்சீரிய தொண்டினைச் சிறப்பாகக் கருதி முன் வைத்துள்ளார். நீலகண்டர் அவர்தம் மனைவியோடு சேர்ந்து இருவராகத் தொண்டு இயற்றியதால் இரண்டாவதாக அமைத்து உள்ளார். கண்ணப்பர் தனித்து ஒருவராக இருந்து கொண்டு இயற்றியதால், மூன்றாவதாக வைத்தார்.

'வாளால் மகவரிந்துட்ட வல்லேனல்லேன்;
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேனல்லேன்;
தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந்துஅப்ப வல்லேனல்லேன்
நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தியப்
பனுக்கே.''

வாள், வெட்டுக்கருவி, அதனால் அரிந்து என்ன அடிகள் கூறியுள்ளார். சிறுத்தொண்டர் ஆட்டைவெட்டி அறுப்பது போன்றின்றி காய் கறிகளை அரிவது போன்று தமது ஒரே மகனை நடுக்கமின்றி மனஅதிர்ச்சியின்றி அரிந்தார் எனச் சிறுத்தொண்டர் செயலை அடிகள் வியந்துள்ளார்.

# வீரபாகுத்தேவர் திருத்தலம்

*நல்லாசிரியர் வெ. சுந்தரம், பரமக்குடி*

பரமக்குடியிலிருந்து: அபிராமம் செல்லும் பேருந்து மூலமாகச் செல்லும் பாதையில் கொடுமலூர் என்னும் மருதநில கிராமம் அமைந்துள்ளது. கொடுமலூர் குமரையா என அழைக்கப் பெறும் திருக்கோயில் வாசலிலேயே பேருந்து நிற்கும். இனி கோயிலைப் பார்ப்போம்.

## கோயில்:

மேற்கு முகமாய் கோயில் (வாயில்) அமைந்துள்ளது. நான்கு புறமும் சுற்றுச் சுவர் அமைய வாசலிலிருந்து மூலத்தானம் வரை ஒரே மண்டபம் அமைந்துள்ளது. மூலத்தானமோ நான்குபுறமும் கம்பிக்கிராதிகள் அமைத்து விதானம் அமைக்கப்பட்டுள்ளது. எத்திசையிலிருந்தும் இறைவனை எப்புறமும் தரிசிக்கலாம்.

## திருமேனி:

இறைவனாம் 'வீரரணபாகுத்தேவர்' நின்ற திருமேனிக் கோலத்தில் அருள்பாலிக்கின்றார். மற்ற கோயில்களில் யந்திரத்தகடு பதித்து மருந்து சாற்றிய பீடத்தில் இறையுரு அமைந்திருக்கும். ஆனால் பீடத்தில் இல்லாது தரையோடு தரையாக இறைவன் திருமேனி அமைந்துள்ளது.

இறைவனது திருவுருவம் முன்பகுதி சிற்ப சாஸ்திர விதி முறைகளின்படி அமைந்திருந்தாலும் பின் பகுதியில் வேலைப்பாடு ஏதுமின்றி தான் உள்ளது. இறைவனின் திருவுருவம் சற்று பின்பக்கம் சாய்ந்துள்ளது. இறைவனின் கண்களோ பார்வை மேல் நோக்கியதாக உள்ளது. உக்கிரமான மூர்த்தியின் பார்வை பக்தர்கள் மேல் படக்கூடாது என்ற கருணையாக இருக்கலாம்.

'குமரன்' என அழைக்கப்படும் இறைவன் முருகன் என்று எண்ணுதற்கு ஏற்ப அங்கு மயில் வாகனமோ, சிலாரூபவேல்; பலிபீடம், கொடிமரம், விநாயகர் திருஉரு போன்றவை ஏதும் இல்லாமல் இருக்கிறது. தனியாக உலோகத்தாலான வேல்சிலை மீது சாத்தப்பட்டுள்ளது. இறைவனின் திருநாமம் வீரரண பாகுத்தேவர் என்பதால் சூரபதுமனின் மகனாம் பானுகோபனை போரில் அழித்த வீர பாகுத் தேவரே இங்கு அருள் பாலிப்பவர் என்று எண்ணுதற்கு ஏற்ப அருகில் பானுகோபன் தலையும் சிலா வடிவில் இருக்கிறது. எனவே வீரபாகுத் தேவரின் திருஉருவம்தான் என உணர முடிகிறது.

## இரண்டும் ஒன்று:

ஈசனின் நெற்றிக் கண்ணில் தோன்றியவன் முருகன். ஈசனின் அம்ஸம்தான் சூரனை அழிக்க முடியும். இது சூரன் பெற்ற தவப்பேறு. சூரனையும் அவனது கூட்டத்தையும் அழிக்க வேண்டுமாயின் ஈசனது அம்ஸத்தால் மட்டுமே முடியும். நெற்றிக் கண்ணில் தோன்றிய முருகனுக்கு உதவியாக வீரபாகு உள்ளிட்ட நவ வீரர்களையும் நெற்றிக் கண்ணில் தோற்றுவித்தார். எனவே அழகுத் திருமுருகனும் ஈசனின் அம்ஸம். அதுபோலவே வீரபாகுவும் ஈசனின் அம்ஸம். ஈசனின் அம்ஸமாகிய வீரபாகுவையும் வீரமும் தீரமும் அழகும் கொண்டவனை குமரன் என்று கூறுவது (ஈசனின் குமாரன் என்பதால்) சாலப் பொருத்தமேயன்றோ!

கொடுமலூர் குமரையா என்று அன்பால் பக்தர்கள் அழைத்தாலும் வீரபாகுத்தேவர் என்ற தேவ சேனாபதியின் சேனைத்தலைவனை வணங்குவது பொருத்தமானதுதானே!

## நிவேதனம்:

முருகனின் திருக்கோயில்களில் பொங்கல் சுண்டல் போன்ற வேகவைத்த பொருள்கள் நிவேதனப் பொருள்களாக, பிரசாதமாக வழங்கப்படுகின்றன. ஆனால் கொடுமலூர்குமரையா எனப்படும் வீரபாகுத் தேவர் திருக்கோயிலிலே வேகவைத்த பண்டங்கள் நிவேதனப் படுத்துவதில்லை. மாறாகக் காப்பரிசியும் கனிவர்க்கங்களும், பச்சைப் பயறுவகைகளுமே நிவேதனப் பொருள்களாகும்,

## பூஜை:

இது மட்டுமா! முருகனின் திருத்தலங்களில் காலை பூஜை, மதியம், மாலை, இரவு அர்த்தஜாமம் போன்று பூஜைகள் நடைபெறுவது உண்டு. ஆனால் வீரரணபாகுத்தேவர் திருக்கோயிலில் இரவு மட்டுமே அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இரவு பனிரெண்டு மணிக்கு மேல்தான் அபிஷேக வழிபாடுகள் தொடங்கும். தேவர்கள் தேவகணங்கள் முனிவர்கள் பூஜைசெய்யும் உஷத் காலம் எனப்படும் காலை சுமார் நான்கு மணியளவில்தான் கோயில் பூஜை நடைபெறு



கிறது. ஆனாலும் பகலில் பக்தர்கள் இறைவனைத் தொழ வழிபாடு செய்ய அனுமதிக்கப்படுகிறது சிறப்பாகும்,

**வீரச்சங்கிலி:**

ஈசனின் அம்சமான முருகன், வீரபாகு போன்ற வீரர்கள் மார்பில் அணியும் வீரச் சங்கிலி பற்றி தமிழ்நாடு தொழில் நுட்பக்கல்வி இயக்கம் 1978-ல் வெளியிட்ட சிற்பச் செந்நூல் வெளியீடு பக்கம் 94-95-ல் உள்ள குறிப்புகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது.

நூல் குறிப்பு :(பக்கம் 94-95-ல் உள்ளவை)
வீரச்சங்கிலி:

*கழுத்தைச் சுற்றிலும் மார்பணிகளைச் சுற்றியும் உடலின் ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்குக் குறுக்கே சென்று முதுகிலும் அங்ஙனமே அமைந்த இருசங்கிலிகளின் பெயர் ''வீரச் சங்கிலி'' ஆகும். இச்சங்கிலி ஸ்தனத்திலிருந்து எட்டு விரல் அளவு கீழே தொங்கிச் செல்லும். இதற்குச்'சன்ன வீரம்' என்ற பெயரும் உண்டு.*

இச்சங்கிலிகள் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் ஒன்றை யொன்று, குறுக்கிட்டுச் செல்லுமிடத்தில் பிணையுண்டும் அமையும், அவ்விடத்திலிருந்து அரசிலை போன்ற பதக்க அணி ஒன்று தொங்கும். அதற்குத 'தூக்கம்' என்பது பெயர். இதற்கு மாறாக பூங்கொத்து தொங்குமாறும் செய்யப்படும். இவ்வீரச் சங்கிலி வீரர்களின் அணியாகும். ஆற்றலின் வடிவமான சக்திபடிவங்களிலும் அமையும். வீரனாகிய முருகனுக்கு உகந்த அணியுமாகும். முப்பிரிகளையுடைய பூணூலிலிருந்து நான்காவது நூல் ஒன்றை வலதுமார்பின் கீழ் புறத்தில் தொங்கச் சுற்றி முதுகுப்புறம் சென்று பூணூலுடன் சேரும். இதற்கு.'ஸ்தன சூத்திரம்' எனபது பெயர். முத்துச் சரமாகவோ அல்லது நூலாகவோ இதனை அமைக்கலாம்' நூலின் பருமன் ஒரு 'யவை' ஆகும்.

மேலே குறிப்பிட்ட சிற்பச் செந்நூல் குறிப்பின்படி காவடி எடுப்பவர்கள் வலது தோளிலிருந்து இடது துடை வரையும், இடது தோளிலிருந்து வலதுதுடை வரையும் மலர் மாலை அணிவதையும் ஒப்பிட்டால் இவ்வீரச் சங்கிலி முருகனுக்குரியதென உணரலாம். முருகனைப் போன்ற வீர அம்ஸமாகிய வீர ரணபாகுத்தேவருக்கும் பொருத்தமானது தானே!

**தொன்மையான ஊர்:**

மேலும் இவ்வூரின் அருகே செய்யாமங்கலம் எனும் கிராமத்தில் திரு பெருமாள் எனும் ஆன்மீக நெறியாளர் வயலில் வீடுகட்டவாணம் தோண்டும்போது கிடைத்த முதுமக்கள் தாழியினை தொல்பொருள் ஆய்வுக்குத் தந்ததோடு தனது இல்லத்தில் நினைவுக்காக ஒரு சிறிய கலயத்தையும் வைத்திருக்கிறார். இவை சுமார் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவை என ஆய்வாளர்கள் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதே ஊரில் உள்ள சிவன்கோயில் பாண்டியர் காலத்தே கட்டப்பட்டது. அக்கோயில் பற்றி ஆய்வுக் குறிப்பெடுக்கும்போதுகுமரையா கோயில் காலத்தாற் கணிக்க கால வல்லுநர் வந்து ஆய்வு கொள்ளல் வேண்டும் என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது.

**தல விருட்சம்:**

இக்கோயிலில் உடை மரம் தல விருட்சமாகும். இதன் அடிவேர் எது என்று அறிய முடியவில்லை. உடைமரக் கிளைகள் மண்ணில் பதிந்து ஆலம் விழுதுகள் தாய் மரத்தைத் தாங்குவதுபோல் அமைந்துள்ளது. உடைமர நிழலில் தங்கி இறைவனை வழிபட்டு உடை மரத்து இலைகளைப் பிரசாதமாக உட்கொள்கின்றனர். பதியனிட்டதுபோல உடைமரம் வளர்ந்து படர்ந்து நிற்பது விந்தைக்குரியதேயாகும்.

இவ்வாறு பல்வகையாலும் நோக்குங்கால் புராணம் என்பது வரலாறே! பல்லாண்டுக் காலம் செவிவழிச் செய்தியாகச் சொல்லப்பட்டதால் ஒரு சில மாற்றங்கள் இருக்க வாய்ப்புண்டு. ஆனாலும் உண்மை பழமையைத் தாங்கி நிற்பது கண்கூடு.

**செவிவழிச் செய்தி:**

நல்லுக்குறிச்சி கிராமத்திலிருந்து தவக்குடி கிராமத்திற்குக் கோயில் குருக்கள் ஒருவர் தினமும் சென்று பூஜை செய்து வருவார். போகும் வழியெல்லாம் உடை மரக்காடு—

அதில் கோவைக் கொடிகள் பின்னியிருக்கும். ஒற்றையடிப் பாதையில் சென்று வருவார்.

அதிகாலைப் போதில் அவசரமாகக்கோயில் சென்று பூஜை முடிந்து திரும்ப வேண்டிய கால கட்டம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. கதிரவன் தோன்றுமுன்னர் கடுகிச் சென்றார். இது வரையில்லாத புதுவித மணம் அவரது நாசியில் நெருடுகிறது.

மற்றைய நாட்களில் அவ்வாசம் தோன்றவில்லை. வாசம் நுகர்ந்த நேரம் நெஞ்சில் நிலைத்தது. மீண்டும் நினைவு கூர்ந்து அதே நேரம் மற்றொருநாள் சென்றார். மணம் மனத்தை நிறைக்கின்றது. குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அம்மணம் மனத்தில் நிலைக்க வைத்தது.

தன்னுடன் வீர மறவர்களைத் துணைக் கொண்டு அரிவாள், மண்வெட்டி சகிதம் சென்றார். குறிப்பிட்ட இடம் வந்தனர். மணமோ மனத்தை மயக்கியது. வந்தவர்கள் செடி கொடிகளை வெட்டிக் கொண்டே செல்கின்றனர். கோயில் குருக்கள் சென்ற திசையில் அண்மையில் ஒரு அற்புத ஆளுயர சிற்பம் கண்டார். சிலையின் முன்னே நீர்தெளித்துக் கோலமிட்டு வாழையிலையில் காப்பரிசி, பழவர்க்கங்கள் உள்ளன. பற்பல புதிய நறுமண மலர்களால் அர்ச்சிக்கப்பட்ட நிலையும் புரிகின்றது.

பறவைகள், விலங்குகள்கூட நுழைய முடியாத உடைமரக் காட்டினுள் ஆகம விதிப்படி பூசனை செய்தவர்கள் யாராயிருக்கும்? சிலை யாருடையது? புரியவில்லை. தினமும் அதிகாலை வந்து பார்க்கிறார்கள். பூசனைகள் நடைபெறவில்லை. குருக்கள் மனமுடைந்தார். தன்னால் ஒரு தெய்வ வழிபாட்டிற்குத் தடை ஏற்பட்டதே எனக் கவலை கொண்டார். உண்ணாது உறங்காது ஏக்க மிகக் கொண்டார். உண்மை பக்தரை இறைவன் கைவிட மாட்டாரே!

## கனவில் தோற்றம்:

"வேதாகமம் கற்ற நீ இவ்வாறு கலங்கலாமா! தேவர்கள் பூஜித்ததை மானிடர் கண்டபின்தேவபூஜை நின்றுவிடவேண்டும். மானிடர் அதைத் தொடர வேண்டும். மானிடர் உயர் நிலை பெற அஃதே முறை. நீயே பூஜையைத் தொடரலாம்''.

"சூரசம்ஹாரத்திற்காக குமரக் கடவுள் மழுவாயுதம் தாயிடம் பெற அகத்தியர் சொற்படி தவமியற்றிய இடமிது. சூரசம்ஹாரம் முடிந்த பின் புனிதத் தலங்களுக்குச் செல்ல யான் வந்தேன். உடைமரக்காட்டில் இங்கு தவமியற்றிய தவச் சீலர்களின் அன்புக் கட்டளைக்கேற்ப இரவில் தங்கியிருந்தேன். வேக வைக்காத பண்டங்கள் பலவற்றையும் உண்ணுமாறு தவத்திருவாளர்கள் வற்புறுத்தினர். தந்த சுத்தி செய்ய உடை மரக்குச்சையைப் பயன்படுத்தினேன். அதிகாலைப் பொழுதாகியது''.

## தூய்மை வேண்டும்

**செயல் தூய்மை**
**சொல் தூய்மை**
**உடல் தூய்மை**
**மனத் தூய்மை**
**சிந்தைத் தூய்மை**
**இவையே ஐந்து தீர்த்தங்களாகக் கொண்டு**
**அழியும் இவ்வுலகில் வாழும் நும்**
**சரணரைக் காட்டி**
**என்னைக் காப்பாற்றய்யா**
**சென்ன மல்லிகார்ச்சுனா!**

**—அக்கமாதேவி**

"முனிவர்கள் என்னை யுணர்ந்து வழிபட்டனர். இங்கேயே தங்கியிருந்து அருள்பாலிக்க வேண்டும் என அன்போடுவேண்டிக்கொள்ளவே யான் இங்கு தங்கினேன். இந்த உண்மையை உனக்குத் தெரியப்படுத்தியதால் முருகனின் சேனாதிபதியாகிய வீரரணபாகுத்தேவர் என்ற திருநாமத்துடன் அன்பர்கட்கு அருள்பாலிக்கின்றேன். கவலையை விடு''. என்று கூறி மறைந்துவிட்டார். தான் கண்டது கனவேயாயினும் காட்சிக்கும் கனவுக்கும் உள்ள ஒற்றுமை கண்டு அன்று முதல் பூஜை செய்வாராயினர்.

## பூஜைகளும் விழாக்களும்:

பிரதிமாதமும் கார்த்திகை நட்சத்திரத்திலும், கார்த்திகை மாத திருக்கார்த்திகை நாளிலும் பங்குனி உத்திரத்திருநாளிலும் வைகாசி மாத கடைசி வெள்ளிக் கிழமையில் முப்பழப்பூசையும் மிகவும் சிறப்பாகும்.

எல்லா விசேஷங்களும் இறைவனுக்கு நடு இரவில் தொடங்கி அதிகாலை நிறைவு பெறுவது குறிப்பிடத்தக்கது.

சிவனுக்குப் பூசை செய்யச் சென்ற குருக்கள் இத்திருவுருவைக் கண்டதாலும் அவரது பரம்பரையினரேஇக்கோயில் பூஜைகள் நடத்தி வருகிறார்கள்.

## நிறைவு:

பல்வேறு புலவர்களால் பாடிப் புகழ் பெற்றதும், ஏழிசை ஏந்தல், மதுரை திரு சோமசுந்தரம் பக்திப் பாடகர் திரு வீரமணி போன்றோர் கொடுமகளூர் இறைமீது பக்தி கொண்டு பாடிப்பரவியதும் தற்கால நிகழ்ச்சி. பக்தர்கள் பலர் பயபக்தியுடன் விரதமிருந்து வழிபட்டு எண்ணியவை நிறைவேறியதாகக் கூறும் நிகழ்ச்சிகள் பலவுண்டு. தெய்வபக்தியால் சக்தி வளருகின்றதைஅனுபவம் சாற்றும்.

# குடும்பம் சிறக்க வழிகள்!

**தவத்திரு வேதாத்திரி மகரிஷிகள்**

1. பொருள் ஈட்டும் திறன், வாழ்க்கை அனுபவம், இரண்டும் இணைந்தால்தான் மனிதன் வாழ்வு நன்கு நடைபெறும். குழந்தைகளுக்கு இந்த இருவகையும் தெரியாது. வயது முதிர்ந்தவர்களுக்குப் பொருள்ஈட்ட முடியாது. வாலிபப் பருவத்தினர்கள்தான் உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும். அதைக் குழந்தைகளும் முதியோர்களும் கூடித் துய்த்துக் குறையின்றி வாழ வேண்டும். இது இயற்கை நியதி. இதனை மாற்ற முடியாது. இந்த இயற்கை நியதியானது பெற்றோர், மக்கள் பராமரிப்புக் கடமையாக மாறி அது செயலாகும் கூட்டுறவு வட்டம் குடும்பம் எனப்படுகின்றது. மனித சமுதாயத்திற்கு அடிப்படைச் சிறு வட்டம் குடும்பமேயாம்.

2. பொருட்கள், இன நட்பு என்ற இரண்டைக் கொண்டுதான் எல்லா ஜீவன்களும் உயிர் வாழ்கின்றன. நட்பிலே கணவன் மனைவி உறவு மிகப் பெருமையுடையது. உடல், பொருள், ஆற்றல் என்ற மூன்றையும் ஒருவருக்கொருவர் மனம் உவந்து அர்ப்பணித்து வாழ்க்கைத் துணைவராகி இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வாழும் பெருமை கணவன்-மனைவி உறவில்தான் அதிகமாக அடங்கியுள்ளது.

3. ஒருவர் தேவைகளையும் விருப்பங்களையும் மற்றவர் மதித்து, உதவி, தன் தேவை விருப்பங்களைக் கட்டுப்பாட்டோடு முடித்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கை அறத்தைக் கணவன் மனைவி இருவருமே உயிர் போல் காக்க வேண்டும். இத்துறையில் அடையும் வெற்றியின் அளவாகவே குடும்பத்தில் அமைதியும் செழிப்பும் இன்பமும் அமையும்.

4. பொருள் ஈட்டுதலில் இருவரில் ஒருவரோ அல்லது ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வான திறமையும் பொறுப்பும் உடையவராகவோ இருக்கலாம். ஆயினும் காப்பது, நுகர்வது, பிறர்க்கிடுவது ஆகிய செயல்களில் இருவரும் சமமான பொறுப்பை ஏற்கவேண்டும்.

6. வாழ்க்கைப் பொருட்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வரும். இக்காலத்தில் கணவனோடுமனைவியும் பொருளீட்டல் துறையில் முயல வேண்டும். வருவாய் குறைவாயுள்ள குடும்பத்தில் சிக்கனத்தின் மூலம் அதை ஈடு செய்வதில் கணவனை விட மனைவிக்கே அதிகப் பொறுப்பு உண்டு.

6. காதல் காட்சிகளடங்கிய சினிமாப் படங்களை அடுத்தடுத்துப் பார்ப்பது கணவன் மனைவி உறவில் சலிப்பைத் தரும். காதல் காட்சியில் நடிக்கும் நட்சத்திரங்கள் இருவரும் பார்க்கும் ரசிகர்களுக்கு,ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் உள்ளத்தில் மானசீகக் காதலர்களாக இடம் பெற்று விடுவார்கள். அடுத்தடுத்து அந்த மானசீகக் காதலியையோ, காதலனையோ பார்க்க வேண்டுமென்று, அவர்களையும் அறியாமல் மனோவேகம் இரசிகர்களையும் இழுத்துச் செல்லும். பலர் உள்ளங்களைக் கவர்ந்து பணம் ஈட்ட வேண்டுமென்று பட அதிபர்கள் கூலிக்காக ஆண் பெண் இருவரையும் அமர்த்திக் கொள்ளுகிறார்கள்; நாணம் விட்டு நடிக்கச் செய்கிறார்கள். காதலர்களாக படக் காட்சியில் நடிக்கும் நடிகர்களுடைய கவர்ச்சியான உடைகளையும், நாணமற்ற முறைகளையும் அடிக்கடி பார்த்துப் பழகிக் கொண்ட குடும்பத்தவர்கள் தங்கள் வாழ்வில் இயல்பாக, உயர்வாக, ஒழுங்காக, அமைந்த காதல் இன்பத்தை விருப்பத்தோடு நுகர முடியாது. ஓட்டல்களில் தினமும் பல விதமான ருசிகளையுடைய சிற்றுண்டிகளை உண்டு பழகி விட்டவர்கட்கு வீட்டுச் சிற்றுண்டி போதிய சுவை தருமா? படக் காட்சிக் கவர்ச்சியிலும், மானசீகக் காதலர் உருவத்திலும் பல தடவை தன்னை மறந்து ஈடுபட்டு உள்ளத்தில் வலுவேற்றிக் கொண்டவர்களுக்கு எவ்விதம் இயற்கையான காதல் நிறைவான இன்பத்தை அளிக்க முடியும்?

7 அவரவர்கள் பிறவித் தொடர்பாக உள்ள உண்மை உருவங்கள் அவரவர்களுடைய குழந்தைகளே. அவர்கள் எதிர்காலத்தில் செம்மையாக வாழவும், குடும்பக் கடமைகளைப் பொறுப்போடு நிறைவேற்றவும், ஊருக்கும் உலகுக்கும் பயனுள்ள முறையில் நடந்து கொள்ளவும் ஏற்ற கல்வி, ஒழுக்கம், தொழில் திறம் கடமையுணர்வு இவையுடையோர்களாக ஆக்க வேண்டியதுபெற்றோர்பொறுப்பு. இந்தப் பொறுப்பை உடல், பொருள், ஆற்றல் என்ற மூன்றிலும் எந்த அளவு விட்டுக் கொடுத்தேனும் நிறைவேற்றுங்கள். கொடூரம் விகாரம் அகோரம் உடைய படங்களை வீட்டில் எந்த இடத்திலும் மாட்டி வைக்க வேண்டாம். அன்பு இன்முகம், களை இவற்றோடு கூடிய உருவப் படங்களை மாட்டிவையுங்கள். குடும்பத்தில் அமைதியும் இன்பமும் நிலவும். குழந்தைகளும், நல்லவர்களாக அழகு மிக்கோராகப் பிறப்பார்கள். வளர்வார்கள்.

8. கற்பு என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் உயிரை விடமேலாகப் போற்றக்கூடிய ஒழுக்கம், உடல் உரம், மன நலம், பொருள் வளம் மூன்றையும் காக்க வல்லது கற்பு. சந்தர்ப்ப வசமாக ஊழ்வினையால் தன் வாழ்க்கைத் துணைவரை இழந்துவிடும் ஆணோ, பெண்ணோ உற்றார் இசைவுடன் மீண்டும் மறுமணம் செய்து கொள்வதுகற்பிழத்தல் ஆகாது. முறையோடு உற்றார் சமுதாயம் ஆகியோர் அங்கீகாரத்தின் மீது நடைபெறும் மறுமணம் கற்பைக் காக்கும் அரணாகவே, ஒழுக்கத்திற்கு உட்பட்டதாகவே கருதப்படும்.

# தெய்வ மணம் கமழும் திருவாமூர்

வ. ஜோதி, எம்.ஏ., புதுப்பேட்டை.

பண்டைத் தமிழ்நாட்டில் சைவ மணம் பரப்பிய நாடுகளில் நடுநாடு மிகவும் சிறப்புடையது. இது வற்றாத வளமுடைய சோழ நாட்டிற்கும், சான்றோர்களையுடைய தொண்டை நாட்டிற்கும் நடுவில் இருந்ததால் இதனை நடுநாடு என்று ஆன்றோர் அழைத்தனர்.

இந்த நடுநாட்டில்தான் சைவ சமயத்தின் இரு சமயக் குரவர் தோன்றினர். இதனைச் சேக்கிழார்,

'மறந்தரு தீ நெறிமாற
மணிகண்டர் வாய்மைநெறி
அறந் தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ
பேருலகில்
சிறந்திரு முனைப்பாடித் திறம்பாடு சீர்ப்பாடு'
(பெரியபுராணம்)

என்று கூறுவார். ஆம் சமயக்குரவர் நால்வரில் நாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தோன்றியது இந்த நடுநாட்டில்தான்.

இத்தகைய சிறப்புடைய நடுநாட்டில்தான் 'திருவாமூர்' உள்ளது. நாவுக்கரசும், அவர் தமக்கை திலகவதியாரும் திருவவதாரம் செய்த திருத்தலம் இதுதான். சைவ சமய ஆசாரியர்கள் தோன்றிய தலங்கள் யாவும் மக்களால் போற்றி வழிபடற்குரிய புனித இடங்களாகும்,

சைவ சமயத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் நாவுக்கரசர், பழுதிலாத் தொண்டும், சீலமும் அருளே வடிவமாகக் கொண்ட தன்மையும் உடைய அவர் தோன்றிய இவ்வூர் இன்று ஓர் சிற்றூராய்க் காட்சியளிக்கின்றது.

பண்ருட்டியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வழியில் சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. பண்ருட்டி திருக்கோயிலூர் பாதையில் மடம் என்ற இடத்தில் இறங்கிக் கொண்டு பின்னர் தெற்கு நோக்கிச் சுமார் ஒரு கிலோ மீட்டர் நடந்து சென்றால் இத்திருத்தலத்தை அடையலாம்,

திருவாமூர் இயற்கை எழில் சூழ்ந்த ஒரு சிறிய கிராமம். வழி நெடுக வானளாவி நிற்கும் சவுக்கை மரங்கள்; நெல் வயல்கள்; கரும்புத் தோட்டங்கள்; எங்கு பார்த்தாலும் பச்சை பசேல் என்று வண்ணக்கோலம் பூண்டு இருக்கும்அந்த அழகுக் காட்சியைக் காணலாம். குளிர்மையும், இனிமையும் சூழ்ந்த வழி; எப்பொழுதும் வற்றாத நீர் நிலைகள்; இவற்றையெல்லாம் கண்ணுற்றவாறு நடந்தால் திருவாமூரை அடையலாம்,

ஊரின்உள்ளே சென்றால் நம் கண் முன்னே தென்படுவது சிறுசிறு வீடுகள்தான். அதைத் தாண்டிச் சென்றால் அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலயம்; பழுதுபடாமல் இன்றும் இக்கோயில் தனியழகு வாய்ந்ததாய்த் திகழ்கிறது. அன்னையின் பெயர் திரிபுரசுந்தரி. இத்தலத்தின் விருட்சம் கொன்றை. இங்கு அப்பர் சுவாமிகளுக்கென்று அமைக்கப்பட்டுள்ள தனியறையில் அவருடைய திருவுருவம் காட்சியளிக்கிறது.

இவற்றையெல்லாம் பார்த்தபின்னர் தெற்கு நோக்கிச் சென்றால் திருநாவுக்கரசர் திருவவதாரம் செய்த இடத்தை அடையலாம். ஆகா! எத்தனை குளுமையான இடம்! எழில் சூழ்ந்த சூழ்நிலை! இங்கு அப்பர்சுவாமிகளுக்கு அழகிய திருக்கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது,

அந்த இடத்தைப் பார்க்கும் பொழுதே நம் உடலெல்லாம் சிலிர்க்கிறது.

'சைவநெறி ஏழுலகும்பாலிக்கும் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர்
திருவாமூர்
(பெரிய புராணம்)

என்று சேக்கிழாரைப் பாட வைத்த இடம்: சேக்கிழார் சொன்னபடி திருவாமூர் திருவாமூர் என்றுஎன்னும் பொழுதேநெஞ்செல்லாம் இனிக்கிறது. பக்திமணம் சூழ்கிறது. தெய்வமணம் கமழும் திருவாமூர் என்று சொல்லத் தோன்றுகிறது.

அப்பரடிகள் மட்டுமா இங்கு அவதாரம் செய்தார்? தெய்வத் திலகவதியாரும் இங்கு தான் திருவவதாரம் செய்தார். அவர்களை ஈனறெடுத்த புகழனார் மாதினியார் தம்பதியரும் வாழ்ந்து புகழ் எய்தியதும் இந்தஇடத்தில்தான்.

திருநாவுக்கரசர் திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அதை அடுத்துக் 'களரிவாகை' மரம் காட்சியளிக்கின்றது. அது குடைபோல் கவிழ்ந்து அடர்ந்து நிற்கும் அழகிய தோற்றம் கண்டவர் மனதைவியக்க வைக்கும். பறவைகளின் இனிய ஒலி எப்பொழுதும் இங்குக் கேட்டுக்கொண்டே இருக்கும்.

இவற்றையெல்லாம் கண்ட பின்னர் அப்பர் சந்நிதியைக் காணலாம். அவருடைய நின்ற திருக்கோலம் கண்ணையும் மனதையும் கவரும் அற்புதக் காட்சி. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறிய அவருடைய வாக்கிற்கு ஏற்ப உழவாரத்தைக் கையில் தாங்கியே இருக்கும் கோலம்.

ஆகா! பார்க்கும் பொழுதே ஒரு பரவசத்தை ஏற்படுத்தும் திருமேனி. ஒளி சிந்தும் முகம், அருளொழுகும் கண்கள்; சிவபெருமானை எண்ணியே வாழ்ந்த நெஞ்சு; துறவுக் கோலம், சிவ வேடம் தாங்கிய பொலிவு, அந்த இடத்தை விட்டு நகர முடியாத அளவு நெஞ்சு கனக்கிறது.


அப்பெருமான் பிறந்த அப்புண்ணிய பூமியைத் தொட்டு வணங்க வேண்டும் போல் ஓர் உள்ளுணர்வு:

'இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்,'
(காஞ்சி புராணம்)

என்ற சிவஞான முனிவரின் வாக்கு நினைவிற்கு வருகிறது. பார்ப்பவர் கண்களில் நீர்துளிர்க்க வைக்கும் எழிற்கோலம்.

அடுத்து இருப்பது திலகவதியார். அந்தத் தவச் செல்வியைக் காணும் பொழுதே கண்களில் நீர் முட்டி விடும். திருநாவுக்கரசர் பிற சமயம் சென்றபோது, தன் தம்பியைச் சைவ நெறிக்கு மீட்டுத் தர வேண்டும் என்று அதிகை பெருமானிடம் வேண்டி அதனைப் பெற்ற அந்த நிலை நம் நினைவிற்கு வருகிறது. சிவ நெறியில் நின்று வழிபாடு செய்த கோலத்துடன் அவர் நிற்கிறார். அவரை அடுத்துப் புகழனார், மாதினியார் தம்பதியரின் தனி உருவங்களை வணங்கலாம். அவர்கள் செய்த பெரும் தவம் அல்லவா இன்றைய சைவத்தின் வளர்ச்சி.

இத்தனைச் சிறப்புகளையும் தன் அகத்தே கொண்ட இடம் இன்றும் சிறிய அளவிலேயே காணப்படுகிறது. நாவுக்கரசர் பெருமையை நாளும் நவின்றிட அங்கு ஓர் அழகிய மேடையையும் தற்காலத்தில் அமைத்துள்ளனர்,



தாம பிறந்த மண்ணில் உள்ள சிவபெருமான் பற்றிய அப்பரடிகளின் தேவாரப்பாடல் நமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் அவர் பாடிய பசுபதி திருவிருத்தம் என்ற பாடல்கள் இங்குள்ள இறைவனைக் குறித்தே பாடப் பெற்றன என்பது ஆன்றோர் தம் எண்ணம்.

"உடம்பைத் தொலைவித்து உன்பாதம்
தலை வைத்த உத்தமர்கள்
இடும்பைப் படாமல் இரங்கு கண்டாய்
இருளோடச் செந்தீ
அடும்பொத் தனைய அழல்மழுவா!
அழலே உமிழும்
படம் பொத்த அரவு அரையாய் எம்மை
ஆளும் பசுபதியே.''

என்கிறார். இருளை ஓடச் செய்யும், அடம்பு போன்ற தீ மழுவை ஏந்திய பெருமானே! அழலை உமிழ்கின்ற பாம்பினைக் கச்சாக அணிந்திருக்கும் பெரியோனே! எம்மை ஆண்டு அருள் செய்கின்ற பசுபதியே! இனி வரும் பிறப்பைத் தொலைவித்து, உம்முடைய திருவடிகளையே எப்பொழுதும் தன் தலை மேல் வைத்துக் கொண்டாடி வரும் அடியார்களுக்கு துன்பம் நேராத வண்ணம் அவர்களைக் காத்தருள்வாயாக!'

என்று அடியார் பொருட்டு இறைவனை வேண்டுகிறார். சிறிய ஊராயினும் இன்று அவ்வூர் தெய்வ மணம் கமழ்ந்து வருகிறது. காண்பவர் நெஞ்சையெல்லாம் அள்ளுகிறது. சைவராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கண்டு நெகிழ்ச்சி அடைய வேண்டிய திருத்தலம் திருவாமூர். ஆம். அது தெய்வ மணம் கமழும் திருவாமூர் .

# ஆழ்வார்களின் அறிவுரைகள்

திருக்குடந்தை
சௌரிராஜ திருவேங்கடத்தான்

பரம புருஷனுடைய திருக்கல்யாண குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவர்களை ஆழ்வார்கள் எனக் கொண்டாடுகின்றோம். வட மொழியில் உள்ள வேத சாரங்களை நமக்குப் புரியும் வகையில், தெளிவாகத் திராவிட மொழியில் அருளிச் செய்த பெருமை, அவர்களையே சாரும். அதற்கும் மேலே எம்பெருமானுடைய அவதார விசேஷங்களைப் பல படிகளில் பேசியிருக்கிறார்கள். பகவான் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்களின் சிறப்பையும், இயற்கை வளங்களையும், கவிச்சுவையுடன் அழகாக அனுபவித்து உள்ளார்கள். இனி எல்லாவற்றுக்கும் மேலாக நம் சித்தாந்தத்தின் ஆணிவேரான அருளிச் செயலில் நம் எல்லோருடைய தினசரி வாழ்வு நன்கு மலர அவர்கள் காட்டிய பல அறிவுரைகளில் முக்கியமான பொதுவான சில வற்றைக் காண்போம்.

பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதியில் பல அரிய போதனைகளை அன்புடன் நமக்கு அளிக்கிறார். நம்மனத்தைக் கண்ட விஷயங்களில் நாடாமல் இருக்கச் செய்யவேண்டும் என்பதை 'தெளியாத உள்ளத்தைச் செந்நிறீஇ—ஞானத் தெளிவாக நற்குணர்வார் சிந்தை' எனவும் பிறர் பொருளுக்கு ஆசைப் படக்கூடாது என்பதை 'நயவேன் பிறர் பொருளை நள்ளேன் கீழாரோடு' என்றும், அடக்க முடியாத இந்திரியங்களை நாம் அடக்க வேண்டும் என்பதை 'அரிய புலன் ஐந்தடக்கி' எனவும் அருளிச் செய்கிறார்.

பூதத்தாழ்வார் தம் இரண்டாம் திருவந்தாதியில், சிற்றின்பங்கள் விடத் தகுந்தவை என நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்பதை 'அறிந்து ஐந்தும் உள்ளடக்கி' எனக் கூறுகிறார். உலகில், நமக்கு நிகரில்லை என அகங்காரம் கொள்ளக் கூடாது. அப்படி அகங்காரம் கொண்டால், கடைசியில், அது தாழ்விலே கொண்டு நம்மைச் சேர்ப்பிக்கும் என்பதை 'சிறியார் பெருமை சிறிதின் கண் எய்தும்' என்கிறார். மேலும் நிலையில்லாச் செல்வத்தைக் கொண்டு, இறுமாப்புக் கொள்ள வேண்டாம். அது தீமையை விளைவிக்கும் என்ற கருத்தை பிரதிபலிக்கும் வகையில், 'எமக்கென்று இருநிதியம் ஏமாந்திராதே' என வலியுறுத்தி அருளுகிறார்.

பிரபன்ன ஜநகூடஸ்தருமான நம்மாழ்வார், பல அவசியமான உபதேசங்களை நமக்கு அருள் கூர்ந்து வழங்குகிறார் தம் திருவாய்மொழியில், அதில் தலையான கருத்து ஒன்று. அவர், அவர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களை ஞான, நிலைக்கு ஏற்றவாறு வழிபடுங்கள் என அழுத்தமாகப் பேசுகிறார்கள். அந்த அருள் வாக்கைப் பின்பற்றினால் மதக் கலவரங்களுக்கு வழியே இல்லை. வேற்றுமையில் ஒற்றுமையை அற்புதமாகக் கற்பிக்கிறார்.

'அவரவர் தம தமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் என அடியடைவர்கள்,
அவரவர் இறையவர் குறைவிலர்''

இந்த பரந்த, சீர்மையான அருளுரையை, ஆழ்வாரைத் தவிர யாரால், மனம் உகந்து பேச முடியும். அடுத்து வாழ்வு நிலையற்றது என்பதை 'மின்னின் நிலையில் மன்னுயிர் ஆக்கைகள்' என்கிறார். நான், எனது என்ற அகங்கார மமகாரங்களை விட வேண்டும் என்பதை 'நீர் நுமது என்றிவை-வேர் முதல் மாய்த்து'' எனவும், எல்லோருக்கும் நல்லது நினைத்தால் வீழ்ச்சிக்கு — பாவத்திற்கு — நரகத்திற்கு இடமே இல்லை என்பதை ''நலமென நினைமின் நரகழுந்தாதே' என அருளுகிறார்-நல்ல எண்ணங்களோடு, நற்காரியங்களைப் பிறருக்குச் செய்யவும், தாழ்வான கெட்ட எண்ணங்களுடன், பிறருக்குத் தீமை செய்யக் கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில்'சிறியன நினையன்மின் கீழ்மை செய்யாதே' என்கிறார். திருட்டு, பிறரை ஏமாற்றுதல் போன்ற தவறான செய்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதை 'சூதென்று களவும் சூதும் செய்யாதே' என்றும், அடியார்களிடத்தில் ஈடுபாடு கொண்டு, நல்லோருக்குத் தொண்டு செய்யவேண்டும்என்பதை'அடியார் அடியார்தம்அடியார் தமக்கு-அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே' என்று உபதேசிக்கிறார்.

குலசேகரப் பெருமாள், பெருமாள் திருமொழியில் நிலையற்ற வாழ்க்கையை, நிலையாக கருதாதீர்கள் என உரைக்கிறார். அதாவது உடம்பே, சரீர இன்பமே, உண்மையானவாழ்வு என நினைக்காதீர்கள் எனபதை 'மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்—இவ் வையந்தன்னொடும் கூடுவதில்லையான்'- என அருள்பாலிக்கிறார்.

'மறம் திகழும் மனமொழித்து வஞ்ச மாற்றி
ஐம்புலன்களடக்கி இடர்ப்பாரத் துன்பம்
துறந்து-இருமுப்பொழுதேத்தி எல்லையில்லாத்
தொன்னெறிக்கண்—நிலை நின்ற
தொண்டரான
அறன் திகழும் மனத்துவர் கதியை''

என்று நமக்கு எடுத்துக் காட்டுகிறார், அரங்கத்தில்.

பெரியாழ்வார், தாம் அருளிய திருமொழியில் வாழ்க்கை, ஒழுக்க நெறியோடு இருக்க வேண்டும். காரணம், வாழ்க்கையில் இறுதிக் கால நிலைமையை பல பாசுரங்களில் அருளிச் செய்து, நம் எல்லோரையும் ஜாக்கிரதையாக, நல்ல வழிகளில் இறைவனிடத்தில் ஈடுபடச் சொல்லுகிறார். அப்படி எச்சரிக்கை செய்யும் பாசுரத்தில், வாழக்கையின் கடைசி நிலைமையைப் பின்வருமாறு உணர்த்திப் பேசுகிறார்' 'வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப வார்ந்த நீர்க்குழிக் கண்கள் மிழற்ற' மேலும், பெரியாழ்வார், மனம், ஐம்புலன்களையும் அடக்கி வாழ்வில் நற்குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறருடைய நிறைவு கண்டு பொறாமைப்படக்கூடாது; கொடைத் தன்மை கொள்ள வேண்டும் என்பதை 'குற்றமின்றிக்



குணம் பெருக்கி குருக்களுக்கு அனுகூலராய்— செற்ற மொன்றுமிலாத வண் கையினார்கள் வாழ'' என்று உரைக்கிறார் அவர். திருமகளாரான ஆண்டாள், திருப்பாவையில், நாம், நம் பெரியோர்கள் செய்யாதவற்றை செய்யக் கூடாது எனக் கூறுகிறார். மேலும் பிறருக்குக் கெடுதலைத்தரும்,கோட் சொற்களைச் சொல்லக் கூடாது. அடுத்து, தகுதியை முன்னிட்டும், ஏழ்மையை உத்தேசித்தும் தக்கவாறு தருமம் செய்ய வேண்டும் என்பதை 'செய்யாதன செய்யோம்-தீக்குறளைச் சென்றோதோம், ஐயமும்-பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி' என்று அருளிச் செய்கிறார்.

திருமங்கை மன்னன், தம் பெரிய திருமொழியில் வாழ்வின் நிலையாமையை, நம் நெஞ்சைத் தொடும் வகையில் 'ஆற்றங்கரை வாழ் மரம் போல் அஞ்சுகின்றேன்.' 'பாம்போடு ஒரு கூரையிலே பயின்றார் போல்' என்கிறார். பிறர் பொருளுக்கு, பிறர் மனைவிக்கு ஆசை கொண்டு திரிந்தால், அவர்கள் நரகத்தில் தள்ளப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்ற கருத்தைத்தெரிவிக்கும் வகையில் 'வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர் பொருள், தாரம் என்றிவற்றை நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி' என்ற பாசுரத்தில் எச்சரிக்கை விடுக்கிறார்.

ஆக, இப்படி ஆழ்வார்கள் உபதேசித்த பொதுவான அறிவுரைகள் சிலவற்றை அறிந்து அவைகளைப் பின்பற்றினால், உலகில் ஜாதி, மதம், தேசம் மற்ற எந்த வேறுபாடுகள் இருந்தாலும், யாவரும் ஒற்றுமை அடைந்து வாழ்வில் வளம் பெறுவது திண்ணம்.

— — —

# சிங்கப்பிரான் பெருமை

புலவர் **வன்னியப்பன்**, கீழத்திருத்தங்கல்

## முன்னுரை

சென்னை மாநகரில் குரோம்பேட்டை ஆழ்வார்பேட்டை, இராயப்பேட்டை போன்ற பல பேட்டைகளில் சைதாப்பேட்டை என்பது ஒன்று. திருவான்மியூர் ஸ்தலபுராணத்தில் 'சதயு' என்ற அரசன் ஆண்டதால் சதயுப் பேட்டை என்பது பின்னால் சைதாப்பேட்டை யாக மாறியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'சைதன்ய முனிவர்' வழிபட்டு அருள் பெற்ற தால் சைதாப்பேட்டை என்று பெயர் பெற்றது என்பர் ஒரு சாரார். 'சையத்' என்ற முஸ்லீம் மன்னன் ஆண்டதால் சையத்பேட்டை என்பது பின்னால் சைதாப்பேட்டையாக மாறியது என்பர் பிறிதொருசாரார். அவன் காலத்தில் கட்டிய மசூதி இன்றும் இருப்பதால் மசூதித் தெரு என்ற பெயரை ஒரு தெரு தாங்கி வரு கிறது என்றும் கூறுவர். இப்பேட்டையில் பல கோவில்கள் அமைந்துள்ளன. காரணீசுவரர் எனனும் சிவன்கோவில், செங்குந்தக்கோட்டம் என்னும் முருகன் கோவில், கடும்பாடி என்னும் அம்மன் கோவில், சிங்கப்பெருமாள் கோவில் ஆகியவை.

## பிரசன்ன வேங்கட நரசிம்மர்

சுமதி முனிவரின் அருந்தவத்திற்கு இரங் கிய வடவேங்கடப் பெருமாள் பாரதப்போரில் அருச்சுனனுக்குப் பார்த்தசாரதியாக விளங்கிய நிலையில் திருவல்லிக்கேணியில் சுமதி முனி வர்க்குக் காட்சியளித்தார். இதே பெருமாள் மீண்டும் சுமதி முனிவரின் வேண்டுக்கோளுக் கிரங்கி இத்தலத்தில் நரசிம்ம மூர்த்தியாகப் பிரசன்னமானார். ஆகவே இங்கு எழுந்தருளிய பெருமாளுக்குப் பிரசன்னவேங்கட நரசிம்ம சுவாமி எனப் பெயர் ஏற்பட்டது. திருவல்லிக் கேணிப் பார்த்தசாரதிப் பெருமான் சைதாப் பேட்டை திருவிழாவிற்கு ஆண்டுக்கொருமுறை எழுந்தருளுதல் வரலாற்றுத் தொடர்புடைய தாகும்.

## சிங்கப்பிரான் பெருமை

பெருமாளின் அவதாரங்கள் பத்து. இவ் வவதாரங்களினுள்ளே பல தத்துவங்கள் நிறைந்துள்ளன. அடியவர்களின் பக்திப் பெருக்கை உலகறியச் செய்வது, அவர்களுக்குச் சோதனையைத் தந்து புடம்போட்ட பொன் னாக மாற்றுவது; அவர்களுடைய பக்தி வைராக்கியத்தை பாமரர்களும் அறியச் செய் வது என்பது மாலின் கருணைத் திறனாகும். அடியார்கள்பால் அருளுதலை 'ஆச்ரித அனுக் கிரக சீலம்' என்றும், அடியார்களின் பகைவர் களை ஒறுத்தலை 'ஆச்ரித விரோத நிக்கிரக சீலம்' என்றும் குறிப்பிடுவர். இவ்விரு சீலங் களுக்கும் அடித்தலமாக விளங்குபவர் சிங்கப் பெருமானேயாவார்.


இக்குறிப்பு அமைய நம்மாழ்வார் அருளிய அரும்பாசுரம் வருமாறு:

எங்கும் உளன்கண்ணன் என்ற
மகனைக்காய்ந்து
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன்
வீயத்தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை
ஆராயும் சீர்மைத்தே''.

இரணியன்பெருமாளை இகழ்ந்ததால்அவனைத் தண்டித்தார் என்று கூறுவதைவிட பெருமாள் தமது அடியாரைத் துன்புறுத்தியதால்தான் இரணியன் தண்டிக்கப்பட்டான் என்பதே பெரி யோர் துணிபு. இதற்குச் சான்றாக பொய்கை யாழ்வாரின் கூற்று இதோ;

''வரத்தால் வலி நினைந்து மாதவநின்பாதம்
சிரத்தால் வணங்கானாம் என்றே உரத்தினால்
ஈரரியாய் நேர் வலியோன் ஆய இரணியனே
ஓரரியாய் நீ இடந்தது ஊன்''.

என்ற பாடல் சிந்தனைக்குரியது. இறைவ னிடம் இரணியன் வரம் கேட்டபொழுது தேவர்களாலோ மனிதர்களாலோ மரணம் ஏற் படக்கூடாது என்று கேட்டதால் பெருமாள் மனித உடலும் சிங்கத்தலையுடனும் தோன்றி னார். பகலிலோ அன்றி இரவிலோ மரணம் ஏற்படக்கூடாது என்பதால் அந்திநேரத்திலும் எந்தவித ஆயுதங்களாலும் மரணம் கூடாது என்பதால் நகங்களாலும், வானிலோ, அன்றி மண்ணிலோ மரணம் கூடாது என்று கேட்ட தால் வாயிற்படியிலும் அமர்ந்து இரணியனைத் தண்டித்தார். இதைக்கூட பகைவனுக்கு இறை வன் காட்டும் அருட்பண்பு என்று கூறலாம். துஷ்டநிக்ரகம், சிஷ்ட பரிபாலனம் என்ற



இரண்டும் இறைவனின் இன்றியமையாத பண்புகள்.

''நாட்டோரை உயர்பு கூறினன்
செற்றோரை வழி தபுத்தனன்''

என்பது புறநானூறு. இவ்விரு பண்புகளையும் சிங்கப்பெருமான் இவ்வவதாரத்தில் வெளிப் படுத்தினார்.

''தோற்றக்கேடவை இல்லவன்
உடையான் அவனொரு மூர்த்தியாய்
சீற்றத்தோடு அருள் பெற்றவன்
அடிக்கீழ் புகநின்ற செங்கண்மால்''

என்பது திருவாய் மொழிப் பாசுரம்.

இரணியன் பக்கல் சீற்றமும், செல்லாநிற்க பிரகலாதாழ்வானுக்குக் கிட்டாலாயிருந்தபடி எங்ஙனே! என்று சிலர் கேட்க 'சிம்மம் யானை மேலே சீறினாலும், குட்டிக்கு முலை உண்ண லாம்படிஇருக்குமன்றே! என்றுஎம்பெருமானார் அருளிச் செய்தார். ஆச்ரிய வாத்சல்யத்தாலே அவர்கள் விரோதிகள் மேலே சீறினசீற்ற மானால் பின்னை ஆச்ரிதர்களுக்கு அணைய ஒண்ணாதபடி இருக்குமோ! என்று அருளிச் செய்தார். நிக்ரகம், அனுக்ரகம் என்ற இரண்டையும் ஒருசேர நிகழ்த்தியருளிய திறன் சிங்கப்பெருமானுக்குப் பெருமை.

சிங்கப்பிரான் பெருமையை நம்மாழ்வார் கூற்றால் பார்க்கலாம்.

''உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன்
அகல்மார்பு கீண்ட என்
முன்னைக்கோளரியே! முடியாதது என்!
எனக்கே''

என்பது பாசுரம், இப்பாசுரத்தில் உன்னை இகழ்ந்த இரணியன் என்ற இடத்தில் உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன் என்று குறிப்பிட்டிருப்பது நுண்ணிய பொருட் செறிவு உடையது. இறைவன் அன்பர்களுக்கு அருள் செய்தும்,அன்பற்ற கொடியவர்களை ஒறுத்தும் வருகின்றான். இவ்வாறு செய்யுங்கால் அடி யார்களின் பேரன்பின் திறத்தை எதிர்பார்த்து அருள் செய்வதில்லை. பொய்யே புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாய் கொள் வோனே!' என்றபடி போலி அன்பிற்கே மகிழ்ந்து இறைவன் இன்னருள் புரிகின்றான். பகைவர்களை ஒழிப்பதிலும் மேலுக்குத் தோன்றுகின்ற பகைமையைக் கொண்டு ஒறுத்து விடுவதில்லை. அவர்கள் உள்ளத்தி லும் பகைமை உணர்வு இருக்கிறதா? என்று கண்டபின்னர்தான் அவர்களை ஒறுக்கிறான். நலம் செய்வதாயின் எதையும் ஆராயாமலேயே செய்யலாம். தண்டிக்கும் நிலை வந்துவிட்டால் தீரத்தெளிய ஆராய்ந்த பின்னரே தண்டிக்க வேண்டும். 'ஊந்தொட்டு இரணியன் ஒண் மார்பு அகலம் பிளந்திட்ட' என்ற பெரியாழ் வார் திருமொழியிலும் 'ஊநதொட்டு' என்று வருவது இக்கருத்தினை அரண் செய்வதாகும்.

**முடிவுரை**

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிங்கப் பெருமான் தன்னை விரும்பி வரும் அடியார் களுக்கு அவர்கள் வேண்டுவதை நல்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். அத்துடன் அடியவர்களின் உள்ளத்தில் உள்ள அசுர சக்தியை அழித்து, ஆன்மீக ஒளியைப் பாய்ச்சு கிறார். இத்தகைய பெருமானின் திருவடித் தாமரைகளை வணங்கி வாழ்த்துவோமாக!.

''நாதனை நரசிங்கனை நவின்று
ஏத்துவார்கள் உழக்கிய
பாததூளிபடுதலால் இவ்
வுலகம் பாக்யம் செய்ததே''.

(பெரியாழ்வார்)

# வாழும் நெறி ஈய வா!

கவிஞர் மு. வில்லவன்

திருவேங் கடமலையின் தெய்வமாம்; நாளும்
திருப்பாதம் கண்டுதுதிப்போர்க்குத்-திருவாக்கு
நல்கி நலம்பல செய்பவன்; எஞ்ஞான்றும்
நல்வழி காட்டுவான் நன்கு.

ஏழுமலைக் கப்பால் எழிலோடு வீற்றிருப்பான்
ஏழுமலையான் பேர்கொண்ட அப்பனவன்:—
ஊழியால்
துன்புற்றோர் இன்னல் களைபவன்;
என்றென்றும்
நன்னெறி காட்டுவான் நன்கு.


தாமரை மங்கை மணவாளன்; சீர்மிகு
பூமியைக் காத்தோன்; வினைதீர்த்தோன்;—
சேமமுற
வேண்டும் வரமளிப்போன்; தஞ்சம்
அடைந்தவர்க்(கு)
யாண்டுமிடர் தீர்ப்போன் அவன்.

சேயாய் மலரடி பற்றுவான் தீவினையைத்
தாயாய் இருந்து தினம்தீர்ப்பான்;—காயாய்
வெறுக்காது காலம் அறிந்துவினை மாய்ப்பான்
உறுதுணையாய் நிற்பான் அவன்.

அலைகடல் மீது துயில்வான்; அகிலம்
நிலைகொள தாங்குவான்; செய்யும்-பிழை
பொறுப்பான்
நாடிபிணி போக்கி நலங்காப்பான்; ஓதிதினம்
தேடுமடி யார்க்கவன் காப்பு.

மனநிறைவு வேண்டி மலர்ப்பாதம் போற்றி
தினமுனை நாடிவரு வோரைக்-கனிவுடனே
வன்னெஞ்சை நீக்கி வரம் தருவான் மாலவன்:
நன்னெறி ஈவான் நனி.

பூவாலே சொல்லாலே பூசிக்கும் பக்தனைக்
காவாது போவானோ கோவிந்தன்—நாவாலே
நாளும் திருநாமம் ஓதுவாரை எற்றென்றும்
வாழும் நெறியீவான் வந்து.



அலர்மேலு மங்கையை ஏற்றவன்; ஆண்டாள்
மலர்சூட தாழ்ந்தவன்; தொண்டன்-நலங்காக்க
பக்கம் இருப்பவன்; உள்ளயிருள் நீக்குபவன்;
பக்தனுக் கீவான் பலன்.

சுட்டாலும் பால்சுவை குன்றாது; சோதனையில்
பட்டாலும் தன்மனம் மாறாது—கட்டான
உள்ளமுடல் ஈந்து புலனடக்கம் தான்தருவான்;
கள்ளமிலா வாழ்வளிப்பான் காண்.

திருப்பதி மாலவனே; குன்றத்துச் செல்வா;
திருவிழைந்து வேண்டுவோர்க்குத் தூய—
நெறிதந்(து)
அருள்காட்டி ஆள்பவனே; வாழ்வு வளங்காண
கரங்கூப்பிப் போற்றுவாரைக் கா.

# இராமானுஜரும் - அனந்தாழ்வாரும்

புலவர் ஆ. சுப்பிரமணியன்

பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், எது நடந்தாலும் இறுதியில் நன்றி நவிலல் என்ற சம்பிரதாயம் உண்டு. பெரும்பாலும் நன்றி நவிலலில் பங்கேற்பவர் சாதாரணமானவராகத் தானிருப்பார். அவர் எழுந்து பேச ஆரம்பித்த வுடன் அனைவரும் எழுந்து போய்விடுவார்கள். இது இன்றைய முறை. ஆனால் சுமார் 850 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

இராமானுச சுவாமிகள் ஸ்ரீரங்கத்தில் இருந்து புறப்பட்டுப்பல திருத்தலங்களையெல் லாம் தரிசித்து விட்டு காஞ்சிபுரம் சென்ற டைந்தார்கள். அங்குப் பெருந்தேவித் தாயா ரோடு உடனுறை தேவப் பெருமாளையும் தரி சித்து வந்தார்கள். அது போழ்து திருவேங்கடப் பெருமானைத் தரிசிக்க உளங்கொண்டு அன் பர்கள் சூழக்காஞ்சியினின்றுபுறப்பட்டுத் திருப் பதி அடைந்தார்கள். சுவாமியின் வருகையைச் செவிமடுத்த ஆன்மீகப் பெருமக்கள் எதிர் சென்று சிறப்பாக வரவேற்றார்கள். பின்னர் ஒரு நாள் அன்பர்கள் குழுமி வந்து இராமானு சரைப் பணிந்து 'நாங்கள் உய்யும் பொருட்டு தங்களின் மேலான உபதேசத்தைக் கேட்ப தற்கு ஆவலுடனிருக்கிறோம்' என்று வேண்டி நின்றார்கள். அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி இராமானுச சுவாமிகள் உபதேசத் தைத் தொடங்கினார்கள்.

''அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கையுறை மார்பா!
நிகரில் புகழாய்! உலகமே! மூன்று
உடையாய்! என்னை ஆழ்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே!
புகல் ஒன்றில்லா அடியேன் உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''!

என்ற நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரத்திற்கு உரை சொன்னார்கள். அது போழ்து துவயம் என்னும் மந்திரத்தின் பொரு ளையும் இணைத்து விரிவான சொற்பெருக் காற்றினார்கள். சுவாமிகளின் சொல்லாற்ற லால் அன்பர்களின் உள்ளங்கள் நெகிழ்ந்தன. வார்த்தைகள், வார்த்தைகளின் கதி, பொருள் உணர்ச்சி கேட்பவர்களின் உள்ளத்தில் பதிந்து விட்டன. அந்த அன்பர்களின் மத்தியில் அனந்தாழ்வான் என்ற ஆன்மீகச் செல்வர் அமர்ந்திருந்தார். அவர் சுவாமிகளின் சொற் பொழிவில் தன்னையே மறந்து லயித்திருந்த வர் நன்றியுரை கூற முன் வந்தார் அவர்.

''பெருகுமத வேழ மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி அருகிருந்த
தேன்கலந்து நீட்டுந்திரு வேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை''.

என்ற பூதத்தாழ்வார் பாசுரத்தை அடிப்படை யாகக் கொண்டு நன்றியுரையைத் தொடங்கி னார்.

மதநீர் பெருக்கெடுத்துள்ள ஆண்யானை தனது பெண் யானைக்கு இனிய உணவைக் கொடுக்க விழைகிறது. அது மூங்கில் மரத்திலுள்ள குருத்தை முறித்துத் தேனிலே தோய்த்து பெண் யானையின் வாயிலே ஊட்டுகின்ற மலையே நீல மேக வண்ணனான திருவேங்கடத்தான் வதியும் மலையாகும் என்பது இப்பாசுரத்தின் பொருள்.


அனந்தாழ்வார் இப்பொருளை உள்ளு றையாகக் கொண்டு 'நம்மாழ்வாரின் திருவாய் மொழியின் ஆனந்தம் என்னும் மதநீர் பெருக் கப் பெற்ற இராமானுசயானை அன்பர்களாகிய பிடியானைகளுக்கு துவயம் என்னும் முற் றொடர் பிற்றொடர் ஆகிய இருகண் மூங் கிலை வளைத்து அக்குருத்தை எட்டெழுத்து மந்திரம் என்ற தேனில் கலந்து ஊட்டிய திருவேங்கடமலையே திருமாலின் மலை யாகும் என்று பொருத்தி அழகுறப் புனைந்து கூறியருளினார்கள் என்று தமது நன்றியுரை யில் கூறியதைச் செவிமடுத்த ஆன்மீகப் பெரு மக்கள் புகழாரம் சூட்டினார்கள்.

பெருகுமதவேழம் என்பது இராமானுச் சுவாமிகளையும், பிடி அன்பர்களையும், இரு கண் இளமூங்கில் முற்றொடர், பிற்றொடர் ஆகிய துவயம் என்னும் மந்திரத்தையும், தேன் திருஎட்டெழுத்து மந்திரத்தையும் இணைத்துக் கூறிய பாங்கு போற்றுதற்குரியது.

''எய்தற்கு அரியமறைகளை
ஆயிரம் இன்தமிழாற்
செய்தற்கு உலகில் வரும்சட
கோபனைச் சிந்தையுள்ளே
எய்தற்குஇசையும் பெரியவர்
சீரை உயிர்களெல்லாம்
உய்தற்குதவும் இராமா
நுசன் எம்உறுதுணையே''!

என்று இராமானுசரின் திருவடிகளுக்கு வணக் கம் கூறி இராமானுசரின் சொற்பெருக்கின் நயமா! அனந்தாழ்வாரின் நன்றி நவிலலின் நயமா! உள்ளத்தை ஈர்ப்பது எது என்பதை ஆன்மீகப் பெரியோர்கள் சிந்திப்பார்களாக!

இராமானுசரின் திருவடிகளே
சரணம்.



# சமரச நெறி பரப்பும் இந்து மதம்

**கவிஞர் காசி. எம்.ஏ., எம்.எட்,**

பசுமையான பக்திநெறி வளமூட்ட, அமுத இலக்கியச் செல்வங்கள் அணிசெய்ய, பழமைச் சிறப்போடு பொலிவுற்று விளங்குவது இந்துமதமாகும். ஒன்றோடொன்று மாறுபட்ட உட்சமயங்களும், முரணான கோட்பாடுகளும் கொண்டு வளர்ந்துவரினும், ஒருமைப்பாட்டுணர்வை மக்களிடையே வலியுறுத்தும் உன்னத மதமாக இந்துமதம் சிறப்புறுகிறது. உலக அறிவும், குருமொழியும், திருமறை வாக்கும் அடங்கிய மதக் களஞ்சியமாகத் திகழ்வது இந்து மதமாகும்.

பிற மதங்களிடம் பொறாமை கொள்ளாமல், நட்புணர்ச்சி காட்டி, உலக அரங்கில் உயர்ந்த இடத்தை இந்து மதம் பெற்றுள்ளது. எல்லா மதங்களும் சம்மதமே என்ற கருத்தினை உலகிற்கு எடுத்தோதும் பணியை இந்து மதம் செய்து வருகிறது. பிற மதங்களின் தாக்கலினாலோ, அந்நியர் ஆட்சியினாலோ இந்து மதம் சிதைவுபடாது. மற்ற மதங்களையும் தன் நிழலில் அடக்கியாளக் கூடிய துணிவைப் பெற்றுள்ளது இந்து மதம். எனவே இந்தியப் பண்பாடு இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டுளளது எனலாம்.

இந்து மதத்திற்குச் சனாதனம் என்ற பெயரும் உண்டு. சனாதனம் என்பதற்குப் பழமை என்றே பொருளாகும். பஞ்சாபிலுள்ள ஹரப்பா, சிந்துவைச் சேர்ந்த மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொன்மையான சின்னங்களைக் கொண்டு திராவிடப் பண்பாட்டின் செம்மையை அறிய முடிகிறது. அதேபோல் தமிழகத்தில் புதை பொருளாய் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள், மண் பாண்டங்கள், சிந்து வெளியில் பயன்படுத்தப்பட்ட பொருள்களோடு ஒத்திருப்பதை அறிகின்றோம். இதனால் இந்தியாவில் ஆரியர்க்கு முன், பணபாடுமிக்க திராவிடர்கள் வாழ்ந்தனர் என்றும், அவர்களின் கடவுள் கொள்கையே இந்து மதத்தில் நுழைந்து வளர்ந்ததுஎன்றும ஜான் மார்ஷல் என்னும் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்.

இந்து மதத்திற்கு அடிப்படையான நூல்களாக வேதங்கள் திகழ்கின்றன. அவை ரிக், யசூர், ஸாமம், அதர்வணம் ஆகும். ஞான நிறைவும் கவித்திறனும் படைத்த ரிஷிகளின் தவநிலையில் கிடைத்த பொக்கிஷங்களே அந்த நான்கு வேதங்கள் ஆகும்.

நான்கு வேதங்கள் அனைத்தும் நான்கு உட்பிரிவுகளைப் பெற்றுச் சிறப்படைந்துள்ளன. அப்பிரிவுகள் சம்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் ஆகும். இறைவன் புகழ்பாடும் பாக்களைக் கொண்டது சம்கிதை. வழிபாட்டு முறைகளை எடுத்தியம்புவது பிராமணம். தவத்தின் நிலையை விதந்து கூறுவது ஆரண்யகம். தத்துவ ஞானத்தைக் கூறுவது உபநிடதம் ஆகும்.

நான்காம் பிரிவாகிய இந்த உபநிடதங்களே இந்து மதத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குகிறது. படைப்பு பற்றிய அரிய கருத்துக்களைத் தெளிவாகக் கூறுகின்றன. ஞானத்தைப் பரஞானம், அபரஞானம் என்று இருவகைப்படுத்தி உபநிடதங்கள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

இந்துமத வேதாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்களைத் தருவதில் பகவத் கீதை முன்னணி வகிக்கிறது. கர்மயோகம், ஞான யோகம், பக்தி யோகம் என யோகங்களை மூன்று வகைப்படுத்தி விளக்குகிறது.

இந்துமத வேதாந்தக் கருத்துக்களைக் கூறுவதில் பிரம சூத்திரங்களும் தனிப்பங்கை வகிக்கின்றன. பிரம சூத்திரங்கள் என்ற நூல் 535 சூத்திரங்களைக் கொண்டுள்ளது. இச் சூத்திரங்களின் கருத்துக்களையே, ஆதிசங்கரர் அத்வைதமாகவும், இராமானுஜர் விசிஷ்டாத் வைதமாகவும் மத்துவர் துவைதமாகவும் கொள்கைகளைப் பரப்பி, இந்து மதத்தின் உள்ளொளியை வெளிப்படுத்தினர்.

உத்திர மீமாம்சம், பூர்ண மீமாம்சம் எனக்கிளைவேதங்கள் பத்து உள்ளன. அவைகள் கூறும் கருத்துக்களையும் இந்து மதம் உள்ளடக்கியுள்ளது.

வேதக் கருத்துக்களோடு ஆகமங்களையும் ஏற்று இந்து மதத்திற்கு மேன்மை தருவன சைவ சித்தாந்த நூல்களாகும். இவை 14 ஆகும். இச்சைவ சித்தாந்த நூல்களை மெய் கண்ட நூல்கள் எனவும் கூறலாம். இவை களில் காணும்கருத்துக்களைத்தொல்காப்பியம் திருக்குறள் சங்க இலக்கியங்கள் ஆகியவற்றுள் குறிப்பாகவும், பன்னிரு திருமுறைகள் வெளிப் படையாகவும் நமக்கு அறிவிக்கின்றன.

இந்து மதத்தின் வாழ்வியலுக்கு இலக் கணங்கூறி, அறம் வளர்க்கும் நூல்களாகத் திகழ்பவை இதிகாசங்களும். பதினெண் புராணங்களும் ஆகும். இந்து மதத்தின் அடித் தளத்தை அசைக்க முடியாவண்ணம் செய்த பெருமை இந்நூல்களுக்கு உண்டு.

இந்து சமுதாய ஒழுக்கங்களை எடுத்துக் கூறும் சூத்திரங்களை நான்கு வகையாகப் பிரித் துள்ளனர். இந்து மதத்திற்கு அணி செய்யும் நூல் மனு தர்ம சாஸ்திரமாகும்.

இந்து மதத்தின் இரு கண்களாகப் போற் றப்படுவன சைவமும், வைணவமும் ஆகும். வைணவர்கள் திருமாலைப் பாற்கடலில் ஆதிசேடன் மேல் பள்ளிகொண்டிருப்ப தாகக் காண்பர். வைணவ அடியார்களை ஆழ்வார்கள் என்பர். ஆழ்வார்களின் பாசுரத் தொகுப்பாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பேர் பெற்றதாகும். வைணவர்கள் பகவத் கைங்கர்யம், பாகவத கைங்கர்யம் ஆகிய இரண்டையும் வலியுறுத்துவர். ஆழ்வார் களோடு பக்தி நெறியைப் போற்றிக் காத்த வர்கள் சைவ சமயக் குரவர்கள் ஆவர். சைவர் கள் கயிலாயத்தில் காட்சி நல்கும் சிவபெரு மானைப் போற்றிப் பாடுபவர்கள் ஆவர். சைவக்குரவர் நால்வரோடு பட்டினத்தடிகள். தாயுமானவர், இராமலிங்க அடிகளார் சைவ நெறியைப் பரபபியவர்களாவர்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் பரப்பிய இந்து சமயக் கருத்துக்கள் மக்களிடத்தில் எழுச்சியை யூட்டின. இதனால் 'கற்றறிந்த வர்கள் உயர்குலத்தில் பிறந்தவர்கள் மட்டு மல்லாமல் பாமரர் யாவரும் இறைவன்முன்னர் நிற்கலாம். அவன் மாட்டு பக்தி செலுத்தலாம் என்னும் உண்மை மக்களுக்குப் புலனாகத் தொடங்கியது.

சாதி சமயப் பிணக்குகளைக்கடிந்து பக்திக் கவிஞர்கள் பாடியுள்ள பாடல்கள் மக்களுக்கு சிந்தனா சக்தியை எழுப்பின. இந்து மதத்தின் ஆதார நூல்களைப் பயின்று உலகிற்கு அறி முகப்படுத்திய மேல்நாட்டு அறிஞர்களும் உண்டு.

இந்து மதத்தில் ஓர் புரட்சியை உண்டு பண்ணிய இயக்கம் பிரம்ம சமாஜம் ஆகும். அதனைத் தோற்றுவித்தவர் இராஜாராம் மோகன்ராய் ஆவார்.

நூல்கள் எழுதும் திறமோ நிறுவனங்கள் அமைக்கும் திறமோ இன்றி எளிய முறையில் ஆன்மீக உண்மைகளைச் சிறுகதைகள் மூலம் பக்திநெறியைப் பரப்பியவர் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆவார். அவரால் தேர்ந்தெடுத்துப் பயிற்று விக்கப்பட்டவர் சுவாமிவிவேகானந்தர் ஆவார். இந்து மதத்தின் சிறப்பியல்புகளை உலக அரங் கில் முதன் முதலாக வெளியிட்ட பெருமை சுவாமி விவேகானந்தருக்கு உண்டு. இந்துமதம் பிற மதங்களுக்கெல்லாம் தாய் என்ற உண் மையைப்பறைசாற்றியவர்சுவாமி விவேகானந் தர்தான். மேலும் ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கைகளைப் பரப்பும் தொண்டினையும் ஏற்றார். இவருடைய உழைப்பால் இராம கிருஷ்ண மிஷன் கிளைகள் நாடுமுழுவதும் ஏற் படுத்தப்பட்டு, வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றன.

அகிம்சை சத்தியம் என்ற இரண்டும் இந்து மதத்தின் இருகால்கள் என்று முழங்கி கீதை வழிநின்று கொள்கை முழக்கம் செய்தவர் காந்தியடிகள் ஆவார். காந்தியடிகளும் கவிஞர் தாகூரும் உலக முழுமைக்கும் இந்தியப் பண் பாட்டின் சிறப்பையும், இந்து மதத்தின் ஆற்ற லையும் பல்லாற்றானும் விளக்கிக் காட்டி யுள்ளார்கள்.

இன்று நாடு முழுவதும் சமரச சமதர்ம நோக்கு காணப்படுகிறது. அனைத்து மதத் தினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் 'மதங் களெல்லாம் நதிகள், அந்நதிகள் சென்று கலக் கும் கடலே இறைவன், அவ்விறைவனை வணங்குதல் ஒவ்வொரு ஜீவாத்மாவின் கடமை யாகும்' என்று சமரச சனமார்க்க நெறி காட்டி யவர் இராமலிங்க சுவாமிகள் ஆவார்.

ஆழமான வேர்விட்டு, அகலமாகக் கிளை களைப் பரப்பி, விழுதுகள் பலவிட்டு பசுமை யான இலைகளோடும் சிவப்புச் சிறு கனி களோடும் பொலிவோடு காட்சி நல்கும் ஆல மரம் போன்றது இந்து மதம்.

எல்லா மதங்களையும் சமரச நோக்கினுள் கட்டுப்படுத்தி மிளிரும் இந்து மதத்தை நவ வேதாந்தம் பரப்பும் இன்றைய இளைஞர்கள் உலக முழுமைக்குமான ஆன்மீக மதமாக வழங்கும் பணியில் ஈடுபட்டு வருவது குறிப் பிடத்தக்கதாகும்.

# தமிழ்க் கடவுள்

"தமிழகக் கோயிற் கலைச்செல்வர்"
தி. இராசமாணிக்கம்



இந்து சமயக் கடவுள்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலைகளும், இரண்டுக்கு மேற் பட்ட கைகளும் அமைந்துள்ளதை ஒரு குறை யாகக் கருத்து தெரிவித்துள்ளார் வி. ஏ. வின் செண்ட் ஸ்மித் என்பார். இவ்வாறு இறை வடிவங்களுக்குப் பல தலைகளும், கைகளும் உள்ளதைக் கற்பனை என ஒதுக்கக் கூடாது. அவற்றிற்கு அடிப்படையான தத்துவங்கள் உண்டு.

தமிழ்க்கடவுள் எனப் போற்றிப் பரவப் பெறும் முருகப் பெருமானுக்கு 6 தலைகள் 12 கைகள் அமைக்கப்படுகின்றது. இவற்றின் இயல்புகள் செயல்கள் ஆகியவற்றைப் பார்ப் போம்.

ஆறுமுகங்களும் ஆறுஅறிவைக் காட்டுவ தாகக் கொள்ளலாம். குறிப்பிட்ட குணத்தில் மிக்கானை அக்குணமாகக் கொள்வதே தமிழ் இலக்கிய மரபு. திருஞானசம்பந்தப் பெரு மானை 'ஞானத்தின் திருவுரு' என்றும், கண் ணப்பரை 'அன்பின் திருவுரு' என்றும் போற்று வது போன்று, இவனை, 'அறிவின் திருவுரு' எனக் கொள்ளலாம். எனவே, இவன் யாவற் றையும் அறிந்தவன் என்பதாகிறது. இதை ஆங்கிலத்தில் 'OMNISCIENT' என்பர்.


சிவபெருமானது நெற்றிக்கண்களினின்றும் தோன்றிய ஆறு தீப்பொறிகள் வானவெளியில் (ஆகாயம்), வாயு (காற்று) அக்னி (தீ) கங்கை (நீர்) ஆகியவற்றால் சுமக்கப் பெற்று, மண் ணில் (பிருத்வீ) உள்ள சரவணப் பொய்கையில் ஒருதிருமுருகனாகத் தோற்றம் பெற்றன. இவ் வாறு ஐம்பெரும் பூதங்களுடன் தொடர் புடைய இவனது 5 தலைகளை ஐம்பெரும் பூதங்களாகக் கொள்ளலாம். உலகில் உள்ள எல்லாப் பொருள்களும்ஐம்பூதச்சேர்க்கையால் உண்டானவையாம். அவையின்றி, உலகில் எப்பொருளும் இல்லை. எனவே, இவனை அங்கிங்கென்னாதபடிஎங்கும் நிறைதவனாகக் கொள்ளலாம். இதை ஆங்கிலத்தில் 'OMNIPRESENT' என்பர்.

ஆறுதலைகளில் ஐந்து தலைகளை ஐம் பெரும பூதங்களாகக் கொண்டமையால், ஆறாவது தலையைப் பகுத்தறிவாகக்கொள்ள லாம். பகுத்தறிவு உலகை இயக்கும் சக்தி. எனவே இவனை ஒப்புவமையில்லா முடிவில் ஆற்றல் உடையவனாகக் கருதலாம். இதை ஆங்கிலத்தில் 'OMNIPOTENT' என்பர்.

இந்து சமயத்தில் ஆறு சமயங்கள் உண்டு என்பர். 'அறுவகைச் சமயம் வைத்தார்' என் பார் நாவின் மன்னர். அறுவகைச் சமயங்கள் எவை என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. அவற்றில் ஆதிசங்கரரால் வகுக்கப் பட்ட ஆறு சமயங்கள் அடங்கும். அவை யாவன; சைவம், வைணவம், சாக்தம், காணா பத்தியம், கௌமாரம், சௌரம், சைவத்தில் சிவபெருமானும், வைணவத்தில் திருமாலும், சாக்தத்தில்சக்தியும்,காணபத்தியத்தில்பிள்ளை யாரும், கௌமாரத்தில் முருகனும், சௌரத் தில் சூரியனும், ஆதியும் அந்தமும் அற்ற முழு முதற்கடவுளாகவணங்கப்படுகின்றனர்.முருகப் பெருமானது ஆறுதலைகளும் இந்த ஆறு சமயக் கடவுள்களைக் குறிக்கின்றனவென்றும் இவனைத் தொழுவது இந்த ஆறு சமயக் கடவுள்களை வணங்குவதற்கு ஒப்பாகும் என் றும் ஆன்றோர் கூறுவர்.

சாதாரண மனிதனைக் காட்டிலும், வான வர்கள் ஆற்றல் மிக்கவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட அவர்களுக்கு 4 கைகள் உரு வாக்கப்பட்டன. இறைவனது இணையற்ற பேராற்றலைக் குறிக்க 8, 16, 32 கைகள் அமைக்கப்பட்டன. சிவபெருமானது திரி புராந்தக, சரபேசமூர்த்தி வடிவங்கள், திரு மாலின் திரி விக்ரம, நரசிம்ம வடிவங்கள் ஆகியவற்றை உதாரணங்களாகக் கூறலாம். முருகன் தன் ஒப்பரிய பேராற்றல் காரணமாகக் குழந்தைப் பருவத்திலேயே படைக்கலம் ஏது மின்றி வானவர் கோனாம் இந்திரனைப் புற முதுகிடச் செய்தான் எனப் பரிபாடலில் கூறப் பட்டுள்ளது. எனவே, இவனுக்கு 12 கைகள் அமைக்கப்பட்டன; இவன் 'வானவர்களின் தானைத் தலைவன்' எனப் போற்றிப் புகழப் படுகிறான்.

இவனது 6 தலைகள் 12 கைகள் பற்றி அருளாளர்கள் என்ன கூறியுள்ளார்கள் என் பதை இனி பார்ப்போமா!



நக்கீரர் தம் 'திருமுருகாற்றுப் படை'' யில், 'மாயிருள் ஞாலம்' எனத் தொடங்கி 'நகையமர்ந்தன்றே' என்பது ஈறாக உள்ள பகுதியில் ஆறு முகங்களின் இயல்புகளையும், 'வண்புகழ் நிறைந்து' எனபது முதல் 'பாற்பட இயற்றி' என்பது வரையில் உள்ள பகுதியில் 12 கைகளின் செயல்களையும் விரிவாகக் கூறியுள்ளார். குமரகுருபர சுவாமிகள் தம்'கந்தர் கலிவெண்பா'' வில், 'விண்மலிதோள்' எனத் தொடங்கி, 'தெய்வமுகத்தாமரையும்' என்பது ஈறாக உள்ள பகுதியில், ஆறு முகங்களின் இயல்புகளையும்; 'ஆரமுதம்' எனத் தொடங்கி, 'விதிர்க்கும் கரமும்' என்பது வரையில் உள்ள பகுதியில் 12 கைகளின் செயல்களையும் அருளியுள்ளார். அருணகிரிப் பெருமான் 'ஏறுமயில் ஏறி' எனத் தொடங்கும் தம் திருப்பாடலில், ஆறு முகங்களின் செயல்களைக் கூறுகிறார்.

மேலே குறிப்பிட்ட திருவருட்செல்வர்களின் திருவாக்குகளைத் தொகுத்துக்காணும்போது, இறைவனது அறப்பண்புடன் மறப்பண்பும், இல்லற மாண்பும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அவை வருமாறு;

### அறப்பண்பு

'ஞான பண்டிதசாமி', 'ஞான பண்டித நாதா' என்ற அருணகிரி வள்ளலின் திருவாக்குகளின்படி, ஒருமுகம் ஞானப் பிழம்பாக இருக்க, அதன் ஒளியால் அஞ்ஞான இருள் அகல, இவன் உதிக்கும் சூரியன் போன்று ஒளி வீசித் திகழ்கிறான். எனவே, இவனை

'உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு'' (வரிகள் 1—2)

உடன் ஒப்பிடுகிறார் நக்கீரர் தம் 'திருமுருகாற்றுப்படை'' யில். இரண்டாவது முகம் தன் அடியை அடைக்கலம் அடையும் அடியார்களுக்கு அருள, அதற்கு ஏற்ப ஒரு கை வானவர்களுக்கு அமுதை வழங்க, இரண்டாவது கை உலகம் வாழ மழையைப் பொழிய, மூன்றாவது கை இடையில் வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது முகம்வேள்வியைக் காவல் புரிய அதற்கு இயைய ஒரு கை மணியை அடிக்க வேள்விப் பலியை உண்ணும் முத்திரையைக் காட்ட, இரண்டாவது கையில் உள்ள தொடி என்ற அணிகலன் சுழன்று காணப்படுகிறது. 'வேதமுங்கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி' என்ற இராமலிங்க சுவாமிகளின் திருவாக்குப்படி, மறைகளுக்கு எட்டா மெய்ப்பொருளை நான்காவது முகம் விளக்க, அதற்கு இணங்க ஒரு கை மார்பின் மீது இருக்க, மற்றொரு கையில் மலர் காணப்படுகிறது.

இவ்வாறாக 4 முகங்களும் 7 கைகளும் இவனது அறப்பண்பை வலியுறுத்துகின்றன.

### மறப்பண்பு

ஐந்தாவது முகம் பகைவரை அழிக்க, அதற்கு ஏற்ப ஒரு கையில் வேற்படையும், இரண்டாவது கையில் புரிசையும் காணப்படுகின்றன. பகைவருடன் போர் புரியச் செல்லும் இவன் தன் ஊர்தியான யானையைச்





செலுத்த மூன்றாவது கையில் அங்குசம் வைத்திருக்க, நான்காவது கை யானைப் பாகன் போன்று தொடை மீது வைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் ஒரு முகமும், நான்கு கைகளும் இவனது மறப்பண்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

### இல்லற மாண்பு

இறைவன் இறைவியுடன் இருப்பதுஉலகம் வாழையடி வாழையாகத் தழைத்து இருக்கத் தான். ஆறாவது முகம் வேழ மடந்தை மற்றும் வேட மடந்தையுடன் காதலை விளைவிக்க, அதற்கு இயைய பன்னிரெண்டாவது கையில் மணமாலை உள்ளது.

இல்லறத்தின் மாண்பினை இவனது ஒரு தலையும் ஒரு கையும் குறிக்கின்றன.

இவற்றினின்று இவனது அறப்பண்பின் சிறப்பினை உய்த்து உணரலாம்.

முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள தலம் ஆறுபடை வீடுகள் எனப் போற்றி வணங்கப் பெறுவது யாவரும் அறிந்த ஒன்றாம். அதை அவனது இயல்புகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதைப் பார்ப்போம்.

1. **திருப்பரங்குன்றம் :** இங்கு இவன் யானை தன் அணங்கான தெய்வயானையை மணம் புரிந்ததாகப் பரவப்படுகிறது. இது இவனது இல்லற மாண்பினைச் சுட்டிக் காட்டுகிறது.

2. **திருச்செந்தூர் :** சூரன் ஆகியோர் மீது படையெடுத்துச் செல்லும்போது, இவன் இங்கு படைவீடு அமைத்துத் தங்கியதாகப் போற்றப்படுகிறது. இது இவனது மறப்பண்பினைக் குறிக்கிறது.

3. **திருவாவினன்குடி :** இங்கு இவன் இறைவன் இறைவியால் 'ஞானப்பழம் நீ' என அழைக்கப்படுகிறான். இது இவன் 'ஞானப் பிழம்பு' என்பதை வலியுறுத்துகிறது.

4. **திருவேரகம் :** இங்கு இவன் தன் தந்தையான சிவபெருமானுக்கு 'ஓம்' என்ற பிரணவப் பொருளுக்குப் பொருள் கூறியதாகப் பரவப்படுகிறது. இது இவன மறைகளுக்கு எட்டா மெய்ப்பொருளை விளக்குவதை உணர்த்துகிறது.

5. **பழமுதிர்ச் சோலை :** இங்கு இவன் தமிழ் மூதாட்டியான ஔவையாருக்கு அருள் புரிந்ததாகப் புகழப்படுகிறது. இது அடியார்கள் வேண்டியதை வேண்டியவாறு அளிக்கும் இவனது இயல்பைக் குறிக்கிறது.

6. **குன்று தோறாடல் :** மேலே குறிப்பிட்ட ஐந்து தலங்கள் நீங்கலாக ஏனைய எல்லாம் இதில் அடங்கும். குன்றின் மேலிட்ட விளக்கின் ஒளியால் நாற்புறமும் பரவியுள்ள இருள் சிதறுண்டு போவது போன்று, ஞானப் பிழம்பாகிய இவனது அருள் ஒளியால் அடியார்கள் மனதில் உள்ள அஞ்ஞானம், ஆணவம் ஆகியவை அகன்றுவிடுகின்றன.

இவ்வாறு இவன் எழுந்தருளியுள்ள தலங்கள் இவனது அறப்பண்பை உணர்த்துவனவாக உள்ளன.

அடியார்கள் அல்லல்பட்டு அவதியுறும்போது ஆறுதலை அளிக்கும் ஆறுதலைகளைக் கொண்ட ஆறுமுகச் செவ்வேளின் மலரடிகளைச் சிந்தித்து வந்தித்து உய்வோமாக.

— — — —

# 'தோணி'

## வி. இராகவன், திருவரங்கம்

கரைபுரண்டோடிடும் காவிரி போன்றுள்ள ஆறுகளையும், ஏரிகளையும் கடந்து, அக்கரை சேர்ந்திட பரிசில், தோணி, ஓடம்போன்ற சாதனங்கள் மிக்க உபயோகமாகவிருக்கின்றன. இன்று ஆழ்கடலிலும் அதிவேகமாய் சென்றிட அதிவிரைவு விசைப்படகுகள் அறிமுகமாகி விட்டன. அதிஉல்லாசமாக ஏரிகளிலும், உப்பங்கழிகளிலும் மிதந்து சென்று பொழுதுபோக்கிட அதிநவீனமான உல்லாசப்படகுகள் காத்திருக்கின்றன. நீந்திச் செல்பவர்களோ மிக்கச் சாமர்த்தியமாய் நீர்ச்சுழலில் சிக்கித் கொள்ளாது நீந்திக்கரை சேர்கின்றனர். இச்சாகசம் ஒருசிலருக்கே வருவதன்றி எல்லோருக்குமன்று. இன்று விஞ்ஞான உலகிற்கு திறமைகள் பல இருந்தும் 'பிறவிப் பெருங் கடல்' என்னும் சமசார சாகரத்தினின்றும் விடுபட்டுக் கரை சேர வழிதான் தெரியவில்லை.

நம்பூர் வரதராஜர் என்பார், ஆசார்யராம் நஞ்ஜீயர் பால்மிக்க அன்பு பூண்டுஅவர் காலட்சேபகோஷ்டியில் தவறாது வெகு சிரத்தையோடு கலந்து கொள்வார். நஞ்ஜீயருக்குப் பின் வைணவதர்சனத்தை நிர்வகித்த நம்பிள்ளையென்னும் ஏற்றமிகு ஆசார்யராய் விளங்கியவரும் இவரே. நஞ்ஜீயரும், தம் காலட்சேபத்தில் இவருக்குள்ள ஊற்றத்தையும் ஞானத்தையும் கண்டவுடன் இவரின் எழுத்துத்திறமையையும் சோதித்துப் பார்த்துமிக்க உகப்போடு ஒரு குறிப்புச் சுவடியைக் கொடுத்தார். 'இதனை நன்கு ஏற்படுத்திக் கொண்டு வாரும்' எனப் பணித்தார். இவரும் அக்குறிப்புச் சுவடியை வெகு கவனமாகத்தன் சிரசுக் குடுமியிலே முடிந்து கொண்டு கரைபுரண்டோடும் காவிரியை நீந்திக் கடக்கவும் செய்தார். ஆயினும் குடுமியிலே முடிந்து வைத்திருந்த அக்குறிப்புச் சுவடியை ஆற்றின் வெள்ளம் அடித்து சென்றுவிட்டது. ஐயோ! சுவடியைத் தொலைத்து விட்டோமே என்னும் வருத்தமும் ஆசார்யர் பால் இவ்வாறு குற்றமிழைத்துவிட்டோமே என்னும் துக்கமும் வாட்டப் பெருமாளைத் தியானம் செய்து கொண்டு சயனித்து விட்டார். பொங்கும் கருணையாலே அவனும் கனவில் அக்குறிப்புச் சுவடியிலே கண்டுள்ள பொருள்களையும், மேலும் சில அர்த்த விசேடங்களையும் சொல்லிக் காட்டியருளினான். உடன் இவரும்மிக்க மகிழ்வோடு அவன் காட்டியருளிய பொருள்கள் அனைத்தையும் ஒன்றுவிடாது நன்கு ஏடுபடுத்திச் கொண்டு ஆசார்யராம் நஞ்சீயரிடம் மிக்கப் பணிவோடு சேர்ப்பித்தார். இவர் இச்சாகசம் நிகழ்த்தியது நாராயணனின் பரம கிருபையாலன்றோ!

ப்ரகிருதி சம்பந்தத்தால், பாய்ந்தோடும் வெள்ளப் பெருக்குப்போல், புரிந்திட்ட கர்மங்களின் பலனாய் ஏற்பட்டதே இம்மானிடப் பிறவி. இதுதானும் பிறப்பு இறப்பு எனச் சங்கிலித் தொடர்போல் மீண்டும் மீண்டும் ஏற்படுவதாயிருக்கிறது. சிறைக்கூடத்தில் அடைபட்டுக் கிடப்பாரைப்போல் கர்ப்பவாசம். பிறப்பென்று வெளிவந்தால் மலஜலம்கழித்தல் முதல் உறங்கும் வரையுள்ள காரியங்கள் அனைத்தும் மற்றவர்கள் தயவிலே நடைபெற வேண்டியுள்ளது. விளையாட்டு கேளிக்கைகளோ பாலப்பருவத்திற்குரியதாயிற்று. யுவனான காலத்துச் சிற்றின்ப கேளிக்கைகளில் நேரத்தைப் போக்குவது. கிழத்தனத்திலோ கடந்த காலச் சிந்தனையில் வீணே பொழுது போக்கி, உடல்தளர்ந்து செயலிழந்து மூச்சுத் திணறிக் கிடப்பது. ஆக இப்பிறவியில் எம்பெருமானை நினைந்திடத்தான் நேரமில்லை. இது மட்டுமின்றி தாபத்திரயமென்னும்(1) இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் பெரும் சரழிவு. (2) தெய்வநிந்தனை வழிபாட்டுக் கோளாறுகள் (3) தகாத நடத்தை காரணமாய் உண்டாகும் உபாதைகள், இவ்வாறான சம்சாரத்தை, 'சம்சார சாகரமகோர மனந்த க்லேச பாஜனம்' என்று துக்கங்களுக்கெல்லாம் இருப்பிடமாய் மிக்ககொடியதாயிருக்கும் இருப்பால் 'பிறவிப் பெருங்கடல்' என 'ஜிதந்தே தோத்திரம்' வருணித்தது.

'எங்கும் போய்க்கரை காணாது எறிகடல்வாய்
மீண்டேயும்''
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை
போன்றேனே''

(பெருமாள் திரு. 5-5) என அலைவீசி எறிந்திடும் ஆழ்கடல் நடுவே மிதந்திடும் மரக்கலத்தின் கொடிக்கம்பத்தின் உச்சியிலே இருப்பதொரு பறவை, நான்கு திசைகளிலும் பறந்து சென்று பார்த்தும் தனக்கோர் போக்கிடம் காணாது மீண்டும் கால் பரவ இம்மரக்கலத்தையே அண்டிடுவதுபோல் இப்பிறவிப் பெருங்கடலினின்றும் கரைசேர வழிதெரியாது மீண்டும் மீண்டும் இப்பிறவிப் பெருங்கடலிலே வீழ்ந்து உழல்கின்றோம்.

'வில்லிபுத்தூருறைவான் தன் பொன்னடி காண்பது ஓர் ஆசையினால்' (நாச். திரு. 5-5) என்று ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயில்கொண்டிருக்கும் எம்பெருமானின் செந்தாமரை மலரினும் மென்மை மிக்கதான திருவடிகளைத் திருமகளும் மண்மகளும் கூசிப் பிடித்து வருடி அடைந்திடும் ஆனந்தத்தைத்தானும் அடைந்திடவேணும் என்று ஆண்டாள் ஆசைப்படுகிறாள். நினைத்த வளவிலே அப்பேறு கிடைக்கப் பெறாமையாலே வாட்டமுற்று மெலிந்து நோவுபடும் அவள் 'துன்பக் கடல்புக்கு வைகுந்தனென்பது ஓர் தோணி பெறாது உழல்கின்றேன்' (நாச். திரு. 5-3) எனத்தான் வீழ்ந்துழலும் துன்பக் கடலினின்றும் கரை சேர

வைகுந்தன் என்னும் தோணி .கிடைக்கப் பெறாது வருந்துகிறாள்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பார் ஆசாரியராம் பிள்ளை உலகாரியரின் திருத்தம்பியாவார். இவர் இயற்றிய 'ஆசார்ய ஹிருதயம்' என்றும் உன்னதமான நூலின் 19-வது சூத்திரமாகக் காணப்படுவது.

'சாஸ்திரிக்ள் தெப்பக்கையரைப் போல் இரண்டையும் இடுக்கிப் பிறவிக்கடலை நீந்த, சார்ஜ்ஞர் விட்டத்திலிருப்பாரைப் போல் இரு கையையும் விட்டுக் கரை குறுகும் காலம் எண்ணுவர்கள்' என்பதே. இதன் பொருள் எளிதில் விளங்கிட சாஸ்திரிகள் தெப்பக்கை யரைப் போல் இரண்டையும் இடுக்கிப் பிறவிக் கடலை நீந்த எண்ணுவர்கள் என்றும், ஸாரஜ்ஞர் விட்டத்திலிருப்பாரைப் போல் இரு கைகளையும் விட்டு கரைகுறுகும் காலம் எண்ணுவர்கள் எனப் பிரித்துக் கொள்ளுதல் நலம்.

ஸ்மிருதிகளுக்குத் தலைவராய் விளங்குபவர்கள் வியாசர் போன்ற மஹரிஷிகள். மாமுனிவரான வியாசர் நாராயணனின் அம்சமாய்த் தோன்றியவர். ஐந்தாம் வேதமெனப் போற்றப் பெறும் 'மகாபாரதம்' என்னும் உன்னதமான காவியத்தை இயற்றியவரும் இவரே. அதாவது நாராயணனாகிற கிருஷ்ணனே இவருள் உயிருக்குயிராய் நின்று இச் சாஸ்திரத்தை வியாசர் வாய்மொழியாய் வெளியிட்டருளினான்.

இவ்வாறான சாஸ்திரங்கள், நாராயணனே பரம்பொருள், கல்யாண குணங்களுக்கெல்லாம் கொள்கலனாய் விளங்குபவன். அழகிய திருமேனியுடையவன், அழகிய ஆபரணங்களும் திவ்வியாயுதங்களும் அழகுற அணிந்துகொண்டு சங்கு சக்கரங்களைத் திருக்கரங்களிலே ஏந்திக் கொண்டு பிரியநாயகிமார்கள் உடனமர்ந்திருக்க பரமபதத்திலே அரியசிங்காசனத்திலே வீற்றிருக்கிறான். நித்திய சூரிகளும் நித்திய முக்தர்களும் இவ்வைபவத்தினைக் கண்டு களித்திட்டு ஆனநதப் பெருக்கால் சாமகானம் செய்கிறார்கள். இக்கோலாகலக்காட்சி காணத்தக்கது. அவனதுமேன்மையும் புகழும் கேட்கத் தக்கது, தியானம் செய்யத்தக்கது. இவன் ஒருவனேமோட்சத்தையும் மற்ற எல்லா பலன்களையும் அளிக்கவல்லவன். இவனை 'ஓம்' என்று தியானம் செய். இத்தியானம் ஒன்றே பிறவிப் பெருங்கடலினின்றும் கரை சேர்க்க வல்லது. இதுயுக்திக்குப் (உபாயம்) பொருந்தியது என வழிபாட்டினைச் சொல்லி, பழுதிலா ஒழுக்கமான ஞானம் சீலம் அனுட்டானம்ஆகியவற்றையும் இவ்வழிபாட்டிற்கு யோக்தையாக (தகுதி) விதித்தது. இவ்வாறு தன்னுடைய முயற்சியும் அம்முயற்சியாலே சாதிக்கப்பெறும் எம்பெருமானின் அருளும் ஆகிய இவ்விரண்டும் சாதனங்களாம். இவ்வாறான இறைவழிபாட்டிலே நிலை நின்றவர்களே சாஸ்திரிகள் ஆவர்.

மேலே கூறியவாறு சம்சாரிகள் 'ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட ஸர்வேஸ்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரை சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளினான் (முமுட்சுப்படி சூத். 5) என இயல்பாகவே ஆத்மாக்கள் அனைத்தும் பரமாத்துமாவுக்கு அடிமைப்பட்டவை. ஸம்ஸாரத்திலும் மோட்சத்திலும் அவனை விட்டால் வேறு ரட்சகர் (காப்பவர்) யாருமில்லை என்னுமதை மறந்து கிடக்கும் நிலையில் இவர்களைக் கரை சேர்க்க வேண்டுமென்னும் தன் கிருபையாலே பத்ரிகாச்ரமத்திலே நாராயணனானதான் சிஷ்யனுமாயும் தானே ஆசார்யனுமாய்த் தோன்றி நின்று எட்டெழுத்தான திருமந்திரத்தைத் தனக்குத் தானே, உலகு உய்யும்வண்ணம் உபதேசித்துக் கொண்டான்.

இத்திருமந்திரம் தானும் மேற்கூறிய சாஸ்திரங்களின் சாரமாயும், ஐந்து பொருளெனப்படும் (அர்த்த பஞ்சகம்) (1) அடையப்படும் பொருள் பரம்பொருளான நாராயணனே (2) அடைபவனான ஜீவாத்மாவின் தன்மையான அவனுக்கே அடிமை செய்து கிடப்பது (3) அடையும் வழியோ அவனின் கல்யாண குணங்களை அனுபவிப்பது, அதனால் உண்டாகும் ப்ரீதியின் காரணமாய் செய்யப்படும் கைங்கர்யம் பேறாகும் (4) நான் எனது என்னும் அகங்காரமமகாரங்கள் அவனையடையத் தடையாயிருக்கும் (5)அத்தடை நீங்குவதற்கும் கைங்கர்ய சித்திக்கும் சர்வ சுலபனான சர்வேஸ்வரன் திருவடிகளே உபாயம் என்னுமதன் சுருக்கமாயுள்ள 'ஓம் நமோ நாராயணாய'' என்னும் திருமந்திரமாகும். தக்கார் தகாதவர் என்னும் பாகுபாடின்றி எவரும் இதனைக் கற்கலாம். இவன் திருவடி பற்றிட வேண்டும் என்னும் ஆசை ஒன்றே போதுமானது வேறு யோக்யதை தேடிச் செல்ல வேண்டா. இருந்த இருப்பே போதுமானது. இத்திருமந்திரத்தில் ஊன்றி நிற்பவர்களே சாரஜ்ஞர் எனப்படுவர்.

ஆற்றிலே நீந்துவார் ஒரு கையிலே தெப்பத்தையும் இடுக்கிக்கொண்டு ஒரு கையால் நீரைத் துழாவிக் கொண்டும் நீந்திக்கரை கடப்பர். இது போன்று சாஸ்திரிகள் தன் முயற்சியும் அம்முயற்சியால் சாதிக்கப் பெறுகிற இறைவனுடைய அருளும் ஆகிய இரண்டையும் பற்றிக் கொண்டு பிறவிப் பெருங்கடலைத் தாண்ட நினைப்பர். இவ்வாத்மா தன் முயற்சியை விட்டுத்தள்ளி இறைவன் ஒருவனையே உபாயமாகப் பற்றி நிற்கும் என அதிலே ஊன்றி நிற்பவர்களான ஸாரஜ்ஞர் ஓடத்திலே அமர்ந்திருப்பாரைப் போல் இரு கையையும் விட்டு நிம்மதியாய் யாதொரு யத்னமும் (முயற்சி) செய்யாது, ஓடத்தைப் பற்றிய நினைவுமில்லாது எப்பொழுது கரை சேர்வோம் என்று எண்ணியிருப்பர்.

படகினுள் அமர்ந்து ஆற்றைக் கடப்பதையே கண்டிருக்கிறோம். படகையே தலையில் சுமந்து ஆற்றைக் கடந்த வரலாறு ஸ்ரீபாகவதத்திலே காணப் பெறுகிறது. கம்சனின் சகோதரி தேவகியும் அவளது கணவன்

வசுதேவரும் கம்சனால் சிறைப்பட்டுக் கிடக்கின்றனர். நாராயணன் கிருஷ்ணனாய் இவர்களுக்குக் குழந்தையாய்த் தோன்றுகிறான். பிறக்கும் போதே தாய் தந்தையரின் விலங்கை முறிந்து விழச் செய்தான். பிறந்த இரவோடிரவாய், தாய்ப்பால்குடிக்கவும் அவகாச மின்றி ஆய்ப்பாடிக்கு எடுத்துச் செல்லப் படுகிறான். தாய்ப்பால் சுவைத்திட முடியாமற் போன குறை தீரத் தாயென்று சொல்லி வரும் பேய்ச்சியாயினும் அவள்முலையை சுவைத்திட்டான் போலும்! பேய் மழை கொட்டிடத் தலையில் சுமந்து செல்லும் கிருஷ்ணனுக்குக் குடையாக ஆதிசேடன் தன் படத்தை அழகுற விரித்துச் சென்றான். பெருக்கெடுத்தோடும் யமுனை நதியும் வசுதேவரின் கெண்டைக் காலுக்கு வற்றிக் கொடுத்து வழி விட்டதாம். இவர் சுமந்து செல்வது கிருஷ்ணனென்னும் வைகுந்தனானதோணியையன்றோ! ஆகவே யமுனையும் வற்றிக் கொடுத்து வழியும் விட்டது.

இன்பம் பயக்கும் ஒரு அருமையான வட மொழிக் கவிதையை அனுபவிப்போம்.

'கோபால இதிகிருஷ்ண!
த்வம் ப்ரசுர சீர வாஞ்சயா!
ச்ரிதோ மாத்ருஸ்தா
சீரமப்ய லப்தம் த்வயா க்ருதம்''

நீயோ ஓர் இடையன், நிறையப் பசுக்களை உடையவனாயிருக்கிறாய். நிறையப் பால் கிடைக்கும் என்னும் ஆசையால் கோபாலா கிருஷ்ணா! என்று உன்னைக் கூப்பிட்டேன். ஐயோ! நீ பால் கொடுக்காவிட்டாலும் இது காலம் வரை கிடைத்து வந்த தாய்ப்பாலையும் கிடைக்காதபடி செய்து விட்டாயே என்பதே இக்கவிதையின் பொருள். ஆயினும் இதன் உள்ளுறைப் பொருளோ வெனில், கிருஷ்ணனின் திருநாமங்களை வாய்விட்டுச் சொன்னாலே போதும். மறு ஜன்மம் கிடையாது. மறுபிறப்பு எடுத்தாலல்லவோ குழந்தையாய்த் தாய்ப்பால் உண்டு மகிழலாம்.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கரை காணாது தத்தளிக்கும் இச்சீவாத்மாக்களுக்கு எங்கும் பரந்துறையும் விஷ்ணுவாகிற ஓடத்தைத் தவிர வேறு ஒரு சாதனமுமில்லை. ஆகவே அவன் திருவடித் தாமரைகளைப்பற்றி நின்று, அவனது ஞானம் சக்தி ஆகியவற்றை நினைப்பதாலும், தன் பாடிதந்திரியத்தை நினைக்கும் நினைவாலும் பாரம் அற்றவர்களாயும், அவனை அடைவது என்னும் கரை சேர்தலுக்கு ஏற்ற காலத்தை நோக்கியிருப்போம்.

'சுபம்'



திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் ஆலயத் திருக்குட நீராட்டு விழா மிகச் சிறப்பாக அண்மையில் நடைபெற்றது. அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# கனவு - ஒரு நல் ஆய்வு

அ. இராஜராஜன், எம்,ஏ.,

## முன்னுரை

நமது நல்வாழ்வில் ஒரு சில நிகழ்வுகள் நம்மை அறியாமல், நிகழ்வது உண்டு. பிறப்பும், இறப்பும் இறைவன் வகுத்த விதி, இறைவனின் விருப்பப்படி நடக்கும் இந்த உலகம், அவனது கட்டுப்பாட்டில் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. இந்த இயக்கத்தில் மனிதனின் வாழ்வும் அடங்கியிருக்கிறது.

மனித வாழ்க்கையில் கடந்த காலங்களை நம்மால் எண்ணிப் பார்க்க இயலும். நிகழ் காலம் நமது சிந்தனையிலும், செயலிலும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. நிகழ இருக்கும் சம்பவங்களும், செயல்களும் நாம் அறியாதது. எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது நம்மால் அறுதியிட்டு சொல்ல முடியாதது.

இறைவனின் ஐதீகமான ஆக்கம், மனிதனுக்கு கனவுகள் மூலம் சில எச்சரிக்கை உணர்வுகளையும், செயல்படுத்த வேண்டிய நிலையினையும், நிகழ இருக்கும் நல்ல காரியத்தின் அறிகுறிகளையும் கனவுகளாக நமது சூட்சுமமான உணர்வுகள் மூலம் இறைவன் நமக்கு அறிவிக்கிறான்.

நமக்கு முன்னே வாழ்ந்த பெரியோர்கள் மூலம் நடந்த அனுபவ முத்திரைகளும், சான்றோர்களின் இலக்கிய உணர்வுகளும் கனவுகள் பற்றிய நல் அனுபவத்தை நமக்குப் பாடமாக அளித்துள்ளார்கள்.

நாம் உறங்கும்போது நமது ஆழ்மனத்தின் மூலமாக, நிதர்சனமான வாழ்க்கையின் தூர திருஷ்டிகளாக கனவுகள் அமைகின்றன. நல்ல ஆரோக்கியமான மன உணர்வுகள் கொண்ட மனிதனுக்கு நல்ல எதிர்காலத்தில் நடக்கக் கூடிய சம்பவங்களின் பிரதிபலிப்புக்களாக கனவுகள் மலர்கின்றன. எப்போதும் கவலையுடனும், சோம்பலுடனும் இருக்கின்ற மனிதர்களின் கனவுகளுக்கு அர்த்தம்சொல்லமுடியாது. காரணம் ஆழ்மன உணர்வுகள் நல்ல தூய்மையான எண்ணங்களையும் சார்ந்து அமைந்துள்ளது.

## கனவுகள் - ஓர் ஆய்வு

உளவியல் சார்ந்தது கனவு. அந்த கனவிலே மூன்று வகை உண்டு. ஒன்று பகலில் காணுவது, அவை விட்டும், தொட்டும் வரும். இரண்டாவது மனிதனுக்கு ஏற்படும் பித்தம். மயக்கத்தில் ஏற்படும் கனவுகள் - இதற்கு பலன் இல்லை. மற்றொன்று எதிர்காலத்தில் விளையக்கூடிய நிகழ்ச்சிகளை விளக்குவது.

நமது உடம்பு ஸ்தூலம். ஸ்தூல உடம்புக்குள் ஆழ்மனம் இயங்கக் கூடிய சூட்சும சரீரம் உள்ளது. இந்த சூட்சும சரீரத்தில்தான் கனவுகள் தொழிற்படுகின்றது. நாம் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருக்கிறபோது சூட்சும சரீரம் மூலம் கனவுகள் சிந்திக்கின்றன.

நம் முன்னோர்கள் அனுபவ வாயிலாக 'கனவு சாஸ்திரம்' என்ற நூலை இயற்றி, பல்வேறு கனவுகளின் ஆய்வுகளை அனுபவ ரீதியாகத் தொகுத்து இருக்கிறார்கள். நமது இரவுப் பொழுதினை நான்கு சாமம் என நேரத்தினைப் பிரித்து இருக்கிறார்கள். இதில் நமது ஆழ்ந்த உறக்கத்துல் எந்த சாமதத்தில் கனவு கண்டோமோ அதற்கு தக்கவாறு பலன் அமைத்து இருக்கிறார்கள். இதனை.

'காணலே கனவு முதற் சாமமாகில்

கடக்கவே ஓராண்டில் மேற் பலன்தான்

பூணவே சாமமது இரண்டிற் காணிற்

பொருந்திய திங்களது எட்டின்மேலாம்

வேணவே சாமமது மூன்றிற் காணில்

விளங்குமே திங்களது நான்கிலும் மேற்

கனவே நான்காகில் மாத மொன்றாம்

உதயத்தில் கண்டிடிலோ ஆடலாம் பாரே'

என கனவு சாஸ்திரம் விவரிக்கிறது.

முதல் சாமத்தில் கண்ட கனவு ஓர் ஆண்டில் பலிக்கும். இரண்டாம் சாமத்தில் கண்ட கனவு எட்டு மாதத்திலும், மூன்றாம் சாமத்தில் கண்ட கனவு மூன்று மாதத்திலும் நான்காம் சாமத்தில் கண்ட கனவு ஒரு மாதத்திலும். வைகறைப் பொழுதில் கண்ட கனவு உடனேயும் பலிக்கும்.

உப்பு, கரும்பு, நீர் ஆகியவற்றைக் கனவில் கண்டால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபிட்சமும் உண்டாகும். எதிர்காலம் மென்மேலும் பிரகாசிக்கும். சூரிய உதயத்தைக் காணின் மனதில் நினைத்துக்காத்திருந்த காரியம் கைகூடி வரும். தாமிரத்தைக் காணின் தெய்வபக்தி மேலோங்கும். அருள்தன்மை கிட்டும். நவரத்தினங்களைக் கண்டால் தன லாபமும், புத்திரப்பேறு இல்லாதவர்கள் கண்டால் அதற்கான வாய்ப்புககள் காத்திருக்கிறது என்று பொருள். கிளியைக் காணில் தூரதேச புண்ணிய பிரயாணம் சித்திக்கும். இந்த பிரயாணத்தினால் புகழும் மேன்மையும் உண்டாகும்.

வணங்கத்தகுந்த சான்றோர்களையும், இறந்து போன பெரியவர்களையும் காணின் வளமான வாழ்வும், எடுத்த காரியம் வெற்றியும், நல்ல செல்வ கடாட்சமும் கிட்டும்.

## இலக்கியங்களில் கனவுகள்

ஆண்டாள் திருமாலையே நினைத்து அவரை கணவனாக அடையவேண்டும் என்று உள்ளம், நெக்கு நெகிழ்ந்து உருகி வழிபட்டாள். திருமால் ஆண்டாளின் கனவில் தோன்றி, அவளை மத்தளம் கொட்ட வரிசங்கும் நின்றூத கை பிடித்தான் என்பதனை அமுதத் தமிழால்,

'மத்தளம் கொட்ட
வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம்
நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி
மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்ற
கனாக்கண்டேன் தோழிநான்''

என ஆண்டாள் மகிழ்ச்சியோடு தான் கண்ட கனவினைத் தோழிகளுக்கு எடுத்துரைத்தாள்.

வைகறைப் பொழுதில் கண்ட கனவு அப்படியே, உடனே பலிக்கக் கூடியது என்பதனை அனுபவரீதியாக மெய்ஞானிகள்,

'மன்னிய வெழு நாளென்ன வைகறைப்
பொழுது தன்னிற்
பன்னிய கனாக் கண்டார்க்குப் பலாபலன்
பலிக்குமன்றே''

என்ற வாக்கின் மூலம் அறிந்து உணரப்படுகிறது.

## கனவும், பலனும்

கனவில் பாம்பு, தேள், சிலந்தி, இவற்றைக் கண்டால் வெற்றி உண்டாகும். தவளையைக் கண்டால் நன்மை. பூனையைக் கண்டால் தீமை. தங்கம், நாணயம் கண்டால் சுபம். வெள்ளியைக் காணில் எண்ணிய கருமம் கெட்டுப் போகும். ஈயத்தைக் காணின் விவாதம். இரும்பைக் கண்டால் வறுமை.

மயிலைக் கண்டால் தெய்வ அருள் கூடி வரும். இறந்துவிட்ட பெரியோர்களைக் கண்டால் காரிய சித்தி. மயானத்தைக் கண்டால் நல்லது.

தீபம் காணின் சுபிட்சம். பல நாட்கள் எதிர்பார்த்த பொருள் வந்து சேரும். பலர் கூடி இருக்கிற சபையில் தீபத்தைத் தானே ஏந்தி வருவதாக கனவு கண்டால் தமக்கு புகழும், பாராட்டும், பதவியும் வந்து சேரும்.

மற்றவர்களுக்கு அன்னதானம் செய்வதாக கண்டால் எடுத்த காரியம் விக்கினமில்லாமலும், வெற்றியோடும் முடியும். எதிர்பாராத தனலாபம் உண்டு. பால், தயிர் நிரம்பப் பெற்ற பாத்திரத்தைக் கண்டால் விசேஷமான பலன் நேரும்.

தெய்வ சந்நிதானங்களைக் கனவில் கண்டால் விசேஷமான பாதுகாப்பும், சந்நிதானங்களில் தெய்வ மூர்த்திகளை தரிசிப்பதாக கனவு கண்டால் தெய்வ கடாட்சம் கூடியும் வரும்.

அருள் ஞானி தாயுமானவர். தம்மைச் சிவபெருமானே தம் தலையின் மீது திருவடி வைத்ததாகக் கனவுக் கண்டதாக அருளிச் செய்துள்ளார். அதற்குப் பிறகுதான் அவருக்கு ஞானம் அதிகமான நிலையில் கைகூடியது. அவர் தாம் கண்ட காட்சியினை

''மால் வைத்த சிந்தை
மயக்கற என் சென்னிமிசைக்
கால் வைக்கவும் கனவு
கண்டேன் பராபரமே''

என சிவபெருமான் தமது திருவடியைத் தம் தலையில் வைத்து அருளிய காட்சியைக் குறிப்பிடுகிறார்.

கந்தபுராணத்தில், இந்திரன் மகனாகிய சயந்தன் வீரமகேந்திரபுரியில் சிறையில் கிடந்து அவதியும், தொல்லையும் அனுபவித்தான். இடர்ப்பட்டான். அழுதான். சிவபெருமானை வேண்டித் தொழுதான். அவனுடைய துயர் நீங்கும்வண்ணம் கந்தவேள் நம் முருகப் பெருமான் கருணையுடன் சயந்தனின் கனவில் ஆறுமுகம், பன்னிரு கரங்களுடன் கூடிய திருவுருவுடன் கனவில் தோன்றிக் காட்சி யளித்து அவனது துன்பத்தை நீக்கினான்.

சிந்தாமணி என்ற பழமையான தமிழ் நூலில் சச்சந்தனுடைய மனைவி விஜயை பூங் கொத்துக்கள் நிறைந்த அற்புதமான அசோக மரம் அடிபெயர்ந்து வீழ்ந்ததாகவும், அதன் அடியில் ஒரு முளை தோன்றியதாகவும் கனவு கண்டு, அதற்கு தனது கணவன் சச்சந்தனிடம் விளக்கம் கோரியபோது, அசோக மரம் வீழ்ந்தது தனக்கு அழிவு உண்டாகும் எனவும், அடியில் தோன்றிய முளை தனது மகன் அழகிய பல மனைவியருடன் சிறப்புறுவான் என்பதனைக் குறிக்கின்றன என்றும் குறிப்பிட்டான். பிறகு அவ்வாறே நடந்தது.

கம்பராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் காட்சிப் படலத்தில் திரிசடைதான் கண்ட கனவினைச் சீதையிடம் விவரிக்கிறாள். அதன் படி இராவணன் சிவந்த ஆடையை உடுத்திக் கொண்டு, கழுதைகளும், பேய்களும் பூட்டிய தேரின் மீது ஏறி தென்திசையாக சென்றதாக வும், சுற்றமும், புதல்வர்களும் இராவணனைத் தொடர்ந்து சென்றார்கள். இராவணன் வீட்டில் வளர்க்கும் நெருப்பு அணைந்தது. அழகிய அவனது அரண்மனை இடிந்துவிழுந்தது. அரக்கமாதர்களின் தாலிகள் அறுபட்டு வீழ்ந்தன. மண்டோதரியின் கூந்தல் கீழே விழுந்தது. அவளது கூந்தல் தீப்பிடித்து எரிந்தது. யானைகள் வாழும் காட்டில் புலிக் கூட்டங் களுடன் இரு சிங்கங்கள் வந்து அழித்தன. அந்தக் காட்டில் வாழ்ந்த மயில் அந்தச் சிங்கங்களுடன் சென்றது.

அவ்வாறு திரிசடை கண்ட கனவ, இராவண னின் அழிவை முன் கூட்டியே அறிய உணர்த் தப்பட்டது. வனத்தில் வாழ்ந்த சீதை இராம, லட்சுமணனோடு திரும்பி மகிழ்ச்சியோடு மீட்கப்படுவாள் என்பதனையும் உணர்த்து கிறது.

சைவ சமயத்தின் உயிர் நாடியாக வாழ்ந்த திலகவதியாரின் கனவில் சிவபெருமான் தோன்றி 'உன் தம்பி சமண சமயம் தழுவி னான் என்று வருந்த வேண்டாம். அவன் முன்னமேயே முனியாக என்னை அடையத் தவம் செய்தவன். அவனைச் சூலை நோயால் பீடிக்கச் செய்து ஆட்கொள்வேன்' என்று தான் கண்ட கனவினை விவரித்தபடி, அப்படியே நடந்தேறியது.

அருணகிரிநாதர் வயலூரில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டு இருக்கும்போது கந்த பெருமான் முருகவேள் கனவில் தோன்றி 'நாம் அருள்புரியும் விராலிமலைக்கு வருக' என

## கனாக்கண்டேன் தோழி நான்

**வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து**
**நாரணன் நம்பி நடக்கின்றான் என்றுஎதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப் புறம்எங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்**

—ஆண்டாள்

அழைத்தபடி, அருணகிரிநாதருக்குக் காட்சி கொடுத்து அருளிய செய்தியினை ஈண்டு நோக்குதல் சிறப்பு.

சிலப்பதிகாரத்தில் பாண்டியனின் மனைவி கோப்பெருந்தேவி பாண்டியனின் அழிவு பின் னாளில் நிகழ இருக்கும் நிலையினைத் தான் கனவில் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

தமிழகத்தின் வரலாற்றில் வீரபாண்டிய கட்டபொம்மன் அழியப்போகும் செய்தியினை அவனது மனைவி, முன்னமேயே கனவில் கண்டு வெளிப்படுத்துகிறார். அவளது கனவுப்படியே வீரபாண்டிய கட்டபொம்மனின் மரணமும் நிகழ்கிறது,

மாமன்னன் ஜூலியஸ் சீசரின் மனைவி, சீசரின் மரணத்தைத்தான் கண்டகனவின் மூலம் தெளிவுபடுத்தினாள். அவ்வாறே நடந்தது என்பது வரலாற்று உண்மை.

### முடிவுரை :

கனவுகள் மனித வாழ்க்கையின் எதிர் காலத்தைப் பிரதிபலிக்கக்கூடிய சக்திகள். நமது செயல்களின் விளைவுகளையும், தூரதிருஷ்டி களையும் தொலைநோக்கோடு சொல்லக்கூடி யவை. இயற்கையின் விளைவுகளை நமக்கு உணருவதற்கு அஸ்திவாரங்களாகக் கனவுகள் வெளிப்படுகிறது. கனவுகள் நாம் விரும்பி அல்ல அதுவே நமக்கு இயற்கையின் உணர்வு களை காட்டுகிறது.

நல்ல கனவுகள் நமது வாழ்க்கையின் மேம் பாட்டுக்கு வழி வகுக்கின்றன. தீய கனவுகள் நமது செயல்பாட்டின் கட்டுப்பாட்டினை உணர்த்துவது. நமது வாழ்க்கை எண்ணங் களின் அடிப்படையில் அமைகிறது. நல்ல எண்ணம் உயர்வான வாழ்வுக்கு வழிவகுக்கும்.

நல்ல தூய்மையான உள்ளத்துடன், இறை நம்பிக்கையோடு வாழும் நல்வாழ்வில் கனவுகள் நமக்கு இறைவன் உணர்த்தும் நல் அறிகுறிகளாக எடுத்துக்கொண்டு நமது வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள் வோம்.

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

# அனைத்துமான ஆதிமூலம்

புலவர் ஏ. பரந்தாமன்

ஸ்ரீமந் நாராயணம் நல்லவர்களைக் காக்க, தீயவர்களை அழித்து, தர்மத்தை நிலை நாட்ட யுகங்கள்தோறும், ஸ்ரீபரமபதத்தை விட்டு, தன்னை தாழவிட்டுக்கொண்டு, இப்பூமியில் மீனாகவும், ஆமையாகவும், பன்றியாகவும், நரசிம்மனாகவும், வாமனனாகவும், பரசுராமனாகவும், இராமனாகவும் பலராமனாகவும் கண்ணனாகவும் ஒன்பது அவதாரங்களை எடுத்தான்.

அவற்றுள் பூமிப் பாரம் குறைக்கவும், அதர்மமே உருவாகக் கொண்ட துரியோதனாதி நூற்றுவரை அழித்து, தர்மத்தையே கடைபிடித்து வந்த பாண்டவர் ஐவரைக் காத்து, தர்மத்தை நிலைநாட்டவும் கண்ணனாக அவதாரம் செய்தான். இதனைப் பூர்ண அவதாரம் என்பர். இவ்வரலாறு பாரதம் என்ற நூலாக வியாச பகவானால் தோற்றுவிக்கப்பட்டது. இப்பாரதம் பஞ்சவர்க்காக துரியோதனாதிகளிடம் கண்ணபிரான் தூது நடந்த சிறப்பை நோக்கி, தூது நடந்தவன் ஏற்றம் கூறுகிறது — என்று பாராட்டப்படுகிறது. இதனையே, இளங்கோவடிகள் 'பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நா என்ன நாவே — நாராயணா என்னாத நா என்ன நாவே' என்று பாராட்டியுள்ளார்.

திருமால் இவ்வுலகில் தோற்றுவிக்கப்பட்ட அனைத்துப் பொருள்களுக்குள்ளும் 'எள்ளுக்குள் எண்ணெய் போலும்' 'கறந்த பாலில் நெய் போலும்' 'உடலினுள் உயிரே போலும்' 'கரந்து மறைந்து எங்கும் பரந்துளன்' என்றார் நம்மாழ்வார், இதனை மெய்ப்பிக்க பாரதத்தில் கூறப்பட்டுள்ள வரலாறு ஒன்றினைக் காண்போம்.

துரியோதனாதிகள் நடத்திய யாகத்திற்கு பல நாட்டு மன்னர்கள் வந்திருந்தனர். அவர்கள் ஸ்ரீகிருஷ்ண பகவான் வாழும் துவாரகையைப் பற்றியும், அதன் சிறப்பையும்கேட்டு மகிழ்ந்தனர். கண்ணபிரானைக் கண்டு, வணங்கி, அவரோடு உறவு செய்து கொள்ள விரும்பினர். துரியோதனாதியரையும், பாண்டவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு, துவாரகையை அடைந்து, கண்ணபிரானுக்குத் வருகையைத் தெரிவித்தனர். இதையறிந்த கண்ணபிரான், இவர்கள் பரிவாரங்களுடன் வந்திருக்கும் காரணம் என்னவோ என்று யோசித்து, பலராமனையும், சாத்யகியையும் முன்னிட்டுக் கொண்டு, சேனைகளுடனும் — ஆயுதங்களுடனும் அவர்கள் இருப்பிடம் சேர்ந்தான். அவர்கள் நலங்களையெல்லாம் விசாரித்து, அவரவர் வயதுக்கும்-வலிமைக்கும் அறிவுக்கும்-பெருமைக்கும் தக்கபடி ஆசனமிட்டு அமரச் செய்து, தானும் தன் தகுதிக்கேற்ற ஆசனம் ஒன்றில் அமர்ந்தான் கண்ணபிரான்.

அப்போது நாரதமுனிவரும் அங்கு வந்து சேர்ந்து, கண்ணபிரானை நோக்கி, அனைத்து தேவர்களைக் காட்டிலும் நீர் தலைசிறந்தவராகவும், தலைவராகவும் விளங்குகின்றீர். இவ்வுலகில் இத்தகையர் வேறு யாருமில்லை என்று கூறினார். இதைக் கேட்ட கண்ணபிரான் புன்முறுவல் செய்து, நாரதரே! இவ்வுலகில் வேறு யாரும் அத்தகையவர் இல்லை என்பது உண்மையே என்றார். இதைக் கேட்ட நாரதர் மகிழ்ந்து புறப்பட அனுமதிகேட்டார். கண்ணபிரானும், நாரதரும் பேசிக் கொண்டதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அரசர்கள் கண்ணபிரானை நோக்கி, 'நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததன் ரகசியத்தை எங்களுக்கு விளங்குமாறு கூறுங்கள்', என்றனர். கண்ணபிரான் நாரதரை நோக்கி, இம்மன்னர்கள் கேட்டதற்கான பதிலை விளக்கிச் சொல்லுமாறு கட்டளையிட்டார்.

நாரதர் மன்னர்களை நோக்கிப்பின்வருவனவற்றைக் கூறினார். ஒரு காலத்தில் கங்கைக் கரையில் நீராடி நின்றபோது மிகப்பெரிய அழகான ஆமை ஒன்று கங்கை நீரிலே அமைதியாக மிதந்து கொண்டிருந்ததைக் கண்டேன். நான் அந்த ஆமையை நோக்கி, 'நீரிலே ஒன்றையும் சிந்திக்காமல் அமைதியாக மிதந்து கொண்டிருக்கும் நீ, அற்புதமான ஆச்சரியமான உடலைப் பெற்று சிறந்ததாக விளங்குகின்றாய்' என்றேன். அதற்கு அந்த ஆமை 'முனிவரே! நீர் சொல்வதைப்போல எம்மிடத்தில் எந்தவித ஆச்சரியமும் சிறப்பும் இல்லை. என்னைப்போன்று பத்தாயிரம் உயிர்கள் வாழ்கின்ற கங்கை நதியன்றோ சிறந்தது' என்றது. நாரதர் கங்கையிடம் சென்று அதன் சிறப்பைக் கூறினார்.

அதைக்கேட்ட கங்கா நதியானது ஒரு வடிவு கொண்டு நின்று, தான் ஒருவள் மட்டும் சிறந்தவளல்ல என்றும், தன்னைப்போல் பல்லாயிரம் நதிகள் ஒன்று சேருமிடமான கடலன்றோ ஆச்சரியமுடையதும் சிறந்ததுமாகும் என்றது.

பிறகு கடலை நோக்கி அப்படியே சொல்ல, அத்துடன் என்னைப் பார்த்து 'நீர் சொன்னபடி ஆச்சரியமும் சிறப்பும் எனக் கில்லை. எந்த பூமியின் மேல் நான் வாழு கின்றேனோ, அந்தப் பூமிதான் சிறப்பையும் ஆச்சரியத்தையும் உடையதாகும்' என்றது.

பின்பு பூமி தேவியை நோக்கி அப்படியே சொல்ல, அப்பூமியானது என்னை நோக்கி, 'நான் அத்தகைய சிறப்புக்கு உரியவள் அல்ல, எனக்கு ஆதாரமான மலைகளே சிறப்புக்குரி யன' என்றாள். அந்த மலைகளைச் சிறப்பித்து கூற, அம்மலைகள் தங்களுக்கு அத்தகைய சிறப்புக்கள் 'இல்லையென்றும், தங்களைப் படைத்த பிரமனுக்கே அவை உரியன என்றும் கூறினர்.

நான் பிரமனிடம் சென்று, வணங்கி, பிரம்மதேவரை நோக்கி 'நீரே ஆச்சரியமும் சிறப்பும் உடையவர், இவ்வுலகை நீரே படைக் கின்றீர், உமக்கு ஒப்பானவர் யாரும் இல்லை' என்று கூறினேன்.

அதைக்கேட்ட பிரமன், 'இப்படி என்னை புகழ்வது சரியல்ல. தத்துவங்களை உணர்த்து வதும், உலகங்களையும், என்னையும் வாழ வைக்கின்ற ருக், யஜுர், சாம, அதர்வண வேதங்களன்றோ ஆச்ச்ரியத்தையும் சிறப்பை யும் உடையன' என்றான்.

வேதங்களை அணுகி, அவைகளைச் சிறப் பித்துக்கூற, அதைக் கேட்ட வேதங்கள், 'நாங்கள் யாகங்கள் அர்த்தமாக படைக்கப் பட்டவர்கள். எனவே, யாகங்களே சிறந்தவை' என்றன. பின்பு யாகங்களைப் புகழ, அந்த யாகங்கள் என்னை நோக்கி, 'நாங்கள் சிறந்த வர்களில்லை, விஷ்ணுவே சிறந்தவர். அவரே எங்களுக்குக் கதி, தீயில் ஓமம் பண்ணப்பட்டு எங்களால் ஏற்றுக் கொள்ளப்படும் நெய்யை, அவ்விஷ்ணுவேதான் கொடுக்கிறார்; எனவே விஷ்ணுவே சிறந்தவர்; ஆச்சரியப்படத்தக்க வர்; அனைத்து உலகப்பொருள்கட்கும் மூல காரணர் என்று, ஆமையும் கங்கையும் கடலும் பூமியும் மலைகளும், பிரமனும், வேதங்களும் யாகங்களும் கூறின. விஷ்ணுவே கண்ணபிரா னாக அவதரித்திருக்கின்றார். கண்ணபிரானே ஆச்சர்யத்திற்கும், சிறப்புக்கும் உரிய மூல முழுமுதற்கடவுள் என்ற ரகசியத்தை நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்' என்று கூறி நாரதர் விடைபெற்றார். இப்படி நாரதர் அடிக்கடி ஸ்ரீமந் நாராயணனை அணுகி, அவரது புகழைப் பாடி மகிழ்வார். இதனை பெரியாழ்வாருடைய கீழ்க்கண்ட பாசுரத்தால் ஸ்ரீவிஷ்ணுவே முழு முதற்கடவுள் எனபதை அறியலாம்.

''ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனி யாய்
அருவரைகளாய்
நான்முகனாய் நான் மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த்
தானுமானான்
சேமமுடை நாரதனார் சென்று சென்று துதித் திறைஞ்சக்



கிடந்தான் கோவில்
பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும்
புனலரங்கமே',,

ஸ்ரீமந் நாராயணன், நாரதருக்கும், அவர் மூலமாக துரியோதனன் முதலான அரசர் கட்கும் தன்னுடைய சர்வாதிகாரத்துவத்தை விளக்கினார். முதலில் கங்கை நீருக்குள் ஆமை யாகவும், அந்த ஆமை முதலான உயிரினங்கள் வாழ்வதற்கு இருப்பிடமான கங்கையாகவும், அக்கங்கை முதலான நதிகளுக்குப் புகலிடமான ஆழமான கடலாகவும், அக்கடலுக்கு இருப்பிட மாக விளங்குகின்ற பூமியாகவும் அபபூமிக்கு ஆதாரமான பெரிய மலைகளாகவும், அம் மலைகளைப் படைக்கும் பிரம்மனாகவும், அப் பிரம்மனுக்கு ஆதாரமான நான்கு வேதங் களாகவும் அவ்வேதங்களைப் பாராயணம் செய்யும் யாகங்களாகவும், அந்த யாகங்களுக்கு வீரியத்தைக் கொடுக்கவல்ல தக்கிணையாகவும் அந்த தக்கிணை மூலமாக அனைவர்க்கும் அவர வர்கள் விரும்பும் பலன்களைக் கொடுக்கவல்ல முழுமுதற்கடவுளாகவும் விளங்குகின்றதிருமால் புகழை நாரதர் சென்று பாடிப்பரவும்படி, திருவரங்கத்திலே பள்ளிகொண்டு அருள்புரி கின்றான். அவனை நாம் சென்று வணங்கி நலம் பல பெற்று நீடூழி வாழ்வோமாக!

ஆழ்வார், எம்பெருமான் ஜீயர்
திருவடிகளே சரணம்!

நித்ய ஸ்ரீ—நித்ய மங்களம்.

# மதுரை மீனாட்சி

புலவர் ச. சோமசுந்தரம், எம்.ஏ., பி.எட்.,



''அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
அங்கையற்கண் அம்மையே போற்றி போற்றி''

**முன்னுரை :**

அன்னை பராசக்தி, காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், கவின்மிகு மதுரையிலே மீனாட்சியாகவும் கனிவுறக் காட்சிதந்து காசினியைக் காத்து அருள்கின்றாள். எனினும் அன்னை செங்கோல் ஏந்தி அரசோச்சும் அற்புத புண்ணிய பூமியாக விளங்குவதால் மதுரை அறுபத்து நான்கு பீடங்களுள் முதன்மையான உயர்ந்த பீடமாக, சியாமளா பீடமாக, துவாத சாந்தத் தலமாகப் போற்றப் படுகிறது.

**மதுரை :**

சிவபெருமான் தம் திருமுடியிலுள்ள பிறையின் அமுதமாகிய மதுரத்தை இத்திருக்கோயில் விமானங்களிலும் கோபுரங்களிலும் தெளித்தார் என்று சிறப்புப் பற்றியே மதுரை என்ற திருப்பெயர் ஏற்பட்டது.

**ஆலவாய் :**

நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்,
'ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆல வாயி லுறையும் எம் ஆதியே''-எனவும்,

''அண்ணல் ஆலவாய் நண்ணினனான் தனை எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே'' எனவும் பாடுகின்றார்.

ஆலமரத்தை முகப்பில் எல்லையாகக் கொண்ட காட்டில் இறைவன் ஆணைப்படி ஆலகால நாகமொன்று, தன் தலையும் வாலும் கூடுமாறு வளைத்துக் காட்டிய இடத்திலே இத்திருக்கோயில் அமைந்ததால் இம்மதுரை மாநகரை ஆலவாய் என்றே பாடுகின்றார்.

**கூடல்:**

கூடல் என்றால் ஒன்று சேர்தல் என்பது பொருள். சங்கம் வைத்துத் தங்கத் தமிழ் வளர்த்துப் அங்குப் புலவர்கள் உவப்ப தலை கூடியதால் கூடலாயிற்று.

கடற்கோள்களால் சிதறுண்ட பாண்டியர்களின் பல்வளங்களும் மீண்டும் கூடியதால் கூடலாயிற்று.

வருணன் கடலை ஏவிப்பெரும்புகழ் மதுரையை அழிக்கக் கருதினான். சிவபெருமானே நான்கு மேகங்களை அழைத்து அந்தக் கடல்நீரைக் குடிக்குமாறு செய்ய, சினங்கொண்ட வருணன் மீண்டும் பெருமழை பெய்யச் செய்தான். அப்போது அந்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி, மழையினின்று காத்தன. எனவே, நான்மாடக்கூடல் என்ற பெயரும் உண்டாயிற்று.

''உலகமொரு நிறையாத் தானோர் நிறையாப்
புலவர் துலாக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்'' — என்பது பரிபாடல்.

**நகர அமைப்பு :**

காஞ்சி திருவாரூர், திருநெல்வேலி, இராமேஸ்வரம் போன்ற பெருந்தலங்களில் மதிற்சுவர்களை அடுத்துத் தேரோடும் வீதி ஒன்று மட்டுமே உள்ளது.



ஆனால் இத்திருக்கோயிலுக்குள்ளேயே ஆடிவீதி என்ற பெரிய வீதியுள்ளது. வெளிப் புறத்தேயும் சித்திரை வீதிகள் 4, ஆவணி மூல வீதிகள் 4, மாசி வீதிகள் 5, வெளி வீதிகள் 4 ஆக 16 வீதிகளும் வளைந்தும் நெளிந்தும் அமையாமல் நேராக சீராக நூல் பிடித்துக் கட்டப்பட்டது போல காட்சி தருகின்றன. கோயிலை நடுநாயகமாகவைத்துச் சுற்றிலும் சிறிய பெரிய சதுரமாக வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனால்தான் மதுரை மாநகர் மட்ட விழ் தாமரையாக உருவகம் செய்யப்பட்டுள் ளது. மலரின் மையப்பகுதி மன்னனின் மங்கல மனையாகவும், மலரிலுள்ள மகரந்த தூள்கள் மாநகர்வாழ் மக்களாகவும், ஆலவாய் அண் ணலின் ஆலயம் அரும்பொகுட்டாகவும், எண் டிசை தெருக்கள் தண்டாமரையின் திருவிதழ் களாகவும் பரிபாடல் என்னும் சங்கப்பாடலின் உருவகம் செய்யப்பட்டுள்ளது.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த
தாமரைப்பூ
வொடு, புரையும் சீரும் பூவின்
இதழகத்து அனையைதெருவும்
இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல்
கோயில்''

—பரிபாடல்.

## பொற்றாமரைக் குளம் :

தெய்வத் திருப்பாதங்களைத் திருவடித் தாமரை என்பர். இத்தகைய புனிதமிகு பொற் றாமரைகள் மலரும் பொற்றாமரைக் குள மொன்று இத்திருக்கோயிலினுள் இருக்கிறது.

விருத்திராசூரன் என்ற அசுரனைக் கொன் றதால் இந்திரனைப் பிரம ஹத்தி பாவம் பிடித் துக்கொண்டது. விண்ணிலும் மண்ணிலும் அவனைப் படாத பாடுபடுத்தியது. புண்ணிய தீர்த்தங்கள் பல மூழ்கியும் பயன் ஏற்பட வில்லை.

ஒரு நாள் பாண்டி நாட்டுக் கடம்பவனத் தின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தபோது அக்கொலை பாவம் தன்னை விட்டு நீங்கியதாக உணர்ந்தான். தேடிப் பார்த்த போது ஒரு குளமும் அதன் கரையில் கடம்ப மரநிழலில் ஒரு சிவலிங்கமும் இருப்பதைக் கண் டான்.

எனவே, பொற்றாமரைகளை எடுத்து அருச்சனை செய்தான், அந்தச் சிவலிங்கத்திற்கு ஒரு அழகான விமானமும் கட்டி முடித்துத் தெய்வலோகம் திரும்பினான். அந்தச் சிவ லிங்கமே மதுரை சொக்கலிங்கமாக விளங்கும் மூலவராவர்.

## தமிழ் அரங்கேற்றம்:

தமிழ்ப் புலவர்கள் கவிதைகளை இயற்றி கவிஞர்கள் முன்னிலையில் விளக்கியபின் பொற் றாமரைக் குளத்தில் இடுவர். தாமரை தாங் கிக் கொண்டால் நல்ல நூல். தண்ணீரில் மூழ் கினால் சங்கப் பலகை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதப்பட்டது.

இக்குளக்கரையில்தான் திருக்குறள் அரங் கேற்றம் நடைபெற்றது. இதன் நினைவாக குளத்தின் தென் புறத்தில் 1330 அருங்குறளும் வெண்சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டு உள் ளது. மேலும் தேவார திருவாசகப் பதிகங் களும், சிவ ஞான போதப் பாடல்களும் அபி ராமி அந்தாதிப் பாடல்களும் பொறிக்கப்பட் டுள்ளது.

''தவளத் தாமரை தாதார்கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ்
குறித்தே''-

என்ற பாடல் எழுந்தது.

## திருக்கோயில் சிறப்பு :

கிழக்கு மேற்காக 920 அடி, தெற்கு வடக்காக 740 அடி நீளமுள்ள மதிற்சுவர்களைக் கொண்டது. 15 ஏக்கர் நிலப் பரப்புள்ளது. திருக்கோயிலை வலம் வந்தால் ஒரு கிலோ மீட்டர் தொலைவு நடந்ததற்குச் சமம். படிமக்கலை, கட்டிடக்கலை முதலிய ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் வளர்த்து வந்திருக்கிறது,

சமுதாயநல மையமாய், புலவா கூடும் மேடையாய், வண்ணக் களஞ்சியமாய், அமுது படைக்கும் அறச்சாலையாய், ஓவியக் கருவூலமாய், சிற்பக்கூடமாய், இசைக்கலையின் இருப்பிடமாய் விளங்கி வந்திருக்கிறது. 33000 சிற்பங்களை ஒரே தொகுதியாக இவ்வாலயத்தில் காணலாம். கட்டிடக் கலைஞர்களின் கைவண்மைக்கு எடுத்துக்காட்டாகவும், சுதை வேலைபாட்டிற்கு எடுத்துக்காட்டாகவும் உள்ளன. கல்லெல்லாம் கவிபாடும், கதை சொல்லும்.

எல்லாத் திருக்கோயிலிலும் இறைவனுக்கு இடதுபுறமாக இறைவி இருக்க இங்கு மட்டும் வலப்புறத்தே இருக்கும் காட்சியைக் காணலாம். மண மேடையில் இருப்பது போல கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றனர். எல்லா வகையிலும் அன்னைக்கே முதலிடம் வழங்கப் படுகிறது,

கரிக்குருவிக்கும், பன்றிக்குட்டிகளுக்கும், அருள்பாலித்த அம்மையும் அப்பனும் அருள் சுரக்கக் காட்சி தருகின்றனர்.

அம்மன் சன்னதி வழியாகக் கோயிலுக்குள் நுழைந்து அம்மனை வழிபட்ட பிறகே சொக்கரை வணங்கி மீண்டும் அம்மன் சன்னதி வழியாகவே வீட்டிற்குத் திரும்புகின்றனர்.

## பெயர் சிறப்பு

அன்னை கயல் போன்ற கண்களைப் பெற்றிருப்பதால் அம் கயல் கண்ணி என்றும், மீன் கொடிக்கு உரியவள் ஆதலால் மீனாட்சி என்றும் போற்றி வணங்குகின்றனர்.

மீன் தன் முட்டைகளைப் பார்வையாலே தன்வயப்படுத்திக் குஞ்சு பொரிப்பது போலத் தன்னை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் ஊழ்வினைகளையும் தன் மீன் போன்ற கண்களின் அருட்பார்வையால் அகற்றி அவர்கட்கு அருள்பாலிக்கிறாள். ஆகையால் தான் பாரதியார், ''அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்'' எனப் பாடுகின்றார்.

அங்கயற்கண்ணி, அபிடேகவல்லி, தடாதகைபிராட்டி, மாணிக்கவல்லி, தமிழறியும் பெருமாட்டி என்ற பல பெயர்களும் அன்னை மீனாட்சியை அலங்கரிக்கின்றன,

கொண்டையில், முத்துக் கொண்டை என்ற அணிகலனும், தலையில் மணிமுடியும், மூக்கில் மாணிக்க மூக்குத்தியும், காதுகளில் சூரிய சந்திரத் தோடுகளும், நெற்றியில் மங்கலக் குங்குமமும் அணிந்து, எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுகஎழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமாக நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையாகத் திகழ்கின்றாள்.

புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதப் பவளச் செவ்வாயும், முழுமதியை விஞ்சும் மோகன வடிவழகும், அருள்நோக்கும், வாழ்வின் அஞ்ஞான இருள்போக்கும் மெய்ஞானம் உண்டாக்கும் நன்னெறியில் நின்று நல்லொழுக்கத்தால் வாழ்வை வென்று வாழும் ஞானியரின் மும்மல அழுக்குகளை அகற்றி அகந்தைக் கிழங்கை அகந்தெடுக்கும் தொழும்பரின் உளக் கோயிற்கு ஏற்றும் ஞானச்சுடர் விளக்காகவும் காட்சி தருகின்றனர்.

மீனாட்சி அம்மை கிள்ளைக்கு மழலை பசுங் குதலையொழுகு கிளவிக்கற்பித்தனள்; மயிலுக்குக் கிளரிளஞ் சாயலை அளித்தனள், மானுக்கு —நவ்விக்கு நோக்கைதந்தனள்; அரசுஅன்னப் பறவைக்கு மட நடை பயிற்றுவித்தனள் என்பர் குமரகுருபரர். அதனால் தம் குழந்தைகட்கு எல்லா நலங்களையும் அருள இறைவியையும், இறைவனையும் வேண்டுவர்.

## மாலிக்கபூரின் மனமாற்றம்

கி.பி.1310—ஆம் ஆண்டில் அவுரங்கசீப் பின் தளபதியாக மாலிக்காபூர் மதுரையை முற்றுகையிட்டான். அப்போது பாண்டிய நாட்டையாண்ட வீரபாண்டியன் வலுவிழந்திருந்தமையால் எளிதில் வெற்றி பெற்றான். கோட்டையையும் கைப்பற்றிக்கோயிலைச்சூறையாடியும் அடித்துத் தரை மட்டமாக்கவும் முற்பட்டான்.

இவனுடைய படை வீரர்களில் ஒருவன் திருவேகம்பராயன். இவன் கோயிலைச் சுற்றிப் பார்த்து வந்தான். சுவாமியின் கோயில் கருவறையைச் சுற்றி எட்டுக் கல் யானைகளைக் கண்டான். அங்கிருந்த துறவியிடம் இதனைப் பற்றிக் கேட்டான். அத்துறவி யானைகள் விமானத்தைத் தாங்கும் புராணத்தையும், சிவபெருமான் சித்தராக வந்து கல்யானைக்குக் கரும்பு வழங்கிய திருவிளையாடலையும் கூறினார். ''அன்றுதின்றது மட்டுமல்ல இன்றும் தின்னும்'' எனத் துறவி கூறினார்.

கேட்டு வியப்புற்ற திருவேகம்பராயன் மாலிக்காபூரையும் அவ்வற்புதம் காண அழைத்து வந்தான். துறவி கரும்பை மாலிக்காபூரிடம் கொடுத்து யானையிடம் நீட்டச் செய்தார். யாவரும் வியக்கும் வண்ணம் கல்யானை தன் நீண்ட துதிக்கையை நீட்டிக் கரும்பை வாங்கித் தின்றது. வியப்புற்ற மாலிக்காபூர் 'உண்மையில் ஆண்டவன் இங்கேதான் இருக்கின்றான்' என்று கூறி, கோயிலை இடிக்காதிருக்க ஆணையிட்டான். துறவி யாரென்று அறிய முற்பட்டபோது துறவி காணப்படவில்லை. சொக்கலிங்கமே வந்து இந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.



## அன்னையின் அருள்

மகமதியரின் ஆதிக்கத்தில் மதுரை மக்கள் பெரும் இன்னலுற்றனர். ஆலயத்தின் நிலையோ அவலத்தில் தடுமாறியது. இந் நிலையை மாற்ற அன்னை அங்கையற்கண்ணி விஜயநகர் மன்னன் குமார கம்பண்ணன் கனவில்தோன்றி, இவனுக்கு விசுவகர்மா கொடுத்த வாளைகுமாரகம்பண்ணனின் கரத்தில்வைத்து மகமதியரைவென்று மக்களைக் காப்பாயாக என்று கூறி மறைந்தாள். அன்னையின் ஆணைக் கேற்ப ஆலவாய் நோக்கிப் படையெடுத்து வந்தார் குமாரகம்பண்ணன்.

முகமதியர்கட்கு அஞ்சி கோயில் ஸ்தானிகர்கள் சொக்கேசப் பெருமாளைக் காப்பதற்காகத் திருமேனியை மூடி அதன் மேல் மணலைப் பரப்பிக் கல்லினால் சுவர் எழுப்பிக் கருவறையை அடைத்தனர்.

கருவறையில் இருந்த அம்மனின் சிலையைப் பெயர்த்து விமானத்தில் மறைத்தனர்.

கம்பண்ணர் மகமதியர்களை எதிர்த்து வெஞ்சமர் புரிந்து வெற்றிவாகை சூடி மதுரையை மீட்டனர். ஆலயக்காவலர்களை அழைத்து கோயில் வாயில்களைத் திறக்கச் செய்தார். மணல் மேடுகளை அகற்றினார். பல வியப்புகளைக் கண்டனர்.

48 ஆண்டுகட்கு முன் அடைக்கப்பட்ட கருவறைக்குள் லிங்கத்தின் திருமேனிக்குச் சாத்தப்பட்ட சந்தனமும் சண்பக மலர்மாலையும் அன்று விடியலில் சாத்தியது போலவே புதுப் பொலிவுடன் காட்சி தந்தன. வெள்ளி குத்து விளக்கு இரண்டும் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தன.

## அங்கையற் கண்ணி அருட்கொடை

திருமலை மன்னருடையஆட்சிக்காலத்தில், ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்து செந்தில் முருகன் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்று, கந்தர்கலிவெண்பாபாடிய கவிவாணர் காசிக்குச் செல்ல மதுரைக்கு வந்தார்.

கந்தனைப் பாடிய சுந்தர வாயால் செந்தமிழ் அன்னை மீனாட்சி மீது பிள்ளைத் தமிழ் பாட வேண்டினார். ஆறுகால் மண்டபத்தே அமர்ந்து திருமலை நாயக்கர் முன்னிலையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழையரங்கேற்றினார்.

தேனினுமினிய தெள்ளு தமிழில் வருகை பருவத்து ஒன்பதாவது பாடல் ''தொடுக்கும் கடவுட் பழம்பாடல்'' என்ற பாடலை உள முருகப் பாடினார். பாடலைக் கேட்ட அன்னை பெண் குழந்தை வடிவில் தோன்றி, மன்னர் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றிக் கவிஞரின் கழுத்தில் அணிவித்துமறைந்தது. அனைவரும் அங்கயற்கண்ணியின் அருளை வியந்து போற்றினர்.

## கண்ணொளி வழங்கிய கருணை

அமைச்சர் நீலகண்ட தீட்சதரின் வேண்டுகோளின்படி திருமலை நாயக்கர் வசந்த விழா மண்டபத்தைக் கட்டினார். உள் மண்டபத் தூணில் சுந்தரமூர்த்தி ஆச்சாரி என்பவர் திருமலைமன்னன், அவ்ருடைய மனைவியர் சிலைகளை வடித்துக் கொண்டிருந்தார். அப்போது அரசியின் உருவத்தில் பெருந்தொடையில் ஊனம் ஏற்பட்டது. எவ்வளவு கவனமாகச்



செதுக்கியும் செப்பனிட முடியவில்லை. அப்போது அங்கு வந்த அமைச்சர் ஊனம் அப்படியே இருக்கட்டும் என்று ஆணையிட்டுச் சென்றா... அரசியின் பெருந்தொடையில் சிலையில் ஊனம் ஏற்பட்ட இடத்தில் தழும்பு ஒன்று இருந்தது. திருமலை மன்னனுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய மறைவான செய்தியை அமைசசர் எங்ஙனம் அறிந்தார் என்று அரசன் ஐயம் கொண்டான். குற்றமொன்றும் தாம் செய்யாதபோதும்கொற்றவன் ஐயம் உற்றதை உணர்ந்து அன்னை அங்கையற்கண்ணியை வேண்டி, சூடத்தைக் கொளுத்தித் தன்னிரு கண்களிலும் வைத்துக் குருடாக்கிக் கொண்டார். செய்தி மன்னருக்கு எட்டவே மிகவும் வருந்தித் துன்புற்றான். அன்னையின் திருவருளால். மீண்டும் கண்ணொளியை அமைச்சர் பெற்றார். அன்னையின் அருட் திறம் கண்டு ஆனந்த பேருவகையோடு நன்றி பெருக்கோடு போற்றி வழிபட்டார்.

## பத்திரகாளியின் திருவருள்

கி,பி.1756-ல் முகமதிய பக்கிரி, மீனாட்சி சுந்தரேசர் திருக்கோயில் இராஜ கோபுரத்தில், கோபுர மேடையில் பலர் தடுத்தும் கேளாமல் மசூதி ஒன்று கட்டத் தொடங்கினன். மதுரை மக்கள் மனம் கலங்கி அன்னை மீனாட்சியின் அருளை வேண்டினர். அன்னையின் அருள் கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்குப் பக்கம் உள்ள பத்ரகாளியின் மூலம் வெளிப்பட்டது. பத்திர காளியம்மன் கண்களிலிருந்து இரண்டு நாட்கள் தொடர்ந்து இரத்தம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த அற்புதத்தைக் கண்ட பக்கிரி பள்ளிவாசல் கட்டுவதை நிறுத்திக் கொண்டான்.

## பண்டிதருக்குப் பணிவிடை:

பண்டிதரான வேம்பத்தூர் பரம்பரையை சார்ந்த ஒருவர் அரசுப் பணியாளராகச் சமையல் பணியில் ஈடுபட்டனர். அவர் ஒரு நாள் அம்பிகை மீனாட்சி பாடல்களை மனமுருகிப் பாடிக்கொண்டு தம் பணியை மறந்திருந்தார்.

ஆகவே, அரசனின் தண்டனையிலிருந்து தன் பக்தன் தப்ப அன்னை மீனாட்சியே அவர் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து அர்த்த சாமப் பூசைக்கான நிவேதனங்களைத் தயாரித்து வைத்திருந்தாள் என்பது கர்ண பரம்பரைச்செய்தியாகப் பேசப்பட்டு வருகிறது.

## ஆங்கிலேயரின் அன்பு காணிக்கை:

இன்றைக்கு 170 ஆண்டுகட்கு முன்னர் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராக ரோஸ் பீட்டர் என்னும் ஆங்கிலோ கிருத்துவர் நீதி தவறாது நேர்மையான முறையில் மக்கள் நலங் கருதியே ஆட்சி செய்து வந்ததால், 'பீட்டர் பாண்டியன்' என்றே மக்கள் இவரை அழைத்தனர். பிறப்பால் கிருத்துவரே ஆயினும் அன்னை மீனாட்சியின்பால் அளவுகடந்த பக்தியுடையவர்.

ஒரு நாள் நள்ளிரவில் இடி மின்னலுடன் பெருமழை பெய்துகொண்டு இருந்தது. ரோஸ் பீட்டர் அப்போது தம் மாளிகையின் மாடியில் ஒரு கட்டிலில் அமர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு சிறுமி துரையின் கட்டில் அருகே வந்து கையைத் தட்டி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஆட்சியாளரை எழுப்பிவிட்டு மிக விரைவாகக் கீழே இறங்கி ஓடினாள்.

ரோஸ் பீட்டர் திடுக்கிட்டெழுந்து சிறுமியைப் பின்தொடர்ந்து கட்டிடத்திற்கு வெளியே ஓடினார். அடுத்த வினாடியிலேயே இடிந்து விழுந்து மாடி சரிந்து தரைமட்டம் ஆனதையும், தாம் படுத்திருந்த கட்டில் முறிவதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அந்த சிறுமி கோயிற் கோபுரத்துக்குள் நுழைவது போன்ற காட்சி அவருக்குத் தோன்றியது. அன்னையே தன்னைக் காப்பாற்றியதாகக் கருதிக் காணிக்கை வழங்க விரும்பினார். இரண்டு மிதியடிகளைச் செய்து அன்னையின் இரு திருவடிகளையும் தாங்கும் வண்ணம் செய்து காணிக்கை அளித்தார்.

ஓய்வு பெற்ற பிறகும் மதுரையிலேயே தங்கி மீனாட்சி அம்மனின் அருளை நன்றிப் பெருக்குடன் போற்றினார். மீனாட்சி அம்மனின் கோபுரத்தைப் பார்த்த வண்ணமே அவரது உடல் கல்லறையில் அடக்கம்செய்யப் பெற்றுள்ளது,

## தங்கத் தாம்பாளத்தில் அருட்பிரசாதம் :

அமராவதி புதூர் வயினாகரம் நாகப்ப செட்டியார் அன்னை மீனாட்சியிடம் அளவு கடந்த பக்தி உடையவர். பல திருப்பணிகளுக்காக இருபத்தைந்து இலட்சம் ரூபாய் செலவிட்டவர். மொட்டைக்கோபுரத்தை முழு கோபுரமாக்கியவர். உழவாரப் படைகொண்டு நாவுக்கரசரைப் போல உள்ளன்போடு ஆலயத்தைத் தூய்மைபடுத்தியவர். நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், அன்னையை எண்ணியவராகவே இருப்பார். 1877—ல் குடமுழுக்கு நடத்தி இரண்டு தங்கக் குடங்களை இக் கோயிலுக்கு வழங்கியவர். அன்னையின் பிரசாதத்தை மட்டுமே இரவு உணவாக உட்கொள்ளும் வழக்கம் உடையவர்.

ஒரு நாள் சொந்த வேலையாக மாட்டு வண்டியில் 30 மைலுக்கு அப்பால் உள்ள ஒரு ஊருக்குச் சென்றார். இரவில் அங்கேயே தங்க நேர்ந்தது. அன்னையின் பிரசாதம் கிடைக்காமையால் பலர் உணவு வழங்க விருப்பம் தெரிவித்தும் ஏற்காமல் பட்டினியாகப் படுத்து உறங்கினார்.

நள்ளிரவில் அழகிய பெண் குழந்தை ஒன்று தங்கத் தாம்பாளத்தில் அன்னையின் பிரசாதம் ஏந்தியவாறு வந்து நாகப்பரிடம் கொடுத்தது. பின் மறைந்தது.

அன்னையின் அருளாற்றலையும், தம் இருக்கும் இடம் தேடி வந்ததையும் நினைத்து நினைத்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து அரற்றுகின்றார். ''இனி இது போன்று அன்னைக்குத் தொல்லை கொடுக்க மாட்டேன்'' என உறுதிக் கொண்டு வைகறைப் பொழுதில் ஆலயத்தை அடைந்தார்.

அப்பொழுது ஆலயக் கருவறையில் முதல் நாள் வைத்துப் பூட்டப்பட்ட தங்கத் தாம்பாளத்தைக் காணவில்லை என்று தேடுகின்றார்கள். திருநாகப்பச் செட்டியார் நடந்த நிகழ்ச்சியைக் கூறித் தம்மிடமிருந்த தங்கத் தாம்பாளத்தை அர்ச்சகரிடம் கொடுத்தார்.

தாம் எடுத்துக்கொண்ட உறுதிப்படியே தம் மனைவி இறந்தபோதும்கூட மதுரையை விட்டுச் செல்லாமலே இருந்து மதுரை மண்ணுக்கே தம்முடைய உடலைச் சொந்தமாக்கினார்.

## முக்கிய விழாக்கள் :

இத்தகைய அருள்மிகு அன்னை மீனாட்சி அம்மனுக்குத் திங்கள்தோறும் வைரக்கிரீடம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

வெள்ளிக்கிழமை அம்மனுக்குரிய சிறப்பு நாளாகும். சுக்கிரவார அம்மன் ஊஞ்சல் மண்



டபத்திற்கு வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நலுங்கு பாட்டுப் பாடித் தீபாரதனை நடைபெற்ற பின் இந்த அம்மன் பள்ளியறை திரும்பும். சித்திரைத் திருவிழாவில் எட்டாம் நாள் மீனாட்சி அம்மனுக்குப் பட்டாபிஷேக விழா நடைபெறும். ஆறு கால் பீடங்களில் மீனாட்சி அம்மனுக்குக் கிரீடம் சாற்றிக் கையில் செங்கோல் கொடுத்த பின் ஆலயத் தக்கார் அல்லது அறங்காவலர்குழுத்தலைவர் அம்மனிடமிருந்து மேற்படி செங்கோலைப் பெற்று அனைத்து மரியாதைகளுடன் அம்மன் கோயிலிருந்து புறப்பட்டு சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம் வழியாக வலமாகக் கொண்டு வந்து மீண்டும் மீனாட்சி அம்மன் திருக்கரத்தில் சேர்ப்பார்.

மறுநாள் திக் விஜய விழாவும் பத்தாம் நாளில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண விழாவும் நிகழ்கின்றன.

இக்காட்சிகளைக் கண்டு களிக்க, இறையருள்பெற எண்ணற்ற மக்கள் கூட்டம் கடல் அலைப்போல் மோதும்.

## முடிவுரை:

ஏழை எளியவர்கள் குங்குமத்தைக் கொடுத்து அர்ச்சனை செய்து அன்னையை வணங்குகின்றனர். அஷ்டோத்ர சகஸ்ரநாம அர்ச்சனைகள் செய்து வழிபடுகின்றனர். அம்மனுக்கு மலர் மாலைகள் அணிவித்தும், பச்சைப் புடவையை அணிவித்தும் லட்சார்ச்சனையும் செய்து வணங்குகின்றனர். பால், இளநீர், பன்னீர், தேன், சந்தன அபிடேகங்களை செய்து அன்னையின் அருள் வேண்டி வழிபாடு செய்கின்றனர். பஞ்ச தீப ஆராதனை, தங்கக் கவசம் வைரக்கிரீடம் சாத்துபடி செய்தும்வழிபடுகின்றனர். உள்ளன்போடு நெஞ்ச கனகல் நெகிழ்ந்துருகி அன்னையை வழிபடுவோர்கள் வேண்டிய வேண்டியாங்கு பெறுகின்றனர். நாமும் அன்னையின் திருவடித் தாமரைகளைத் தொழுவோமாக !

— — — — —



# குருவின் பெருமை

ஸ்ரீ-ல-ஸ்ரீ மயிலை தவத்திரு
ஓம் சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

ராகம்: தர்பாரி கானடா — தாளம்: ஆதி

பல்லவி

எத்தனை எத்தனை குருவால்—நாம்
எத்தனை எத்தனை உயர்ந்தோம்
எத்தனை எத்தனை குருவால்
எத்தனை எத்தனை ஞானோதயம்.

அனுபல்லவி

அத்தனை அத்தனை குருவின் உபதேசம்
பித்தனை சித்தத்தில் இருத்திடுமே
இத்தனை இத்தனை குருவின் உபதேசம்
பித்தனை சித்தத்தில் இருத்திடுமே—அம்மை
அப்பனை இதயத்தில் இருத்திடுமே!
இத்தனை இத்தனை குருவின் உபதேசம்
பித்தனை சித்தத்தில் இருத்திடுமே—அம்மை
அப்பனின் திருவடி சேர்த்திடுமே (எத்தனை)

சரணம்—1

அமுதுதரும் அன்னை முதல் குரு
அறிவுதரும் தந்தை மறு குரு
கல்வி தரும் ஆசான் முறை குரு
அருள் தரும் ஆண்டவன்சிவகுரு (எத்தனை)

சரணம்—2.

சிறுவயதில் நால்வர் கற்பித்த அறிவே
வாழ்க்கைக்கு சிறந்த அஸ்திவாரம்
பெரியோர் நால்வர் கற்பித்த அறிவே
ஆன்மீக வாழ்வின் ஸ்திரவாரம் (எத்தனை)

சரணம் 3.

அறிந்தும் அறியாமல் எத்தனை குருவோ!
அத்தனை குருவால் எத்தனை உயர்வு
அத்தனை குருவாலும் உயர்த்தினன் சிவனே
வித்தக குருவாக வந்தவன் சிவனே (எத்தனை)

சரணம்-4

அறிய வேண்டியதை அறிவிப்பவரே குரு
நம்பிக்கையுடன் குரு சொல்படி நடந்து
குருவை நம்பியவர் இறைவனைக் காணலாம்
காசினியில் நாமும் குருவாக ஆகலாம்.
(எத்தனை)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் தமிழரசு அச்சகம் அரசினர் தோட்டம், சென்னை-600002.

*

குன்றத்தூரில்
தெய்வச் சேக்கிழார்
விழா மிகச் சிறப்பாக
நடைபெற்றது.
திருமிகு
A. M. சுவாமிநாதன்,
ஐ.ஏ.எஸ்., அவர்கள்
சிறப்புரை ஆற்றினார்கள்.
பேராசிரியர், டாக்டர்
தெ. ஞானசுந்தரம்,
டாக்டர்
த. அமிர்தலிங்கம்,
துணை ஆணையாளர்
திருமிகு
டீ. ஜெயராமன்,
துணை ஆணையாளர்
திருமிகு த. சுந்தரம்,
சேக்கிழார் கோயில்
நிர்வாக அதிகாரி
திரு தனபாலன்
ஆகியோர்
இவ்விழாவில்
கலந்து கொண்டார்கள்.

*









மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் திருமிகு சென்னா ரெட்டி அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைக்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சராக திருமிகு டாக்டர் மு. அம்ம முத்துப்பிள்ளை, எம்.பி.பி.எஸ்., எம்.எஸ். அவர்கள் பதவிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்கள்.